www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
පිටු/பக்கம் 20 ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
ஆக.11-17,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 165

## தாங்குமா நாடு?


## நெருங்கிவரும் மாபெரும் நெருக்கடி



## அச்சுறுத்தும் நச்சுச் சூழல்



## யுவராணியின் புதிய காதல்



## சினி விசிட்

## பூலான்தேவியின் உண்மைக்கதை

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## நிறைவேறாத நிபந்தனை

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

"ஆயுதங்களைக் கைவிட்டால்
புலிகளோடு பேசலாம்"
அமைச்சர் கதிர்காமர் கூறியிருக்கிறார்.

"ஆயுதங்களைக் கைவிட்டோமே!
-எம்மோடு என்ன பேசினீர்கள்?"
தமிழ் கட்சிகள் கேட்கின்றன.

"ஆயுதங்களையே தொடாதிருந்தோம்,
எங்கள் குரல் ஏறியதா செவியில்?"
-சாந்தமான கூட்டணி கேட்கிறது.

என்ன பதில் சொல்லப்போகிறார்
அமைச்சர் கதிர்காமர்?

காந்திகூட ஒரு
கைத்தடி வைத்திருந்தார்.
ஈழத்துக் காந்தி செல்வாவிடம்
கைத்தடிகூட இருக்கவில்லை.
நிராயுதபாணியாகவே நின்று
நியாயத்தை எடுத்துரைத்தார்.

எவர் கேட்டார்? எவர் ஏற்றார்?
தழும்புகள் பட்டபோதும்
அகிம்சைக் கொள்கையில் தளம்பவில்லை.
ஆனால் கிடைத்த பரிசு....?
அமோகமான ஏமாற்றம் மட்டும்!

கடந்த காலத்தைக் கிளறுவானேன்?
மறக்கலாம்; மன்னிக்கலாம்தான்;
ஆனால்-நிகழ்காலமும்
நேற்றைய நிகழ்வுகளின்
தொடர்ச்சியாகவும், வளர்ச்சியாகவும்
இருப்பதால் எப்படி மறப்பது?

"ஜனநாயக நீரோட்டத்தில்
கலக்க வாருங்கள்" என்று அழைத்துவிட்டு,
தமிழ் கட்சிகளுக்கும்
ஆயுதக் குழுக்கள் என்றுதானே
முத்திரை குத்தப்படுகிறது!

இதே தமிழ் கட்சிகளும்
வடக்கு-கிழக்கில்
அரசுக்கு எதிராக
ஆயுதம் ஏந்திய நிலையிலிருந்தால்
அதிக மரியாதை கிடைத்திருக்கலாம்?
என்றொரு நினைப்பு
எழுவதை தடுக்க
அவற்றின் கருத்துக்களாவது
கௌரவிக்கப்பட்டதா?

"ஆயுதங்களைக் கைவிட்ட கட்சிகள்
சாதித்துள்ள பலன்களைப் பாருங்கள்!

ஆயுதம் இல்லாவிட்டால்
பிரச்சனை தீராது என்பதை
பொய்யாக்கி விட்டோம்;
எனவே புலிகளும் வாருங்கள்!"
என்று நடைமுறையில்
நம்பிக்கையூட்டலாமல்லவா?

நம்பிக்கையீனங்கள்தான்
நட்புறவுக்கு தடைக் கற்கள்.
தேனொழுகும் பேச்சுக்கள்
செவிக்கு இனிமை தரலாம்;
நடைமுறைச் செயற்பாடுகள்தான்
நம்பிக்கையீனங்களை வேரறுக்கும்.

அரசாங்கம் அரசியல் தீர்வில்
உறுதி காட்ட வேண்டிய நேரம் இது.
தாம் வழங்கப்போவது
எத்தகைய தீர்வு என்பதை
வெளிப்படையாக்கத் துணிய வேண்டும்!

நம்பிக்கையூட்டும் தீர்வும்
நாணயமான நடைமுறைப்படுத்தலும்
சாத்தியமாக முடிந்தால்
ஆயுதங்களைக் கைவிடுமாறு
கோரும் அவசியமே எழாது.

ஆயுதத்தை வைத்திருப்பதற்கான
நியாயத்தைக் களையும்
நேர்மையான அரசியல் தீர்வுதான்
நாட்டின் பிணியைப் போக்கும்!

அதனைவிடுத்து,
நிறைவேறாத நிபந்தனைகள்
விதிப்பதும், வலியுறுத்துவதும்
காலத்திற்கேற்ற பணியுமாகாது;
நாட்டின் பிணியும் தீராது!

செல்வாக்குள்ள அமைச்சர்
என்ற வகையில்,
மாண்புமிகு அமைச்சரிடம்
நாம் நாடி நிற்பது-
காலத்துக்கேற்ற கடமையாற்ற
அரசாங்கத்திற்கு இடித்துரைப்பதையே!
நிறைவேறாத நிபந்தனைகளை
எடுத்துரைப்பதையல்ல!

●●●

பூலான்தேவி தொடருக்கு
உங்களிடமிருந்தெல்லாம்
அட்டகாசமான வரவேற்பு!
தகுந்த நேரத்தில்
தரப்படும் தொடர் அது!

முரசில் வெளியாகும்
பூலான்தேவி தொடர்,
பூலான்தேவியே எடுத்துரைத்த
உண்மைக் கதை.
அதனை தனது பாணியில்
தரும் பணி மட்டுமே ரசிகனுக்கு!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## கடன் கொடுத்தல்....

# ஆன்மீகம்



இன்றைய உலகில் மக்கள் கடன் வாங்குவதைப் பொதுவாக எங்கும் காணுகின்றோம். பணம் மட்டுமல்ல பொருளும் ஏனையவைகளையும் கூட. ஏன்-கடன்வாங்கிய அவயவங்களின் கருணையால் வாழ்கிறவர்களும் இருக்கிறார்களே! ஆனால்-

வேதாகமம் என்ன கூறுகுகின்றது என்று பாருங்கள்: "ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவருக்கும் கடன்படாதிருங்கள் பிறரிடத்தில் அன்பு கூருகிறவரின் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்"- (ரோமர் 13:8) எத்தனை பெரிய ஆன்மீக உண்மை என்பதை எண்ணிப் பார்த்தால் உணரலாம். அன்பைக் கடன் கொடுத்தால் நாம் என்றும் அலட்டிக்கொள்ளப் போவதில்லை. திருப்பித்தந்தால் உண்டு; தராவிட்டால் நாம் எதனையும் இழக்கமாட்டோம்.

ஆனால் பொருள் அல்லது பணம் கடன் கொடுத்தால் திருப்பித்தராவிட்டால் இழப்பு, இழப்புதானே; ஈடுசெய்ய முடியாதே! ஏன்? கடன் பட்டவர்கூட கலங்க வேண்டியுள்ளதே. 'கடன் பட்டார் நெஞ்சம் போல கலங்கினான்'... என்பது நாமறிந்ததுதானே!

தவிர்க்க முடியாத நிலையில் கடன் கொடுத்தாலும் வட்டி வாங்குவதுபற்றி சிந்திக்கவே கூடாது என்கிறது வேதம். ஆம், "உங்களுக்குள் சிறுமைப்பட்டிருக்கிற என் ஜனங்களில் ஒருவனுக்கு நீங்கள் பணம் கடனாகக் கொடுத்திருந்தால், வட்டி வாங்குகிறவர் போல் அவனிடத்தில் வட்டி வாங்க வேண்டாம்"- (யாத்: 22:25) இன்று ஒன்றுக்கு பத்து, ஒன்றுக்கு இருபது என்று வாங்குகிறவர்களைத் தாராளமாக காண்கின்றோமே.

நட்பு கெடுவதற்கும், அன்பு அழிவதற்கும் 'கடன்' காரணமாக அமைவதை இன்று சர்வசாதாரணமாக காணகின்றோம். ஆம்-

"துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தாமற் போகிறான்; நீதிமானோ இரங்கிக் கடன்கொடுக்கிறான்." (சங்கீதம்:37:21) சிந்தித்துப் பார்ப்போம். நாம் நீதிமான்களாய் வாழ்வதா துன்மார்க்கனாய் மாறுவதா? சிந்தித்து செயற்படுவோம்.

ஏ.பி.வி.கோமஸ்

## நாயக வாசகம்

1. கல்லார் வணக்கத்தைப் பார்க்கிலும் கற்றாரின் நித்திரை மேலானது.
2. எவ்மீது ஸலவாத்துச் சொல்லும்வரை எந்தத் துஆவிற்கும் அல்லாஹ்விற்குமிடையில் திரையில்லாமல் இல்லை. ஆனால் அதனைச் செய்தால் அந்தத் திரை கிழிந்து விடும். அந்தத் துஆ (அல்லாஹ்த ஆலாவிடம்) சென்று விடும். அவ்வாறு செய்யவில்லையானால் அந்தத் துஆ திரும்பிவிடும்.
3. ஈமான் என்பது இதயத்தால் அறிந்து, நாவால் உரைத்து, அவயவங்களால் செய்வது.
4. சுத்தமாக (வுழுவுடன்) இருந்துகொண்டு தூங்குபவர் வணங்கிக் கொண்டிருக்கிற நோன்பாளியைப் போலிருக்கிறார்.
5. மஸ்ஜிது பயபக்தியுள்ள ஒவ்வொருவருக்கும் வீடு.
6. தலைப்பாகையுடன் தொழுவது பத்து ஆயிரம் அதிக நன்மைகள்.
7. ஒவ்வொரு வஸ்துவிற்கும் ஓர் அடையாளமுண்டு. ஈமானுக்கு அடையாளம் தொழுகை.
8. தொழுகையை வேண்டுமென்றே விட்டவர் காபிராகிவிடுவார்.
9. ஜகாத்துக் கொடுக்கப்படாத பொருளில் நன்மை இல்லை.
10. ஸதக்காக் கொடுப்பதால் எந்தப் பொருளும் குறைந்துவிடாது.
11. அன்னிய ஸதிரீகளுக்கு ஸலாம் சொல்லாதீர்கள். அவர்கள் ஸலாம் சொன்னால் பதில் சொல்லுங்கள்.
12. விவாகம் செய்வது ஒரு ஸுன்னத்து.
13. ஈமானுக்கு அசல் மௌனம், நாவிற்கு பத்தினித்தனம் அவன் மௌனமாயிருப்பது.
14. நபிமார்களது சிரிப்பு புன்முறுவல்; ஷைத்தான்களது சிரிப்பு கலகலவென்று சிரித்தல்; அவர்களை அல்லாஹ் சபிப்பானாக.
15. பொறுமை சந்தோஷத்திற்குத் திறவுகோல்.

எல்.பாதிமா ரிஸ்கா சுலைமான், கொழும்பு-13.

# கவிதைப் போட்டி இல.162



இடம் உள்ளவரை
இடம்பிடித்துள்ள
வியக்கவைத்த
கவிதைகள்

## பரிசுக்குரிய கவிதை

### இழப்பு!

ஈன்றெடுத்த மக்களையும்
இழந்துவிட்டோம்-இம்மண்ணில்
கால் நடைதான் சொந்தமினிக்
காடு செல்லும் காலம் வரை!

இளையராஜா- ஆசிரியர் சதுக்கம்,
உவர்மலை, திருமலை.

### ஒளிபிறக்காதா?

இருளடைந்த பூமியிலே
இறுக நிற்கும் அமைதியின்மை
அருகியிங்கே அரும்பாதா
அனைவருக்கும் நல்வாழ்வு?
நெருங்கி நின்று தளர்வினிலும்
நிலை நோக்கும் தம்பதிகாள்!
கருமை நிலை மாறி-ஒளி
கலந்திடும் நாள் புரியவில்லை.

மல்லிகா பத்மநாதன்-டெமேரியா
குறுப், பசறை.

### இடம்பெயர்வு

வானந்தொடுந் தூரமென்ன, வயல் வரப்பென்ன
வேனல் என்ன வெளி என்ன, வெயில் என்ன, மழை என்ன
சாகும்வரை தொடர்ந்திடுவேன், சலனமேதுமுண்டோ
ஆனதுணை நீங்களுண்டு;
எங்கள் அகக்கண்ணில் வெளிச்சம் உண்டு!

திருமதி க.கதிரவேலு-கரப்பன் காடு, வவுனியா.

### கந்தா தா!

கால்நடை தனிலே- உன்
காலடி வருவோம்!
கதிர்காமக் கந்தா
சமாதானமும் தா!

அமுதா மகாலிங்கசிவம்-மட்/கல்லடி.

### வேடிக்கை

வாழத் துடித்தவரை
போர் என்ற விஷக்காற்று,
பூமிக்குள் மூடியது;
வாழ்ந்து முடித்தவரை,
வழி தெரியா குருடராக்கி,
வேடிக்கை பார்க்கிறது...!

நஸ்மியா பஹுர்தீன்- கொத்தான்
தீவு, புத்தளம்.

### தீராத இடர்

குன்றும் குழியும்
குறுகி வழி நடந்து
சென்று திரிவது
என்றும் தீராதோ?

யோ.ஹம்சானந்தி-
நெல்லியடி, கரவெட்டி.

### கனதூரமின்னுமுண்டோ?

பெற்றசெல்வமத்தனையும் பெரும் போரிலிழந்த பின்பும்
ஒற்றிணைந்த சதிபதி நாம் ஒரு கோலின் துணைகொண்டு
கண்பார்வையிழந்தாலும் கண்ணாடியணிந்திருந்து
கடைசி வழிதேடுகிறோம்- "கனதூரமின்னுமுண்டோ?"

கே. வைரமுத்து- பிரதான வீதி-வாழைச்சேனை.

### ஒளி வேண்டும்!

விழி ஒளி உள்ளோர் சிலர்க்கு
உள ஒளி கிட்டவில்லை;
உள ஒளி பெற்றோர் சிலர்க்கு
விழி ஒளி பொருட்டில்லை!

பீ.எம்.எம். அன்வர்-புதுத் தெரு,
வெலிகம.

### சாதனை!

நச்சுப் பாம்புகளின் நடுவினில்-
நாட்களை நகர்த்துவது சாதனையோ?
ஆயுதப் போருக்குள் அகப்பட்டு-பல
ஆண்டுகளைக் கழித்திட்ட சோடியிதன்
அதிசய வாழ்க்கைதான் சாதனையோ?

ரேணுகா நிபாய்தீன், ஏறாவூர்-02.

### எங்கே போவார்கள்?

பிறந்த நாட்டிலும் இன ஒதுக்கல்;
பெற்றவை வீட்டிலும் மனத்தாங்கல்;
அறுந்த வாழ்க்கையை வெறுத்துவிட்டு
அம்மையும் அப்பரும் போவதெங்கே?

ச. மகாலிங்கம்- வெலிமடை குரூப், வெலிமடை.

### புறப்பட்டுவிட்டோம்

யுத்தம் இல்லா பூமி தேடி
சத்தம் இன்றிச் செல்லுகின்றோம்
சேதம் இன்றிச் சென்று சேர்ந்தால்-வழிச்
சேதியெல்லாம் எழுதுகின்றோம்.

தி.ஹ.ச.ஜெத்தா-
மட்/மீராக்கேணி, ஏறாவூர்.

### காலம்

கோலூன்றும் காலத்தில்
மனையாளின் காலாகி,
தள்ளாத வயதினிலும்
தளராது நடை பயில்வாய்!
தாங்கி நிற்கத் தாயிருப்பாள்
கண்ணாகி வாழ்ந்திருப்பாள்!

ம.இ. லோஷன்-கொதான வீதி, தெகிவளை.

# கவிதைப் போட்டி இல-165



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 17.08.1996

—முகவரி—

கவிதைப் போட்டி இல.165 தினமுரசு வாரமலர்,
த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்) சாலை

முல்லைத்தீவு தாக்குதல் பற்றி விபரித்தமைக்கும், விஷேட இணைப்புக்கும் நன்றிகள்.

பி.ஆர்.அசோக்குமார், ஸ்டெம் ,: பொடில்,
டிக்கோயா.

இனிக்கும் முரசுக்கு, இனிய வாழ்த்துக்கள்! பிறக்கும் பொழுதே ஒருவன் கெட்டவனாக பிறப்பதில்லை. சூழ்நிலையே அவனை அவ்வாறு உருவாக்குகிறது. சூழ்நிலையினால் தான் கார்லோசும் கெட்டவனானான். உண்மையில் கார்லோஸ் நல்லவன். கார்லோஸ் தொடரை அழகாக சித்தரித்த ரசிகனுக்கு வாழ்த்துக்கள்.

மஞ்சு, ராஜா, ரவி, மகேந்திரன், சரளா,
சுந்தரி, மதி, தேன், ஜீவா, விஜி-மடுல்சீமை.

என் இனிய முரசே!

எக்ஸ்ரே ரிப்போட் 'தேன்கிண்ணம்' காதிலை பூ கந்தசாமியின் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் கற்பனை போன்றன பிரமாதம். அத்துடன் மனித வெடிகுண்டு கார்லோஸ் தொடர் வழங்கிய ரசிகனுக்கு பாராட்டுக்கள் கோடி.

ஹஸீனா ஷபா-அத், நிந்தவூர்-04.

அன்பின் முரசிற்கு,

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் முத்தானவை. அதிரடி கார்லோஸ் எம்மை அதிர வைத்து விட்டான். ரசிகனுக்கு எனது வாழ்த்துக்கள். காதிலை பூ கந்தசாமி அருமை. முரசே நீ சுமந்து வருபவை எல்லாம் சூப்பர். உனக்கு எனது வாழ்த்துக்கள்.

செல்வி.ரா.ராதா, செங்கலடி.

'பூலான் தேவியின்' உண்மை சம்பவம் வெகுஜோர்!!

நிஜ நிகழ்வொன்றை சுவைபட எமக்கு தொகுத்துத் தரும் ரசிகனுக்கு எங்களது பாராட்டுக்கள்.

கே.வின்சன்ட்-மங்கேஸ்வரன், கே.சுதர்சன்-
பூ.இதயரெத்தினம், வ்.திருச்செல்வம்- வ.ஜெகநாதன்,
சி.கிரிதரன்- செ.சிவா-திரேஸ்கரன், மட்/சத்துருக்கொண்டான்.

'மாறாத விதி' என்ற தலைப்பில் வந்த ஆசிரியரின் மடல் கொண்ட கருத்து பிரமாதம். உண்மைதான் 'பல்லுள்ள வரைதான் பாம்புக்கு மரியாதை' எனவே புரட்சி, போராட்டங்கள் என்றும் ஓயாத அலையாக' இருக்கட்டும். 'ரசிகன்' புதிய நடையில் தரும் 'இலக்கிய நயம்' சுவையாக உள்ளது. ம்.ம் நல்ல ருசி.

சரவணேஸ் டெமிசி, பத்மா டெமிசி, கலவானையூர்.

கொள்ளைராணி பூலான் தேவியை பற்றி சுவையான தகவல்களை தரும் முரசிற்கு என் நன்றிகள்

திருமதி. ராதா சிவபெருமாள், டவுன்சைட்
எஸ்டேட், வெலிமடை.



எனது அன்பிற்கினிய முரசே!

உனது அம்சங்கள் அனைத்தும் மன நிறைவை தருகின்றன. இவைவிட ரசிகன் தரும் கொள்ளைராணி பூலான் தேவியின் உண்மைக் கதை ஆரம்பமே அபாரம்! அடுத்த முரசை ஏங்கி எதிர்பார்க்க வைத்த ரசிகனே..., உனது முயற்சிக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள். தொடரட்டும் உனது பணி.

இரா.மோகன்ராஜ், பண்டாரவளை.

அன்பின் முரசிற்கு,

"அரசியல் தீர்வு சதுரங்க நடுவிலே, தமிழர் பலமோ பலவீன வடிவிலே" என்று நாரதர் அனைத்து தமிழ்மக்களும் ஆழ்ந்து சிந்தித்து செயலாற்ற வேண்டிய அரசியல் அதிகாரப் பகிர்வு, பரவலாக்கல் பற்றிய வித்தியாசங்களையும் நன்கு விளக்கியுள்ளார். தமிழ்மக்கள் ஒற்றையாட்சி முறைக்கு முற்று முழுதாக எதிர்க்கவேண்டும் என்றும் இந்த வகையில் தமிழ்க் கட்சிகள், தலைவர்கள் ஒன்றுபட்டு, ஒரே குரலில் செயல்பட்டு மக்களை வழிநடத்தி தமிழ் தாயக இலட்சியக் கோரிக்கையை நிறைவு செய்து தமிழ் இனம் வாழ்வாங்கு வாழவேண்டும் என்பது எல்லோரினது ஏகோபித்த பெருவிருப்பாகும். தர்மம், நியாயம் எப்போதும் வெல்லும் என்னும் நிலைப்பாடு பூரணமாக நிறைவேறுவது திண்ணம். வாழ்க தமிழ்.

என்.ஆர்.என்.தேவதாசன், தெகிவளை.

தேன்கொட்டும் முரசே!

நீ வாராவாரம் கொண்டு வரும் அம்சங்கள் ரொம்ப பிரமாதம். சென்ற வாரம் முதல் ரசிகன் எழுதும் "கொள்ளை ராணி பூலான் தேவி" வெகு ஜோர்.

ருஷ்தியா அஸாத், பேருவளை.

தெவிட்டாத தேன் முரசே,

நீ மணம் பரப்பிவரும் அனைத்து அம்சங்களும் சுவையோ சுவை. கார்லோசின் நிறைவு பகுதி வாசித்தபின் மனதில் ஓர் இனம் புரியா தாக்கம்.

கார்லோஸ் போன்றவன் இந்த நயவஞ்சக, நாபுரட்டும் உலகில் வாழ்வது ஒன்றும் குற்றமாக தெரியவில்லை, ஆனால்? அப்பாவிகளின் கொலைகள் கண்டிக்க கூடியதே.

எஸ்.வி.ஜெகதீசன், ஹுணுபிட்டி-வத்தளை.

உணர்ச்சிகரமான உண்மைக் காவியமாம் 'தாய்' நாவலை இதுவரை வாசிக்காதிருந்த வருத்தம் நீங்கிக் கொண்டு வருகின்றது. பாதுகாத்து வைக்க வேண்டிய அரிய பொக்கிஷமாம் 'தாய்' தரும் முரசுக்கு நன்றி; நன்றி.

எஸ்.பத்மா, உமாஜினி, நவ்சாத்,
கொழும்பு-10.

பாப்பா முரசில் வெளிவரும் சிறுகதைகள் எம்மைப் போன்ற சிறுவர்களுக்கு படிப்பினை ஊட்டுபவையாக அமைந்துள்ளன. மற்றும் வாரம் ஒரு நாடு, விஞ்ஞான விளக்கங்கள் சின்னஞ்சிறு செய்திகள் என்பன எமது கல்விக்கு மிகவும் பயனுள்ளவையாக அமைந்துள்ளன.

பி.நிரஞ்சன், இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு.

கொள்ளை ராணி பூலான்தேவி தொடர் கண்டு அடுத்த அத்தியாயம் எப்போ வரும் என்ற கவலைதான்! முதல் அங்கமே பயங்கரம். அப்பா அப்பப்பா எப்படி சேர் தேர்ந்தெடுத்தீங்க!

அந்த நாள் ஞாபகம் புகைப்படம் எமக்கு கிடைத்த வரப்பிரசாதமாக கருதுகின்றோம்.

மகேஸ்வரி ராமதாஸ், ஜெயந்தி மஹ்றால்,
வத்தேகம.


படிப்பகம்

www.padippakam.com

## புலிகள் உத்தியோகபூர்வ அழைப்பு

# அமெரிக்கா நடுநிலையோடு தலையிடலாம்

புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக அமெரிக்கா கண்டித்து வருவது ஒரு பக்கச் சார்பான நிலைப்பாடாகும் என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

இறுதியாக வன்னியில் வெளியான "விடுதலைப்புலிகள்" பத்திரிகையில் அமெரிக்க நிலைப்பாடு தொடர்பாக ஆசிரியர் தலையங்கம் தீட்டப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

"மனித உரிமை விவகாரம், உலகளாவிய ரீதியில் சமாதானம் என்ற கொள்கைகளை முன்வைத்து செயற்படும் அமெரிக்க அரசு, சிறீலங்கா-புலிகள் போர் நடவடிக்கை தொடர்பாக பக்கச் சார்பு நிலை எடுத்து தமிழரின் போராட்ட நடவடிக்கைகளை மட்டும் கண்டிக்க முயல்வது எமக்கு ஆழ்ந்த கவலை தருகிறது.

அமெரிக்கா கடைப்பிடிக்கும் இந்தத் தவறான நிலைப்பாட்டிற்குப் பிரதான காரணம் தமிழ், சிங்கள இன முரண்பாட்டின் வரலாற்றையும், அதன் ஆழ அகலங்களையும் சரிவர அறிந்து வைத்திருக்காததே ஆகும்.

பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என பல்வேறு தரப்பினரும் அரசை வலியுறுத்தும் இந்த நேரத்தில், இராணுவ முனைப்புக்கு ஆதரவும் உதவியும் நல்கும் விதமாக அமெரிக்க அரசு செயற்படுவது நல்லதல்ல.

இலங்கையின் இனப்பிரச்சனையில் அமெரிக்கா ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுப்பதற்கு வாய்ப்பு உண்டு. இந்த வகையில் இனப்பிரச்சனை விவகாரத்தில் சிறீலங்கா அரசுக்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டை அமெரிக்கா கைவிட வேண்டும். இரு பகுதியினருக்கும் இடையே நடுநிலையை கடைப் பிடித்து இனப்பிரச்சனையை அணுகவேண்டும்.

நடுநிலையுடனும், இராஜதந்திர ரீதியிலும் தமிழ்-சிங்கள இனப்பிரச்சனையை அணுகி இலங்கைத்தீவில் சமாதானச் சூழல் ஏற்பட அமெரிக்கா தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அதைவிடுத்து, சிறீலங்கா அரசின் போர் முனைப்பிற்கு அமெரிக்கா ஆதரவும், உதவியும் வழங்குவதென்பது தமிழ்-சிங்கள இன முரண்பாட்டை மேலும் சிக்கலாக்குவதுடன் போரும் விரிவாகவே வழி சமைத்துக் கொடுக்கும்.

ஆகவே, இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தில் அமெரிக்கா நிதானப்போக்கை கடைப்பிடித்து, இராஜதந்திர வழி முறைகள் மூலமாக சமாதானத்தீர்வை ஏற்படுத்த வேண்டும்." இவ்வாறு 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடொன்றின் நடுநிலையான தலையீடு தொடர்பாக புலிகள் உத்தியோக பூர்வ கருத்து வெளியிட்டிருப்பது இதுவே முதல் முறையாகும். ■

## வன்னிப் போருக்கான பலப்பரீட்சை கிளிநொச்சியில்!

# கிழக்கில் தாக்குதல் நடத்த புலிகள் முஸ்தீபு

## குடாநாட்டில் கெரில்லா தாக்குதல்கள் தீவிரமாகும்!

பரந்தனில் இருந்து கிளிநொச்சி நோக்கிய படையினரின் நடவடிக்கை புலிகளின் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டது. ஏற்கெனவே முரசு செய்தி வெளியிட்டிருந்தது போலவே, பரந்தனிலிருந்து கிளிநொச்சி நோக்கிய படை நகர்வு பாரிய எதிர்ப்பைச் சந்தித்தது. ஆனையிறவில் இருந்து பரந்தன் செல்வது படையினருக்கு சுலபமாக இருந்தது. பரந்தனில் இருந்து கிளிநொச்சி செல்லும் படை நகர்வுதான் கடினமாக இருந்தது. புலிகள் பாரிய எதிர்ப்பை காட்டியபோதும் படையினர் கிளிநொச்சி நகரை சென்றடைவதை தடுக்க முடியாதளவுக்கு கள நிலையும், படையினரின் பலமும் காணப்பட்டது.

பரந்தன் சந்தியிலிருந்து கிளிநொச்சி ஆறு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. ஆறு கிலோமீட்டர் தூரத்தைக் கடப்பதற்கு படையினருக்கு பலத்த சிரமத்தை ஏற்படுத்தியேயாக வேண்டும் என்ற திட்டத்தோடு புலிகள் பலத்த தாக்குதல்களில் ஈடுபட்டனர்.

### ஷெல்மழை

கிளிநொச்சி காட்டுப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த புலிகளின் அணிகள் அங்கிருந்து மோட்டார் ஷெல் தாக்குதல்களை சரமாரியாக மேற்கொண்டனர்.

முன்னேறும் படையினரின் பக்கவாட்டுப் பகுதிகளிலும் புலிகளின் அணிகள் தாக்குதல் நடத்தின. கவச வாகனங்கள் மற்றும் விமானப்படையினரின் உதவியுடன் தரைப் படையினர் புலிகளின் எதிர்த்தாக்குதலை முறியடிப்பதில் ஈடுபட்டனர்.

புலிகளின் அணிகளுக்கு பலத்த இழப்பை ஏற்படுத்தும் நோக்கத்தோடு படையினர் தாக்குதல் நடத்தினர். புலிகள் தமது தரப்பில் உயிரிழப்புக்களை குறைத்துக் கொள்ளும் வகையில் மோட்டார் தாக்குதலை பிரதான தாக்குதல் முறையாக மேற்கொண்டனர்.

இதுவரை தமக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றிய முழுவிபரங்களை புலிகள் வெளியிடவில்லை.


### கிழக்கில் தாக்குதல்

புலிகளின் பிரதான படையணிகள் முல்லைத்தீவில் நிலைகொண்டுள்ளன. முல்லை முகாம் தாக்குதலுக்காக கிழக்கு மாகாணத்தில் இருந்து வன்னிக்கு அழைக்கப்பட்ட புலிகளின் படையணிகள் மீண்டும் கிழக்குக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று ஒரு தகவல் தெரிவிக்கிறது.

கிழக்கில் பாரிய நடவடிக்கைகளில் ஈடுபடுவது மூலமாக படையினரின் கவனத்தை திசைதிருப்பவும், வன்னியில் படையினர் ஒன்று குவிவதைத் தடுக்கவும் புலிகள் முற்படலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

முல்லைத்தீவு பகுதி புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருப்பதால் கிளிநொச்சியில் இருந்து இடம்பெயரும் மக்களை அங்கு செல்லுமாறு புலிகள் கூறிவருகின்றனர்.

கிளிநொச்சிவரை முன்னேறுவதில் ஏற்படும் பலாபலன்களை வைத்தே வன்னியில் தமது நடவடிக்கைகளை தொடர்வது பற்றி படையினர் முடிவு செய்வர். எனவே, கிளிநொச்சிவரை சுலபமாக முன்னேற விடாமல் தடுப்பது மூலமாக தமது பலத்தை




காட்டும்வகையில் புலிகள் கடும் தாக்குதலை நடத்தவேண்டி ஏற்பட்டது

படையினரின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும், முன்னேறும் படையினரை தாமதப்படுத்துவது, இழப்புக்களை ஏற்படுத்துவது, பின்னர் நிலை கொண்ட படையினர்மீது தாக்குவது என்பதே கிளிநொச்சி களத்தில் புலிகளின் தந்திரோபாயமாகும்.

படையினரும் அதனை எதிர் பார்த்தே மெதுவான நகர்வை மேற்கொண்டு, தம் வசம் வந்த பகுதிகளில் நிலைகளைப் பலப் படுத்துவதிலும், புலிகள் மறைந்திருந்து தாக்கக்கூடிய மறைவிடங்களை நிர்மூலம் செய்வதிலும் ஈடுபட்டனர்.

கிளிநொச்சிப் பகுதி படையினர் வசம் சென்ற பின்னர் வன்னிப் பெரு நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பகுதி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலும், ஐந்தில் நான்கு பகுதி புலிகளின் கட்டுப்பாட்டிலும் இருக்கிறது.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஐந்தின் நான்கு பகுதியும் நீண்ட நில விஸ்தீரணம் கொண்டதாகும்.

வன்னி நிலப்பரப்பில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கிட்டத்தட்ட ஆறு இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். யாழ் குடாநாட்டில் நாலரை இலட்சம் மக்கள் வசிக்கின்றனர்.

எனவே வடபுலத்தில் தற்போது புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பெரு நிலப்பரப்பு நில விஸ்தீரணத்திலும், மக்கள் தொகையிலும் முக்கியமான பிரதேசமாக இருக்கிறது.

1035 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட யாழ் குடாநாட்டைவிட, 8885 சதுர கிலோமீட்டர் விஸ்தீரணம் கொண்ட வன்னிப் பெரு நிலபரப்பு தமக்குச் சாதகமானது; தமது போர் முறைக்கு ஏற்றது என்று புலிகள் கூறிவருகின்றனர்.

### குடாநாட்டில்

படையினர் கிளிநொச்சி களத்தில் இருக்கும்போது யாழ் குடாநாட்டில் கெரில்லாத் தாக்குதல்களை புலிகள் தீவிரப்படுத்த நினைத்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

படையினரும் அதனை எதிர்பார்த்து உஷார் நிலையில் உள்ளனர். யாழ் குடாநாட்டில் படையினருக்கும், புலிகளுக்கும் இடையே சிறியளவான மோதல்கள் தொடர்ந்து ஆங்காங்கே இடம்பெற்று வருகின்றன. ■

## மனிதக் குண்டுத் தாக்குதல்

## புலிகள் உரிமை கோரல்

யாழ்ப்பாணத்தில் ஜூலை 4ம் திகதி நடைபெற்ற மனிதக் குண்டுத் தாக்குதலுக்கு புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மீதான மனிதக்குண்டுத் தாக்குதலுக்கு புலிகளே காரணம் என்று நம்பப்பட்டது. எனினும் இதுவரை தனி நபர்கள்மீதான மனிதக் குண்டுத் தாக்குதல்களுக்கு புலிகள் உரிமை கோரியதில்லை.

இப்போது முதற்தடவையாக உரிமை கோரியுள்ளனர்.

ஸ்ரான்லி வீதியில் நடைபெற்ற மனிதக் குண்டுத் தாக்குதல் யாழ் குடாநாட்டில் சந்திரிக்கா அரசாங்கத்தின் நடவடிக்கை மீதான முதல் அடியாகும் என்று 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை தெரிவித்துள்ளது. 'புனருத்தான குழு' மீது மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல் தண்டனையாக மனிதக் குண்டுத் தாக்குதல் அமைந்துள்ளது என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ் குடாநாட்டில் புனர்வாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படக்கூடாது என்று யாழிலுள்ள அரசாங்க அதிகாரிகளிடம் புலிகள் கூறியிருப்பதாக முன்னர் முரசு செய்தி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## படையினருக்கு சம்பள உயர்வு

ஆயுதப் படையிலுள்ளவர்களுக்கு இடைக்கால சம்பள உயர்வு வழங்கப் படவுள்ளது. அவர்களுக்குரிய சம்பள உயர்வு முடிவாகும் வரை இவ்விடைக்காலப் படி வழங்கப்பட விருப்பதாகத் தெரிகிறது.

அதிகாரிகளுக்கு ரூ 3000 மும் போர் வீரர்களுக்கு ரூ 2000 மும் மேலதிகமாக வழங்கப்படும், வடக்குக்கிழக்கு மற்றும் அநுராதபுரம் ஆகிய இடங்களில் பணிபுரியும் படைவீரர்களுக்கு இம்மாதம் முதல் சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

## கேட்டது கிடைத்தது

சுமார் 55 ஆயிரம் மக்களின் சுகாதார நலன்களைக் கவனிக்க வேண்டிய செங்கலடி வைத்தியசாலைக்கு இதுவரை காலமும் அம்பியூலன்ஸ் வசதி இல்லாதிருந்த பெருங் குறை இப்பொழுது நீங்கியுள்ளது. சுகாதரத் திணைக்களத்தினால் சமீபத்தில் அம்பியூலன்ஸ் வாகனம் ஒன்று இவ்வைத்திய சாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் இனிமேல் அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளையும் மற்றும் ஆபத்து நிலையிலுள்ள நோயாளிகளையும் மட்டக்களப்புப் பொதுவைத்தியசாலைக்கு உடனடியாகவே கொண்டு செல்ல வழியேற்பட்டுள்ளது.

## மலையக மக்கள் முன்னணி கலந்துகொள்ள முடிவு

ஆகஸ்ட் 9ம் திகதி மலையகத்தில் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி நடத்தும் வேலை நிறுத்தத்தில் மலையக மக்கள் முன்னணியும் கலந்து கொள்கிறது. அதன் தலைவரும், பிரதியமைச்சருமான பெ.சந்திர சேகரன் விடுத்துள்ள அறிக்கையொன்றில் அதனைத் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தோட்டத்தொழிலாளர்களுக்கு வழங்கத்தவறிய 8/00 ரூபா சம்பள உயர்வை வழங்குவதன்மூலம் தொழிலாளர்களின் ஒருநாள் சம்பளத்தை 80/00 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென்ற கோரிக்கையோடு கடந்த ஏப்ரல் மாத்தில் வேலைநிறுத்தம் தொடங்கப் பட்டது.

சம்பள உயர்வுக்கான போராட்டத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்னதாக அறிவித்தபோது சகல தொழிற்சங்கங்களும் போராட்டத்தில் வந்து இணைந்து கொண்டன.

ஆனால் அதற்குப்பின் ஏற்படுகின்ற எந்த நடவடிக்கைகளிலும் இத்தொழிற் சங்கங்களையும் இணைத்துக்கொள்ளாததோடுதான் எடுக்கும் முடிவினை திணிக்க முயல்வது ஜனநாயக பண்புகளுக்கு அப்பாற்பட்ட அநீதியாகும்.

எதிர்வரும் ஒன்றரை வருடங்களுக்கு தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு தேவையில்லை என்பதான ஒப்பந்தம் தொழிலாளர்களை உயிரோடு பலிகொடுக்கின்ற முயற்சியாகவே முடியும்.

அதுமட்டுமல்லாமல் குறிப்பிட்ட இரு தொழிற்சங்கங்கள் ஆறு இலட்சம் தோட்டத் தொழிலாளர்களின் தலை விதியை தன்னிச்சையாக தீர்மானிப்பதற்கு அவர்களுக்கு எந்த தார்மீக உரிமையும் இருக்க முடியாது.

எனவே இதற்கு எதிராக கண்டனம் தெரிவிப்பதோடு நின்றுவிடாது, இதனை தடுத்து நிறுத்துவதற்காக, செயலில் இறங்க வேண்டிய பொறுப்பு சகல அமைப்புகளுக்கும் உரியதாகின்றது என்று தெரிவித்துள்ளார். ●

## "முதன்முதலாக விடுவிப்பு"

முல்லைத்தீவு முகாம் தாக்குதலின் பின்னர் புலிகள் வெளியிட்ட செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

"தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் ஒரு மாவட்டம் முழுமையாக விடுவிக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும். முல்லைத்தீவு மாவட்டம் முழுமையாக புலிகளால் விடுவிக்கப்பட்டமை முக்கியமான விடயமாகும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வன்னி ஆலயங்களில் பிரார்த்தனை

வன்னிப்பகுதியில் உள்ள மத வழிபாட்டுத் தலங்களில் காயமடைந்த புலிகளின் உறுப்பினர்களுக்காக பிரார்த்தனைகள் நடைபெற்றன.

முல்லைச் சமரில் புலிகள் தரப்பில் பலியானவர்களைவிட காயமடைந்தோர் எண்ணிக்கை அதிகம் என்று தெரிகிறது.

காயமடைந்த உறுப்பினர்கள் விரைவில் குணமடையவும், பலியான உறுப்பினர்களின் ஆத்மா சாந்தியடையவுமே பிரார்த்தனைகள் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

## படைவீரர்களின் உறவினர்கள் அங்கலாய்ப்பு!

## இரு தரப்பிடமும் தகவல் தேடிக்காத்திருப்பு!

முல்லைத்தீவு இராணுவத்தளம் மீது எல்.ரி.ரி.ஈ.யினர் மேற்கொண்ட தாக்குதலின் விளைவாக ஏற்பட்டுள்ள உயிரிழப்புக்கள் பற்றிய உண்மையான தகவல்கள் தெரியாதமையினால், தாக்குதல் சமயத்தில் அம்முகாமிலிருந்த படைவீரர்கள், பொலிசார் ஆகியோரின் உறவினர்கள் தாங்கொணாத்துயருடன் தடுமாறுவதாக தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

தங்கள் பிள்ளைகள் உயிருடன் திரும்பி வர அருள் புரியுமாறு, பௌத்த ஆலயங்களிலும் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் இந்துக் கோவில்களிலும் நூற்றுக்கணக்கான மக்கள் பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகிறது. இவ்வாறு கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

முகாம் தாக்குதலுக்குள்ளானபோது அங்கு ஆயிரக்கணக்கில் படைவீரர்கள் இருந்ததாக அறிவிக்கப்படுகிறது. அம்முகாம் முற்று முழுதாக அழிக்கப்பட்டுவிட்டதாகவும் உயிரிழந்தவர்கள் போக, எல்.ரி.ரி.ஈ.யினரால் கைது செய்யப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் போன்றோரின் விபரங்களும் இதுவரை திட்டவட்டமாகத் தெரிவிக்கப்படவில்லை.

முகாமிலிருந்த வீரர்களுக்கு உதவு முகமாக விமானம், ஹெலிக்கொப்டர் மற்றும் கப்பல்கள் மூலமெல்லாம் அனுப்பிவைக்கப் பட்ட துருப்புகளும் எல்.ரி.ரி.ஈ.யினரின் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளனர்.

தங்கள் பிள்ளைகளின் விபரங்களை அறிவதில் ஆர்வம் கொண்ட பல பெற்றார் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை அணுகி விபரங்களை அறிய விளைகின்றனர். ஆனால் அவர்களிடமும் எதுவித விபரமும் கிடைக்கவில்லை. இறந்த படைவீரர்களின் விபரங்களை இராணுவத் தலைமையகத்திடம் செஞ்சிலுவைச் சங்கம் கோரியபோதும் இதுவரை பதில் கிடைக்கவில்லை என்று பிரதித்தலைவர் மார்க் வெய்ல் தெரிவித்தார்.

எல்.ரி.ரி.ஈ.யினரிடம் கைதானோர் விபரங்களைக் கோரியும் அவ்வியக்கத்திடம் கேட்டுக்கொண்டதற்கும் தக்க பதில் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார். ஆழ்ந்த துயரத்துடன் தங்களை நாடிவரும் படைவீரர்களின் உறவினருக்குத் தகுந்த பதிலளிக்க தங்களால் முடியாதிருப்பதாகவும் திரு.வெய்ல் கூறினார். ●

## அபிவிருத்தி வேலைகளுக்குத் தடை!

## மட்டக்களப்பு மாவட்ட பிரிகேடியர் உத்தரவு!

(ஏறாவூர் நிருபர்)

படையினரின் கட்டுப்பாட்டிலில்லாத மட்டக்களப்பு-பதுளை வீதிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை இடைநிறுத்தி வைக்குமாறு மாவட்ட பிரிகேடியர் அறிவித்துள்ளதாக ஏறாவூர்ப்பற்று செங்கலடிப் பிரதேச செயலாளர் திரு.என். ஸ்ரீசங்கர் தெரிவிக்கிறார்.

இவ்வறிவித்தலின் பிரகாரம் பதுளை வீதிப் பகுதிக்கான அபிவிருத்தித் திட்டங்கள் இடைநிறுத்தப்பட்டால் ஏற்கனவே மிகப் பின்தங்கிய நிலையிலுள்ள அப்பகுதி மக்களின் வாழ்க்கை நிலை மேலும் பின் தள்ளப்படும். எனவே இது விடயமாக மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராக இருந்துவரும் தபால் தந்தி தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சர் ஜனாப் M.I.A.M. ஹிஸ்புல்லா அவர்களுக்கும், மாவட்ட அபிவிருத்திக் குழுவிற்கும், மாவட்டச் செயலாளருக்கும், மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய அதிகாரிகளுக்கும் தான் அறிவிக்கவிருப்பதாக பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.

படையினரின் கட்டுப்பாட்டிலில்லாத வாகரைப் பகுதியில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு அரசு எந்தவித தடையையும் விதிக்கவில்லையென்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

செங்கலடிப் பிரதேச செயலாளர், கொம்மாதுறைப் படைமுகாமின் இணைப்பதிகாரியிடம், பதுளை வீதிப் பகுதிக்குச் சென்று பொருட்களை ஏற்றிவர வாகனங்களுக்கு இருந்த தடை குறித்து விளக்கியதன் பயனாகத் தற்சமயம் மாவட்ட பிரிகேடியரின் அனுமதியுடன் உழவு இயந்திரங்கள் மாத்திரம் அப்பகுதிக்குச் சென்று வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது சிறு போக அறுவடைக் காலமாகையால் விவசாயிகளைக் கருத்திற் கொண்டே இவ்வனுமதி வழங்கப்பட்டுள்ளது. நெல் ஏற்றிவரும் விவசாயிகள் பெரும்பாக உத்தியோகத்தர் ஊடாக மாவட்ட பிரிகேடியரிடமிருந்து அனுமதி பெறவேண்டும். அவ்வனுமதி வாரத்தில் இரு தினங்கள் மாத்திரமே வழங்கப்படும்.

## இடம்பெயர்ந்தோருக்கு தங்க இடமில்லை

கிளிநொச்சியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருப்பதற்கான இடங்கள் இல்லாமல் தவிக்கின்றனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

காட்டுப் பகுதிகளிலும், வீதியோரங்களிலும், மர நிழல்களிலும் மக்கள் ஒதுங்கியுள்ளனர்.

உணவுநிலையும் மோசமடைந்துள்ளது. குடிதண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வன்னியில் உணவு நிலை மோசமடைந்துள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் கணேஷ் தெரிவித்திருக்கிறார்.

முல்லைத்தீவு முகாம் தாக்குதல்- 'சத்ய ஜெய' நடவடிக்கைகள் காரணமாக வன்னியில் உணவு விநியோகத்தில் சீரற்ற நிலை தோன்றியது.

கிளிநொச்சி போர்க்களமாக மாறியதால் கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர் என்று கூறப்படுகிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஊழியர்களும் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

மக்கள் முன்கூட்டியே இடம்பெயர்ந்து சென்றதால் பாரிய இழப்புக்கள் தவிர்க்கப் பட்டுள்ளன.

யாழ் குடாநாட்டில் இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு தங்கள் வீடுகளில் தங்க இடமளித்திருந்தனர் கிளிநொச்சி மக்கள். இப்போது கிளிநொச்சி மக்களும் இடம் பெயர்ந்து தங்க இடம் தேடுகின்றனர்.

கிளிநொச்சி வைத்தியசாலை மூடப்பட்டு விட்டதால் மருத்துவ சேவையிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ■


படிப்பகம்

# சின்னம்மாவின் எதிரிகளுக்கு இடமில்லை!
# ஜெயலலிதாவின் அதிரடி நடவடிக்கை

எம்.ஜி.ஆர். உருவாக்கிய கட்சியை தன்னால் முடியுமானவரை அழித்தொழிப்பதில் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறார் ஜெயலலிதா.

ஜெயலலிதா தேர்தலின் பின்னர் திருந்துவார்; தேர்தல் தோல்விகளில் இருந்து படிப்பினை பெற்றுக்கொள்வார் என்று எதிர்பார்த்தவர்களுக்கு பலத்த ஏமாற்றமே கிடைத்திருக்கிறது.

"தேர்தல் தோல்விக்கு கள்ள வாக்குகளே காரணம். தேர்தல் ஆணையாளர் சேஷன் சதி செய்துவிட்டார்" என்று முன்னர் குற்றம் சாட்டியிருந்தார் ஜெயலலிதா.

அதன்பின்னர் அமைச்சர்களும், கட்சியில் முக்கிய பிரமுகர்களும்தான் தோல்விக்கு காரணம் என்று சொன்னார்.

இப்போது புதிதாக ஒரு காரணம் கண்டுபிடித்திருக்கிறார்.

"கட்சித் தொண்டர்கள் சரியாகப் பணியாற்றவில்லை. அதனால்தான் தோற்று விட்டோம்" என்று ஒரு குண்டைத்தூக்கிப் போட்டிருக்கிறார்.

**தூண்டியது எது?**

கட்சித் தொண்டர்கள்மீதே குற்றம் சாட்டும் அளவுக்கு ஜெயலலிதாவை தூண்டி விட்டது எது?

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள சசிகலா எதிர்ப்புக் குரல்தான் ஜெயலலிதாவை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

"சசிகலாவை வெளியேற்றுங்கள்" என்று கட்சிக்குள் மூத்த தலைவர்களே குரல் கொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

சசிகலாவை சின்னம்மா என்று அழைத்துத்திரிந்த கண்ணப்பன், எஸ்.டி.சோமசுந்தரம் போன்றவர்கள்கூட சசிகலா எதிர்ப்பாளர்களாக மாறியதால் கொதித்துப் போயிருக்கிறார் ஜெயலலிதா.

முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் சசிகலாவின் அன்புக்கு பாத்திரமாக இருந்தவர். அதனால் 'தளபதி' என்றும் கட்சிக்காரர்களால் அழைக்கப்பட்டவர்.

பொதுப்பணித்துறை மற்றும் மின்சாரத் துறை என்று முக்கிய பொறுப்புக்களை அவரை நம்பியும், சசிகலாவின் சிபாரிசு காரணமாகவும் அவரிடம் கொடுத்திருந்தார் ஜெயலலிதா.

கண்ணப்பன் கோடி கோடியாக சுருட்டினார். நடிகை சுகன்யாவுக்கு மட்டுமே அவர் கொடுத்த சின்னப் பரிசான பங்களாவின் பெறுமதி பல கோடி ரூபாய்கள்.

அதே சுகன்யாவை வைத்துத்தான் காங்கிரஸ் கூட்டணிக்காக நரசிம்மராவின் மகனுக்கு வலைவிரிக்கப்பட்டது.

ஆட்சியில் இருந்த காலம் முழுக்க சசிகலாவின் விசுவாசிகளாக இருந்த கண்ணப்பன், எஸ்.டி.சோமசுந்தரம் போன்றவர்கள் ஆட்சி போனதும் சசிகலா எதிர்ப்பாளர்களாக மாறி விட்டதுதான் ஜெயலலிதாவுக்கு பயங்கர அதிர்ச்சியாகிவிட்டது.

**எஸ்.டி.எஸ்.**

எஸ்.டி.எஸ். என்று அழைக்கப்படும் சோமசுந்தரம் பழம்பெரும் அரசியல்வாதி. எம்.ஜி.ஆர் காலத்தில் ஜெயலலிதாவுக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் எதிர்ப்புக் குரல் கொடுத்தவர் எஸ்.டி.எஸ். பின்னர் எம்.ஜி.ஆரையே எதிர்த்து 'நமது கழகம்' என்று தனிக்கட்சி தொடங்கியவர்.

அந்த எஸ்.டி.எஸ். பின்னர் எப்படி ஜெயலலிதா-சசிகலா ஆகியோரின் எடுபிடியாக மாறினார் என்பதே பெரும் ஆச்சரியம்தான்.



தற்போது சிறையில் உள்ள எஸ்.டி.எஸ் சசிகலாவை வெளியேற்றுங்கள் என்று ஜெயலலிதாவுக்கு கடிதம் எழுதினார்.

ஜெயலலிதா எஸ்.டி.எஸ்ஸையே கட்சியை விட்டு வெளியேற்றிவிட்டார். கண்ணப்பனையும் கல்தா கொடுத்து அனுப்பிவிட்டார்.

கடந்த தேர்தலில் ஜெயலலிதாவுடன் இரவு பகலாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டவர் முன்னாள் அமைச்சர் முத்துச்சாமி. பாவம் அவரும் ஓரம் கட்டப்பட்டார்.

"சசிகலா எதிர்ப்பாளர்கள் என்றால் யார் எவராக இருந்தாலும் தூக்கி எறிந்து விடுவேன்" என்பதை சொல்லாமல் செய்து காட்டுகிறார் ஜெயா.

**என்ன உறவு?**

"தேர்தலில் ஒருவர் தோல்வியடைந்தால் அவரது மனைவியை வீட்டைவிட்டு வெளியேற்றுமாறு கேட்கமுடியுமா?" என்று ஜெயலலிதா கேட்டார் பாருங்கள் ஒரு கேள்வி.

கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட ஒரு பிரமுகர் கேட்கிறார்: "அப்படியானால் ஜெயலலிதாவுக்கு சசிகலா என்ன உறவு முறை?"

ஜெயலலிதாவின் பிடிவாதமும், தனிப்பட்ட வாழ்க்கைச் சிக்கலும் எம்.ஜி.ஆர். உருவாக்கிய கட்சியை தரைமட்டமாக்கிக் கொண்டிருக்கிறது.

அ.தி.மு.க. தொண்டர்கள் பலர் தி.மு.க.விலும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியிலும் சேர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

தி.மு.க.வும் புத்திசாலித்தனமாக விளையாடுகிறது.

கோடி கோடியாக சுருட்டிய கண்ணப்பன் போன்றோரை விட்டுவிட்டு, ஜெயலலிதா அணியில் உள்ள முன்னாள் அமைச்சர்கள் மீதுதான் ஊழல், மோசடி விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இந்திரகுமாரிமீது வழக்குப்போட்டு சிறையில் போட்டார்கள். அதன் பின்னர் ஜெயலலிதாவை எதிர்த்து அறிக்கைவிட்டிருக்கிறார் இந்திரகுமாரி.

ஜெயலலிதாவுக்கு எதிரிகள் தனது நண்பர்கள் என்றளவில் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறது தி.மு.க.ஆட்சி.

அது மட்டுமல்ல, அ.தி.மு.க. ஆட்சியில் அடாவடித்தனம் செய்த சிலரையும் தி.மு.க.வில் சேர்த்துக்கொண்டுள்ளார்கள்.

**தி.மு.க.வின் நோக்கம்?**

தி.மு.க.வின் நோக்கம் ஊழலை ஒழிப்பதா, அல்லது அ.தி.மு.க.வை ஒழிப்பதா? பின்னதுதான் நோக்கம். அதுதான் அரசியல்.

அ.தி.மு.க. ஆட்சிக்கு பல கோடிகள் வாரிவழங்கிய தொழிலதிபர்கள் இப்போது தி.மு.க.பக்கம் சென்றுள்ளார்கள். வாரியணைத்துக் கொண்டிருக்கிறது தி.மு.க. ஆட்சி.

ஜெயலலிதாமீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஜெயலலிதாமீதான அனுதாபமாக மாறிவிடாமல் மிகக் கவனமாகக் காய்களை நகர்த்துகிறார் கலைஞர்.

இதற்கிடையே ரஜினி ரசிகர்களின் ஆதரவுடன் தமிழ் மாநில காங்கிரஸ் புதிய சக்தியாக வளர்ந்துவருகிறது.

தி.மு.க. ஆட்சிமீதும் மெல்ல மெல்ல முணுமுணுப்புக்கள் எழத் தொடங்கியுள்ளன.

இந்நிலையில் தமிழ் மாநில காங்கிரஸ் நம்பிக்கையோடு உறுப்பினர் திரட்டலில் ஈடுபட்டுள்ளது.

ஊழலற்ற ஆட்சி பற்றிப் பேசியவர் கலைஞர். தற்போது தி.மு.க. அமைச்சர்களுக்கு கை அரிக்கத் தொடங்கிவிட்டது.

அதற்கு ஒரு உதாரணம்: நகராட்சி மன்ற அதிகாரி ஒருவர் தனது இடமாற்றத்துக்காக பல இலட்சங்களை தள்ளினார். உடனே காரியம் நடந்துவிட்டது. 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதமோ?'

# வீதி அபிவிருத்தி வேலையில் சுருட்டல்
# ஒப்பந்தக்காரர் பையில் ஒதுக்கிய பணம்!

(திருமலை நிருபர்)

"வீதி அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட பணம் ஒப்பந்தக்காரரின் வீட்டு அபிவிருத்திக்காக கொண்டு செல்லப்படுகிறதா?" இவ்வாறு கேட்டுக் குமுறுகிறார்கள் மூதூர்-கங்குவேலி கிராமத்தைச் சேர்ந்த மக்கள்.

எல்லைக் கிராமம் என அழைக்கப்படும் இக் கிராமத்துக்கு அடுத்துள்ள மல்லிகைத்தீவு மூன்று கிலோமீட்டர் தொலைவுடையது. வாய்க்கால்சேனை என்றழைக்கப்படும் வயல் வெளியூடாக பாரம்பரிய பாதையொன்றே இரு கிராமங்களையும் இணைக்கிறது. இந்தப் பாதை தூர்ந்து போய் மாரிகாலங்களில் பல இடங்களில் இடுப்பளவு நீர்பாய்கிறது.

இந்த வீதியை மக்களின் நீண்ட காலக் கோரிக்கையின் பின் ஒதுக்கப்பட்ட பணத்தைக் கொண்டு- திருத்துவதற்காகப் பொறுப்பெடுத்த நபரே இவ்வாறு சுருட்டியிருப்பது கண்டு மக்கள் ஆத்திரமடைந்துள்ளனர்.

இருபது அடி அகலத்துக்கு இரண்டு அடி உயரக் களிமண் போட்டு, அதன் மேல் அரை அடி உயர கிறவல்போட்டு இரு மருங்கிலும் வாய்க்கால் வெட்டி, வேண்டிய இடங்களுக்கு மதகுகள் அமைத்து மூன்று கிலோ மீட்டருக்குத் திருத்தம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தில், பதினான்கு அடி அகலத்துக்கு அரை அடிக் களிமண் போட்டு அதன் மேல் கிறவல் தூவும் பணியில் ஈடுபட்டிருக்கிறாராம் இந்தக் கொந்தராத்துக்காரர்.

வீதி அபிவிருத்தி திணைக்கள ஊழியர் ஒருவரே இவ்வேலையைப் பொறுப்பேற்றுச் செய்வதால், அவரின் சுருட்டல்களுக்கு மேற்படி திணைக்களமும் ஒத்துப் போய் விடுமோ என்று கங்குவேலி மக்கள் பயப்படுகின்றார்கள்.

இந்த மோசடிக் கொந்தராத்து சம்பந்தமாக இளைஞர்கள் சிலர் தங்கத்துரை பா. உவுக்கும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுக்கும் தங்களது கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

# பாவனைக்கு உதவாத பஸ் வண்டிகள்

(மன்னார் நிருபர்)

மன்னார் இ.பொ ச. சாலையினால் சேவையிலீடுபடுத்தப்படும் சில பஸ்கள் பயணத்தின் இடை நடுவில் மூச்சை நிறுத்திக் கொள்கின்றன.

மிகப் பழமை வாய்ந்த பஸ்கள் சேவையில் ஈடுபட்டிருப்பதே இதற்கான காரணமாகும்.

இந்த பஸ் டிப்போவில் சுமார் 10 பஸ்கள் உள்ளன. மன்னாரிலிருந்து 6 இடங்களுக்கு சேவைகள் நடைபெற்ற போதிலும் போதியளவு பஸ்கள் இல்லை.

சாலைப் பொறியியல் பிரிவு தினமும் சுறுசுறுப்புடன் இயங்குவதால்தான் இந்த பஸ்கள் வீதியில் ஓடுகின்றன. இல்லையேல் இவைகள் எப்போதோ கட்டையில் ஏற்றப்பட்டிருக்கும்.

சில பஸ்கள் மன்னார் பஸ்நிலையத்தில் மேடான இடத்தில் நிறுத்தப்படுகின்றன. தள்ளி "ஸ்ராட்" செய்வதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை தற்போது இந்த டிப்போவில் சாரதிகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. முன்னர் நடத்துனர்களுக்கிருந்த தட்டுப்பாடு தற்போது ஓரளவு நீங்கியுள்ளது.

# ஆஸ்பத்திரிக்கு அம்பியூலன்ஸ் வாகனம்!

(ஏறாவூர் நிருபர்)

சுமார் 55 ஆயிரம் மக்களின் சுகாதார நலன்களைக் கவனிக்க வேண்டிய செங்கலடி வைத்தியசாலைக்கு இதுவரை காலமும் அம்பியூலன்ஸ் வசதி இல்லாதிருந்த பெருங்குறை இப்பொழுது நீங்கியுள்ளது. சுகாதாரத் திணைக்களத்தினால் சமீபத்தில் அம்பியூலன்ஸ் வாகனம் ஒன்று இவ்வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் இனிமேல் அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளையும் மற்றும் ஆபத்து நிலையிலுள்ள நோயாளிகளையும் மட்டக்களப்புப் பொது வைத்தியசாலைக்கு உடனடியாகவே கொண்டு செல்ல வழியேற்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலைக்கு அம்பியூலன்ஸ் வாகனம் இருக்க வேண்டியதன் அவசியத்தையும், மற்றுமுள்ள தேவைப்பாடுகளையும் நீக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரத் திணைக்களத்தை வைத்தியர் திரு.ரி.சுத்தானந்தம் அடிக்கடி கேட்டிருந்தார். தினமுரசுப் பத்திரிகையும் செங்கலடி வைத்தியசாலையின் தேவைகள் குறித்துச் செய்தி வெளியிட்டிருந்தது. இத்தேவைகளை நிறைவு செய்வதற்குப் பாடுபட்ட வைத்தியர் அவர்களுக்கும் செய்தி வெளியிட்ட "முரசு"வுக்கும் மக்கள் நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கிறார்கள்.


## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 195/=,105/=
தங்க பஸ்பம் கலந்தது 990/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 890/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

## காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S. மணி**

மூலம் அறிய வாருங்கள்
சந்திரன்
144 2/1, காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6
T.P : 586218, 078-63611
Fax : 503030

## Bright ன் தபால் மூலம் கல்வித்திட்டம்

மூன்றே மாதங்களில் ஆங்கிலம்/ சிங்களம் பேச, எழுத, வாசிக்க கற்றுத் தரப்படும் விபரங்களுக்கு கீழ்க்காணும் விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க.

பெயர்..............................
விலாசம்..............................

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
S-27, FIRST FLOOR, P.O.BOX 162,
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX
COLOMBO 11. TEL : 434770

## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHIATRIST)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்த, கனவில் சக்தியிழந்த, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

ஆகஸ்ட் **18** முதல் **31** வரை **Dr.P. ARUMUGAM,** AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 Fax : 436439 செப்டம்பர் 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஒட்டமாவடியிலும், ஒகஸ்ட் 11,12,13 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் **DR. P. ARUMUGAM** No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD. BATTICALOAவிலும் சந்திக்கலாம்.


## தேவை

கீழ்வரும் இடங்களுக்கு தினமுரசு விற்பனை முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். **விண்ணப்பிக்கவும்**

| | | | |
|---|---|---|---|
| Kahatagasdigiliya | Hakmana | Ragama | Ampara |
| Dambadeniya | Polgahawala | Welikanda | Kegalle |
| Deraniyagala | Nivitigala | Akurana | Akuressa |


## என்றும் சந்திக்கலாம்

எங்களது வாடிக்கையாளர்களின் வீண் சிரமத்தையும் அலைச்சலையும் கருத்தில் கொண்டு திரு. P.K. சாமி அவர்களிடம் நுவரெலியாவிலும் கொழும்பிலும் வரும் வாடிக்கையாளர்கள் நேரடியாக அவரவர் பிரச்சனைகளைக் கூறி தீர்வுக்கான புதுமுறையாக செட்லைட் நெட்வேர்க், T.V. மூலம் திரு.P.K. சாமியுடம் கலந்துரையாடலாம்.



தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772,
கொழும்பு.


## விளம்பரப் பகுதி


## மலையாள மாந்திரீகம்





நம்பினார் கெடுவதில்லை என்ற நற்பெயரை 33 வருடமாக தன்னகத்தே கொண்டுள்ள எமது நிறுவனம் என்றென்றும் நற்பெயரை பெற்றுள்ளது. என்னையும் எமது நிறுவனத்தையும் நம்பி பணம் அனுப்பி வைப்போருக்கு அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவே செயல்படுகிறோம். வாடிக்கையாளர்களை கண்ட மாத்திரம், "இதுவே உங்கள் பிரச்சினை" என திட்டவட்டமாக என்னால் கூறமுடியும். இதையொட்டியே மக்கள் கூட்டம் குவிந்த வண்ணம் உள்ளது. வெளிநாட்டு 'வாடிக்கையாளர்களின் நன்மை கருதி எந்நேரமானாலும் என்னோடு உரையாட- அதிக செலவில் T.O.D. CALL ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் வெளிநாட்டவர் தங்கு தடையின்றி உரையாடலாம்.

தொடர்புகளுக்கு:-

விசேட வெளிநாட்டு தொலைபேசி :-
TEL 0094134483 1 EXT. FRS
FAX 00941342464

மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
பி.கே.சாமி (J.D.G.A.N.)JP.
பி.கே.சாமி அஸோசியட் பிரைவேட் லிமிட்,
இல,162, கொட்டாஞ்சேனை வீதி,
மேபீல்ட் ரோட், கொழும்பு-13.



www.padippakam.com

முல்லைத்தீவு சமரும், யாழ் குடா நாட்டில் நிலைகொண்டுள்ள படையினருக்கு எதிரான புலிகளின் 'தொல்லை கொடுக்கும்' தொடர் நடவடிக்கைகளும் வடபுல யுத்தம் தொடர்பான அரசின் கணிப்புக்களை பொய்க்கச் செய்துவிட்டன.

நீண்ட கால யுத்தம்

குறுங்கால யுத்தம். என்று யுத்தத்தை அது நடைபெறும் காலகட்டத்தை வைத்து இரண்டு வகைப்படுத்தலாம்.

சீனாவில் மா.ஓ. சேதுங் தலைமையில் நடைபெற்ற யுத்தத்துக்கு மக்கள் யுத்தம் என்று பெயர்.

சீனாவின் புவியியல் தன்மை, எதிரிகளின் இராணுவ பலம் போன்றவற்றை, தமது பலம் பலவீனத்தோடு ஒப்பிட்டுப் பார்த்த மா.ஓ.சேதுங் மக்கள் யுத்தம் நீண்டகால யுத்தமாக இருக்கும் என்று வரையறுத்தார்.

தளப்பிரதேசங்களை பறிகொடுப்பது, அடிக்கடி தளப்பிரதேசங்களை மாற்றிக் கொண்டிருப்பது, தற்காலிக கெரில்லா பிரதேசங்களை உருவாக்குவது, எதிரி சூழ்ந்துவிட்டால் அங்கிருந்தும் தப்பிச் செல்வது போன்ற பல கட்டங்கள் சீனாவின் மக்கள் யுத்தத்தில் மாறி மாறி ஏற்பட்டன.

தளப்பிரதேசம் முக்கியமா? தம்மிடமுள்ள படையணிகள் முக்கியமா? என்றொரு கேள்வி வரும்போது புத்திசாலித்தனமான எந்தவொரு படையணியும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவே விரும்பும்.

பலம்பொருந்திய படைகள் முன்பாக பலம் குறைந்த-அதாவது எண்ணிக்கை மற்றும் படைக்கலரீதியில் பலம் குறைந்த படை தன்னைப் பாதுகாக்க இரண்டே இரண்டு வழிகள் உள்ளன.

1. சண்டையைக் கைவிட்டு சரணடைதல்.

2. தொடர்ந்து சண்டையிடுவதற்காக சாதகமற்ற சண்டையிலிருந்து தம்மை விலக்கிக்கொள்ளல்.

ஆனால், வடபுலப் போர்முனையைப் பொறுத்தவரை யாழ்- குடாநாடு ஒருபோதும் படையினர்வசம் செல்லாது என்பது போன்ற எண்ணத்தை புலிகளின் பிரசாரம், மற்றும் நடைமுறைகள் ஏற்படுத்தியிருந்தன.

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கைக்கு முன்பு நூறுகோடி ரூபாய்களை திரட்டி முடிப்பது என்ற இலக்கோடு வடபகுதியில் புலிகளது நிதிப்பிரிவு தீவிரமாகச் செயற்பட்டது.

நூறுகோடி ரூபாய்கள் இருந்தால் யுத்தத்தில் வென்றுவிடலாம் என்று சாதாரண மக்கள் கருதுமளவுக்கு நிதிதிரட்டலுக்கான பிரசாரம் செய்யப்பட்டது.

விமானங்கள் வீழ்த்தப்பட்டமை, மண்டைதீவு முகாம் தாக்கப்பட்டமை, போன்ற நடவடிக்கைகள் யுத்தத்தில் புலிகள் கடைசிக் கட்டத்தை நெருங்கிவிட்டனர் என்பது போன்ற அபிப்பிராயத்தை தோற்றுவித்தது.

யுத்தம் குறுகிய காலத்தில் முடிந்துவிடும் என்ற தவறான கணிப்பு புலிகள் மத்தியிலும் ஏற்பட்டிருந்தது என்பதையே புலிகளது பிரசார சாதனங்கள் வெளியிட்ட கருத்துக்கள் மூலம் உணரக் கூடியதாகவிருந்தது.

அதனால்தான் யாழ்ப்பாணத்தில் புலிகள் சண்டையில் இருந்து பின்வாங்கியபோது அங்குள்ள மக்கள் மத்தியிலும் புலிகள் தொடர்பான நம்பிக்கையீனம் தோன்றியது.

ஏனெனில், யாழ்ப்பாணத்தில் இருந்து மக்கள் புலிகள் சொன்னபடி இடம்பெயர்ந்த போதுகூட, புலிகள் பெரிதாக என்னவோ செய்யப்போகிறார்கள் என்ற எதிர்பார்ப்புடன்தான் இடம்பெயர்ந்தனர்.

அந்த எதிர்பார்ப்பு நிறைவேறாதபோது புலிகள் மீதான நம்பிக்கையீனமாக மாறும் நிலை தோன்றியது.

யாழ்-குடாநாட்டு சண்டையின் பின்னர்தான் புலிகள் மக்களிடம் யுத்தத்தில் பின்வாங்குவது தொடர்பான விளக்கங்களை முன்வைக்க தொடங்கினார்கள்.

பின்வாங்குவது என்பதும் மற்றொரு சண்டைக்காகவே என்பதை புலிகள் இப்போதுதான் தமது பிரசாரசாதனங்கள் மூலமாக விளக்கி வருகின்றனர்.

முன்னரே இதனைச் செய்திருக்கலாம். ஆனால் தாமும் பின்வாங்கக்கூடும் என்று மக்களிடம் சொல்வது ஒரு கௌரவப் பிரச்சனையாக இருந்திருக்கிறது.

மறுபுறம், படைத்தரப்புக்கு அச் செய்தி எட்டினால் அவர்கள் மேலும் உற்சாகம் பெற்று முன்னெறிவரக்கூடும் என்றும் புலிகள் நினைத்திருக்கலாம்.

எதிர்த்தரப்புக்கு பின்வாங்கும் நோக்கம் இருக்கிறதென்றால் மறுதரப்புக்கு உத்வேகம் கொண்டு தாக்கும் தைரியம் வரும் என்பது உண்மை.

எனினும், யுத்தம் குறுங்காலத்தில் முடிவடையும் ஒன்றல்ல என்பதை மக்களிடம் சரியான முறையில் எடுத்துச்சொல்ல புலிகள் தவறியிருந்தார்கள்.

நீண்டகால யுத்தத்தை மக்கள் எதிர்பார்த்திருக்காத நிலையில், புலிகள் யாழ் குடாநாட்டில் இருந்து விலகியபோது பாரிய அதிர்ச்சியாக அமைந்தது.

யாழ்-குடாநாட்டையே விட்டுவிட்டார்கள். இனிமேல் என்ன செய்யப்போகிறார்கள். யாழ் குடாநாடே போச்சுதாம் தமிழீழம் காணப் போகிறார்களாம். இதெல்லாம் சாத்தியமா என்பது போன்ற எண்ணங்கள் ஏற்பட்டன.

புலிகளின் பலத்துக்கு மீறியளவில் புலிகள் தொடர்பாக இருந்த நம்பிக்கையானது பின்னர் புலிகளது உண்மையான பலம் குறித்தும் நம்பிக்கையீனம் கொள்ளும் அளவுக்கு சென்றது.

முல்லைத்தீவு முகாம் தாக்குதல் மூலமாக தமது உண்மையான பலம் எது, பலவீனம் எதுவென்று புலிகள் இராணுவரீதியாக வெளிப்படுத்தியுள்ளனர்.

புலிகள்மீதிருந்த நம்பிக்கையீனங்களை முல்லைத்தீவு முகாம் தாக்குதல் போக்கியுள்ளது.

ஆனாலும், முல்லைத்தீவு முகாம் தாக்குதல் தொடர்பாக அளவுக்கதிகமான மதிப்பீட்டுக்கும் செல்லக்கூடாது.

முல்லைச் சமர் புலிகளுக்கு சாதகமான சண்டையாக மாறியதற்கு பின்வரும் காரணங்கள் முக்கியமானவை.

1. முதலில் தாக்குதலை ஆரம்பித்தமை. (படையினர் பூரண தயார் நிலையில் இல்லாத போது முந்திக்கொண்டமை)

2. முகாமில் இருந்த படையினரைவிட புலிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தமை.

3. புலிகளது அணிகளின் தாக்குதல் திறன். தாக்குதல் நடவடிக்கைக்கான கச்சிதமான திட்டமிடுகை.

முல்லை முகாம் தாக்குதல் கெரில்லாப் பாணியில் நடைபெற்ற தாக்குதலாகும்.

எதிரி பலவீனமாக உள்ளபோது, அல்லது எதிரி சண்டைக்கு தயாராக இல்லாதபோது, மற்றும் எதிரி விழிப்பை தளர்த்தியுள்ளபோது தாக்குவது என்பது கெரில்லா போர் முறையின் முக்கியமான அம்சம்.

ஆயினும் தாக்குதலில் ஈடுபடும் அணிகள் உத்வேகமானவையாகவும், துரிதமாக செயற்படும் தன்மை கொண்டவையாகவும் இருக்க வேண்டும். தாக்குதலுக்கான திட்டம் போடலும் கச்சிதமாக இருக்க வேண்டும்.

முகாமில் இருந்த படையினரைவிட புலிகளது எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும்கூட, முகாமுக்குள் படையினரிடம் இருந்த ஆயுதங்கள் புலிகளிடம் இருந்த ஆயுதங்களைவிட சக்தி கூடியவை.

குறிப்பாக இராணுவ வாகனங்களை படையினர் இயக்க சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் சண்டையின் போக்கே மாறியிருக்கக்கூடும்.

வெலி ஓயா முகாம் தாக்குதலுக்கும் புலிகளின் பெரும் படையணிகளே சென்றன. படையினர் முன்கூட்டியே தயாராக இருந்தமையால் சண்டையின் போக்கே மாறியது.

ஒரு கெரில்லா இராணுவத்துக்கு மிக அடிப்படையான குணாம்சங்கள் பின்வருமாறு.

1. சண்டையிடுவதில் சளைக்காமை.

2. சூழலுக்கு ஏற்ப துரிதமான செயற்பாடு.

3. எதிரியின் பலவீனமான முனைகளை கண்டறிந்து தாக்கும் திறன்.

4. மக்கள் மத்தியில் ஆதரவு.

5. எதிரி பலமாக உள்ளபோது பின்வாங்குவது, எதிரி பலவீனமாக உள்ளபோது பலத்தை திரட்டிக் கொண்டு முன்னேறித் தாக்குவது.

இந்த குணாம்சங்கள் யாவும் புலிகளிடம் காணப்படுவதால்தான் உலகில் சக்தி பொருந்திய முதலாவது கெரில்லா இராணுவம் என்ற நிலைக்கு புலிகள் வந்துள்ளனர்.

புலிகளை இந்த நிலைக்கு கொண்டுவர முடிந்தமைக்கு பிரபாகரனிடமுள்ள மூன்று ஆயுதங்கள் முக்கிய காரணமாகின.

அது என்ன மூன்று ஆயுதங்கள்.

1. தன்நம்பிக்கை, 2. துணிச்சல் 3. திட்டமிட்ட செயற்பாடு

திட்டமிட்ட செயற்பாடு ஒன்று இல்லாவிட்டால் தன்னம்பிக்கையும், துணிச்சலும் விரயமாகிவிடலாம். மூன்றும் இணைந்திருப்பதுதான் பிரபாகரனின் தலைமைத்துவ இரகசியம்.

அதனால்தான் சாத்தியமே இல்லை என்று நம்பப்படும் முனைகளில் புலிகளது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

எனவே-வடக்கு-கிழக்கு போர்முனையில் உறுதியான தலைமையுடன்கூடிய கெரில்லா இராணுவம் ஒன்றும், ஆட்பலரீதியிலும், ஆயுத பலரீதியிலும் பெரிதான நிரந்தர இராணுவம் ஒன்றும் எதிரும் புதிருமாக உள்ளன.

நிரந்தர இராணுவம் டாங்கிகள், பீரங்கிகள் என்ற கவசங்களோடு முன்னேறும். வானிலிருந்து விமானப்படை உதவும்.

# தொடரும் யுத்தமும் நச்சுச் சூழலும்



முற்காலத்தில் யானைகள் முன்னே செல்ல, அடுத்து குதிரைப்படை செல்ல, அவற்றின் பின்னால் காலாட் படையினர் செல்வர். மறுபுறமும் ஒரு படை அதேவிதமாக வந்து மோத சண்டை நடக்கும். அதுதான் மரபுப்போர்.

தற்காலத்தில் யானைகளுக்கு பதிலாக டாங்கிகள், கவச வாகனங்கள், மேலதிகமாக விமானப்படையும் சேர்ந்திருக்கிறது.

வடக்கு-கிழக்குப் போர்முனையில் தற்போதைக்கு புலிகளும், படையினரும் முற்று முழுதான மரபுப்போரில் சண்டை நடத்த முடியாது.

ஏனெனில் புலிகளிடம் டாங்கிப் படையணி கிடையாது. விமானப்படையும் கிடையாது.

எனவே-புலிகள் கெரில்லாப் பாணியிலான சண்டைகளில்தான் ஈடுபடுவர்.

சில சமயங்களில் படையினரின் முன்னேற்றத்தை தடுக்க புலிகள் நேரடி மோதலில் ஈடுபடலாம். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுமே அந்த மோதல் நீடிக்கும்.

மாறாக முன்னேறும் படைப்பிரிவுகள்மீது மறைந்திருந்து தாக்குவது. படைகளை ஒரு குறிப்பிட்ட இடத்திற்குள் நுழையவிட்டு பின்னர் தாக்குவது, நிலைகொண்ட படைப்பிரிவுகள்மீது தாக்குவது போன்றவற்றில்தான் புலிகள் ஈடுபடமுடியும்.

புலிகளிடம் சில டாங்கிகள், சில ஆட்டிலறி பீரங்கிகள் இருந்தாலும் கூட ஒரு திறந்த வெளியிலோ, அல்லது தம்மை மறைத்து கொள்ளமுடியாத இடத்திலோ நின்று மரபுப் போர் முறையில் புலிகளால் மோத முடியாது.

ஏனெனில் விமானப்படையினர் சுலபமாக இனம்கண்டு தாக்கிவிடுவர். டாங்கிகள் அழிக்கப் படும்.

எனவே மரபுப்போர் முறைக்கு ஏற்ற படைக்கலங்கள் இருந்தாலும்கூட கெரில்லாப் பாணியிலான போர்முறையில்தான் அவற்றையும் பயன்படுத்த முடியும்.

காட்டுப்பகுதிகளுக்குள் போர் நடைபெறும் போது ஓரளவு நேரடியாக டாங்கிகளை பயன்படுத்தலாம். அப்போதும் மரபுப் போர் முறை பாதி, கெரில்லாப் போர்முறை பாதி என்றநிலையில்தான் புலிகளது உத்திகள் இருக்கும்.

படையினரோடு மரபுப்போர் முறையில் ஈடுபடுவது புலிகளைப் பொறுத்தவரை தற்கொலைக்கு ஒப்பானது. எனவே மரபுப் போர் முறையிலான எதிர்ப்பால் மட்டுமே படையினரை தடுக்க முடியும் என்ற நிலையுள்ள களங்களில் இருந்து புலிகள் பின்வாங்கியே தீரவேண்டும்.

தற்போது படையினரின் 'சத்ய வெற்றி நடவடிக்கை' மரபுப் போர் முறையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாகும்.

முல்லைச் சமரில் வெற்றிபெற்ற புலிகளால் 'சத்ய வெற்றி' நடவடிக்கையை தடுக்க முடியவில்லை. எனவே புலிகளைவிட பலம் மேலோங்கிய நிலையில் தாம் இருப்பதாக காட்டுவதுதான் படைத்தரப்பின் நோக்கம். எனவே 'சத்ய வெற்றி' நடவடிக்கை பற்றிய பிரசாரங்கள் சூடுபிடித்துள்ளன.

புலிகள் தொடர்பான தவறான கணிப்பில் மரபுப் போர் முறை சார்ந்த தமது வெற்றிகளை படைத்தரப்பினர் மிகைப்படுத்தி வருகின்றனர் என்றே கருத வேண்டியுள்ளது.

ஏனெனில், யாழ்-குடாநாட்டிலும், வன்னியின் சில பகுதிகளிலும் படையினர் நிலை கொண்டிருப்பது என்பது அகலக்கால் வைப்பது மாதிரியானது.

பாரிய நிலப்பரப்பில் தொடர்ந்து நிலை கொண்டிருக்க வேண்டுமானால் எதிர்பார்க்கப் படும் ஆட்பலத்தையும் படையினர் திரட்டியாக வேண்டும். அது சாத்தியமாகுமா என்பது கேள்விக்குறிதான்.

படைக்கு நேரடியாக ஆட்களை திரட்ட முடிந்திருந்தால் 'தொண்டர் படை' என்ற பெயருக்கு அவசியம் நேர்ந்திருக்காது.

அதுதவிர, முல்லைத் தாக்குதலுக்கு பின்னர் படையில் சேருவதற்கான ஆட்திரட்டலுக்கு எந்தளவுதூரம் பலன் கிடைக்கும் என்பதும், யோசிக்க வேண்டியதுதான்.

எனவே-முல்லைச் சமருக்கும், முல்லையில் ஏற்பட்ட பின்னடைவுக்கும் 'சத்ய வெற்றி' நடவடிக்கையை ஒரு பதிலடியாகக் காட்டுவது உடனடியாக அரசுக்கு பலன் கொடுக்கலாம்.

ஆனால், ஒரு வருடத்திற்குள் யுத்தத்தை முடிக்கலாம், இரண்டு வருடத்திற்குள் யுத்தத்தை முடிக்கலாம் என்ற கணிப்பில் அவசரப்பட்டு கால்களை பரப்பி நிற்பது யுத்தத்தந்திர ரீதியில் படையினருக்கு சாதகமாகுமா என்பது சந்தேகம்தான்.

எத்தனை கிலோமீட்டர் படையினர் முன்னேறியுள்ளனர் என்ற கணக்கு எதிர்காலப் போர் கணக்குகளை தப்புக்கணக்குகளாக்கலாம் என்றும் இராணுவ விமர்சகர்கள் கூறாமல் இல்லை.

ஏனெனில், மறுபுறத்தில் சண்டையிடச் சளைக்காத கெரில்லா இராணுவம் ஒன்று தனக்கேற்ற தருணத்திற்காக காத்திருக்கிறது.

மரபுப் போரில் நிலப்பகுதிகளை பிடிக்க படைத்தரப்பிற்கு எத்தகைய சாதகம் இருக்கிறதோ, கெரில்லா போர் முறையில் முகாம்களையும், நிலைகளையும் தாக்கும் சாதகம் கெரில்லா இராணுவத்திடமும் இருக்கிறது.

மரபுப்போர் முறையில் முன்னேறும் படையினர் புலிகளுக்கு ஏற்படுத்தும் இழப்பைவிட, கெரில்லாப் போர்முறை மூலம் புலிகள் படையினர் தரப்பில் ஏற்படுத்தும் இழப்பு அதிகமாகிவிடலாம்.

மூன்றாம் கட்ட ஈழப் போரை புலிகள் அறிவித்த பின்னர் கடந்த 15 மாதங்களில் வடக்கு-கிழக்கில் பல சண்டைகள் நடைபெற்றுள்ளன.

வடபுலப் போர் முனையில் யாழ்தளப் பிரதேசம் புலிகளது கைவிட்டுப் போனது. அதனால் இராணுவரீதியில் படையினருக்கு ஒரு குறிப்பிடத்தக்க வெற்றிதான்.

சூரியக்கதிர் 1, சூரியக்கதிர் 2 இரண்டும் படையினருக்கு வெற்றிதான். அவற்றின் விளைவுகள் எப்படியாக மாறும் என்பது எதிர்காலத்தை பொறுத்தது. ஆனால் இரு சண்டைகள் என்ற ரீதியில் தனித்துப் பார்த்தால் படையினருக்கு வெற்றிதான்.

வடபுலத்தில் நிலப்பரப்புக்களை பிடித்த அதே நேரத்தில் கிழக்கில் புலிகளிடம் பல பகுதிகள் கட்டுப்பாட்டில் சென்றுள்ளன.

ஆனால், அந்தச் சண்டைகளில் படையினர் புலிகளுக்கு ஆட்பல ரீதியிலும், ஆயுதரீதியிலும் ஏற்படுத்திய இழப்புக் களை விட, முல்லைத்தீவில் புலிகள் ஏற்படுத்திய இழப்பு மிகப் பாரியதாகிவிட்டது.

ஆக, கடந்த பதினைந்து மாத கால யுத்தத்தில் படைத்தரப்பினர் வடபுலத்தில் நிலப்பகுதிகளை பிடிக்க முடிந்ததே தவிர, புலிகளது தாக்குதல் பலத்தை அழிக்க முடியவில்லை.

கடந்த பதின்மூன்று வருட கால யுத்தவரலாற்றில் முல்லைத்தாக்கு தல்தான் பாரிய இழப்புள்ள களமாகி யிருக்கிறது. எனவே புலிகளின் பலம் ஏறுமுகமாக இருக்கிறதே தவிர, இறங்கு முகமாக வில்லை.

யாழ் தளப்பிரதேசத்தை இழந்தமையால் புலிகளின் பலம் சரிந்துவிட்டது என்று கணிப்பிடப்பட்டது. யாழ் தளப் பிரதேசம் தம்மிடம் உள்ளபோதுகூட நடத்தாத அளவுக்கு பாரிய அழித்தொழிப்பு யுத்தம் நடத்தியது மூலம் புலிகள் அந்தக் க்ணிப்பை பொய்யாக்கிவிட்டனர்.

எனவே-வடக்கு-கிழக்கு யுத்தம் குறுங்கால யுத்தம் என்ற கணிப்பில் நாட்டின் சலக நிதி வளங்களும் பயன்படுத்தப்படுமானால் எதிர்காலத்தில் பாரிய பொருளாதார நெருக்கடி என்னும் நச்சுச் சூழலுக்குள் நாடு சிக்க வேண்டி நேரலாம். தற்போதே அதற்கான அறிகுறிகள் தெரியத் தொடங்கிவிட்டன.

'எல்லாப் பாதையும் ரோமாபுரிக்கே' என்பதுபோல எல்லா வளங்களும் யுத்தத்திற்கே என்றளவில் நாட்டின் நிதியும் வெளிநாட்டு கடன் உதவிகளும் போரில் கலக்கின்றன.

'ஒரு இரண்டு வருடத்திற்கு பல்லைக் கடித்தபடி இருங்கள்' என்பதுபோல மக்களுக்கு சொல்லப்படுகிறது. உங்கள் மீதான சகல சுமைகளும் போரின் வெற்றிக்கே என்று மக்களுக்கு சொல்கிறது அரசாங்கம்.

ஆறுமாதம், ஒரு வருடம் என்ற கால வரையறை இரண்டு வருடமாகியுள்ளது. ஆனால் இரண்டு வருடத்தில் கூட முடியப் போகும் யுத்தம் அல்ல நடந்து கொண்டிருப்பது. எனவே பல்லைக் கடித்துக் கொண்டிருக்கும் மக்களது பொறுமை ஒரு கட்டத்தின் பின்னர் கட்டுமீறலாம்.

கட்டுமீறாமல் வைத்திருக்க வேண்டுமானால் போர்க்கள நிலவரம் பற்றிய உற்சாகமான செய்திகளை அரசாங்கம் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும்.

எனவே-படையினரின் பலம், புலிகளின் பலம் என்ற மதிப்பீடுகளுக்கு அப்பால் போர் நிலவரத்தை கையாளும் கட்டாயம் அரசாங்க தரப்புக்கு ஏற்படும். அதிலொன்றுதான் படையினர் அகலக் கால்வைக்கும் வகையிலான நிலப்பரப்புக்களை பிடிக்கும் நடவடிக்கை.

இது பிரசாரரீதியில் அரசுக்கு உதவினாலும், போர்த்தந்திர ரீதியில் படைத்தரப்புக்கு நீண்டகாலநோக்கில் சாதகமாக முடியுமா?

ஆனாலும், போர் முனையில் புலிகளின் நடவடிக்கைகள் பாரியதாக இருக்கும்போது, போரின் வெற்றிச் செய்தியை எதிர்பார்த்து பல்லைக் கடித்தபடி இருக்கும் மக்கள் பொறுமையிழந்து தமது அதிருப்தியை அரசுக்கு எதிராகவோ, அல்லது சிறுபான்மையினருக்கு எதிராகவோ திருப்பவும் கூடும்.

குறும்கால யுத்தம், விரைவான வெற்றி என்ற கணிப்புக்களோடு அரசு யுத்தத்தை நடத்திச் செல்லுமானால் பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் என்ற நச்சுச் சூழலும் வாயைப் பிளந்துகொண்டு எழுவதை எதிர்பார்க்கத்தான் வேண்டும்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

## அதிரடி அய்யாத்துரை



கொழும்பு குண்டுவெடிப்புக்கு சில நாட்கள் கழித்து நடைபெற்ற சம்பவம் இது. வழக்கமாக மீன்வாங்கும் வியாபாரியிடம் போய், வழக்கமான புன்னகையுடன் மீன் விலை கேட்டாராம் அந்த தமிழ் பெண்மணி. மீன் வியாபாரி ஒருவிதமான முறைப்புடன் சொன்னாராம் "போய் பிரபாகரனிடம் வாங்கு." வியாபாரி தமாஷ் பண்ணுகிறார் பல வருடமாக மீன் வாங்கும் வாடிக்கையாளருடன் தமாஷாக பேசுவார்தானே "சரி சரி மீன் விலையைச் சொல்லு" என்றாராம் பெண்மணி. அவ்வளவுதான், பலமான முறைப்புடன், உரத்த குரலில் வியாபாரி திரும்பவும் சொன்னாராம்: "போய் பிரபாகரனிடம் வாங்கு!" நைசாக நழுவிய பெண்மணி மீன் வாங்கும் யோசனையைக் கைவிட்டு தப்பினோம் பிழைத்தோம் என்று வீடுபோய் சேர்ந்தாராம்.

தலைநகரில் தேச பக்தர்களான ஒட்டோ சாரதிகள் ஒரு காரியம் செய்கிறார்களாம். இளவயதினர், அல்லது பார்வைக்கு ஒரு விறைப்பாகத் தெரியும் செந்தமிழ் பேசுவோர் ஒட்டோவில் ஏறினால், மிகப் பக்குவமாக கொண்டுசென்று அவர்கள் சொல்லுமிடத்தில் இறக்கிவிடுகிறார்களாம். பக்குவமாக இறக்கிவிட்டு, பத்திரமாக பணத்தையும் வாங்கிக்கொண்டு ஒட்டோவை நேராக பொலிஸ் நிலையத்துக்கு விட்டு, "இப்படியான ஒரு இடத்தில் சந்தேகப்படும் படியான ஆட்கள் இறங்கியிருக்கினம். கவனிக்கவும்" எண்டு தகவலும் கொடுக்கினமாம். எல்லாம் ஒரு தேச சேவைதான்.

ஆனையிறவு கிளிநொச்சி ஒப்பரேசன் தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்பட்டது. ஆங்கில சண்டைப் படம் பார்க்கிறமாதிரி இருக்குது. என்ன ஒரு குறையெண்டால், முல்லைச் சண்டையையும் படம் பிடித்து காட்டாமல் விட்டுப் போட்டினம். பொறுப்பற்ற சிலர்தான் வதந்திகளை பரப்புகினம் எண்டால், அரச தொலைக் காட்சியாவது பொறுப்போடு படம் பிடித்து உண்மை நிலவரத்தை காட்டியிருக்கலாமல்லோ.

யாழ்ப்பாண கடைசி மன்னன் கவிழ்ந்து போனாராம். யாழ்ப்பாணம் நல்லூர் முத்திரைச் சந்தியில் குதிரையில் வாளோடு அட்டகாசமாகப் போஸ் கொடுத்துக் கொண்டிருந்தவர். 'போஸ்' பிடிக்கேல்லையோ தெரியாது புரட்டப்பட்டு கவலைக்கிடமான நிலையில் காணப்படுகிறார். யாழ்ப்பாணத்தில் நந்திக்கொடியும் ஏற்றப்பட்டதல்லோ. நந்திக் கொடிக்கு சொந்தக்கார மன்னன் சந்தியில் கவிழ்ந்து கிடக்கலாமோ. கவனித்தால் நன்றாக இருக்குமல்லோ.

மறைந்த லிபரல் கட்சித் தலைவரின் இறுதிச் சடங்கில் கட்சிகளின் தலைவர்கள் பலர் கலந்துகொண்டனர். கிழக்கின் தனித்துவ கட்சித் தலைவரும் கலந்துகொண்டார். அவரை ஆரம்ப அனுதாப உரையாற்ற அனுமதித்தார்களாம். மறைந்த தலைவர் தனது நண்பர் என்று பழைய நினைவுகளை மீட்டிவிட்டு அவர் அமர்ந்தாராம். பின்னர் உரையாற்றிய சிலர் கடந்த தேர்தலை மனதில்வைத்து கிழக்கின் தனித்துவ தலைவர்மீது மறைமுக 'குத்தல்' நடத்தினவையாம். திட்டம்போட்டு நடந்த குத்தல். அதுதான் அவரை முதலில் பேசவிட்டவையாம். கடைசியாகப் பேசவிட்டால் குத்தலுக்கு பதில் குத்தல் கொடுத்துத் திருப்பாரல்லோ. இறுதிச் சடங்கிலும் அரசியல் வியூகம். அரசியல் எண்டால் அரசியல்தான்

அடுத்த வரவு செலவுத் திட்டமும் வரப்போகுது. சிகரெட் பிரியர்கள் மிகுந்த கவலையில் இருக்கினம். சிகரெட் விலை உயர்த்தாத பட்ஜெட் யுத்தம் இல்லாத இலங்கை மாதிரி. யுத்தமும், பட்ஜெட்டில் சிகரெட் விலை உயர்வும் நிறுத்தவே முடியாத சமாச்சாரங்கள். சிகரெட் குடிப்பவர்கள் தேசபக்தர்கள். அவர்கள் தங்களை அழித்துக் கொண்டு தேசிய பாதுகாப்புக்கு சேவை செய்கிறார்கள். நம்நாட்டின் தங்கமுட்டையிடும் வாத்து எது? சிகரெட்.

• யாழ்ப்பாணத்துக்கு பறந்துபோகலாம் எண்டு ரிக்கெற் எடுக்கப்போனவை வெறுத்துப் போய் இருக்கினம். சந்திரமண்டல பயண ஏற்பாடு மாதிரித்தானாம். ஏறாத படியெல்லாம் ஏற வேணும். பெயரைக் கொடுத்துவிட்டுக் காத்திருக்க வேணும். போக்குவரத்து கலாதியாக நடக்குது எண்டு கப்பலில் கொழும்பு வந்தவை தலையில் கைவச்சுக்கொண்டு இருக்கினம்.

நல்லூர் திருவிழா களைகட்டிநடப்பதை ரெண்டு எழுத்தார் விரும்பவில்லையாம். அதுவும் ஒரு பிரசாரமாக மாறிப்போயிருமல்லோ. அதுதான் சின்னதாக ஒரு சலசலப்பு ஏற்படுத்தினவை எண்டு கதை.

அருமையான ஒரு பொன்மொழி. படித்தவுடன் பதிஞ்சு போச்சு.

"நூறு மைல்களுக்கு
அப்பால் இருந்தாலும்
நல்ல நண்பன்
இதயத்தின் நடுவில்தான் இருப்பான்.
பொய்யான நண்பன்
வீட்டின் முற்றத்தில் இருந்தாலும்
ஏழு கடலுக்கு
அப்பால் இருப்பதுமாதிரித்தான்.!"



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர் 89

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அற்புதன்

## மேதின ஊர்வலத்தில் புதிய காட்சிகள்

### மேதினவிழா

யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினர் மேதின விழா நடத்தப்போகும் செய்தி அரசாங்கத்திற்கும் எட்டியிருந்தது.

மேதின நாளுக்கு முன்னர் வானத்தில் விமானங்கள் வட்டமிட்டு நோட்டம் பார்த்துச் சென்றன.

அப்போதெல்லாம் விமானங்கள் துணிச்சலாக தாழப்பறந்து சட்டென்று எழுந்து உயர்ந்தெல்லாம் வேடிக்கை காட்டுவது வழக்கம்.

மேதின ஊர்வலம், கூட்டம் என்று நடக்கும்போது விமானக் குண்டுவீச்சுக்கள் இடம்பெறக்கூடும் என்ற அச்சம் தோன்றியிருந்தது.

ஆனால் புலிகளோ வேறுமாதிரி யோசித்தனர். பெரும் திரளான மக்கள் கலந்துகொள்ளும் ஊர்வலத்திலோ, கூட்டத்திலோ விமானத்தாக்குதல் நடைபெறுமானால் இலங்கை அரசுக்கு சர்வதேசரீதியாக அபகீர்த்தி ஏற்படும்.

எனவே-அவ்வாறான ஒரு தாக்குதலுக்கு அரசு துணியாது என்று புலிகள் நினைத்தனர்.

திட்டமிட்டபடி மேதினம் நடைபெறும் என்று புலிகள் அறிவித்தனர். மேதின விழாவுக்கான மாபெரும் ஒழுங்குகளும் புலிகள் அமைப்பினரால் செய்யப்பட்டன.

மேதின விழாவில் பெரும்திரளாக கலந்துகொள்ளும்படியும் மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

1987 மே 1ம் திகதி யாழ்ப்பாணம் பலாலி வீதியிலுள்ள யாழ் பல்கலைக் கழகச் சந்தியில் (பரமேஸ்வராச் சந்தி) யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆட்களை ஏற்றிக்கொண்டுவந்து புலிகளின் வாகனங்கள் இறக்கின.

அதுதவிர தாமாகவும் பெரும்திரளான மக்கள் வந்து கூடினார்கள்.

ஊர்வலத்தில் சில புதிய காட்சிகளை யாழ் மக்கள் முதன் முதலாகக் கண்டார்கள்.

புலிகளின் சிவப்பு மஞ்சள் கொடிகள் 1987 மே முதலாம் திகதிதான் முதன் முதலாக ஊர்வலத்தில் எடுத்து வரப்பட்டன.

தொழிலாளர் அணி, விவசாயிகள் அணி, மகளிர் அணி, மாணவர் அணி என்று பல்வேறு அணிகள் அணிவகுத்துச் சென்றன.

ஊர்வலத்தை திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி நடத்துவதில் யாழ் மாவட்ட புலிகளின் தளபதி ராதாதான் முன்னணியில் நின்றார்.

ஊர்வலம் கந்தர் மடச் சந்தி, அரசடி வீதி வழியாக நல்லூர் வடக்கு வீதிக்கு



யோகி

சென்றடைந்தது. ஊர்வலத்தில் கலந்து கொண்டு சென்றவர்கள் தம்மையறியாமலேயே அடிக்கடி அண்ணாந்து வானத்தைப் பார்த்துக் கொண்டனர்.

நல்லூர் வடக்கு வீதியில் 'மேதினக் கூட்டம் ஆரம்பமானது.

### யோகிக்கு முக்கியத்துவம்

கூட்டத்துக்கு தலைமைதாங்கியவர் யோகி. யாழ் மாவட்ட புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளராக இருந்தவர் திலீபன். கிட்டு யாழ் மாவட்ட தளபதியாக இருந்தபோது யாழ் மாவட்ட கூட்டங்களில் திலீபன்தான் முக்கிய பாத்திரம் வகிப்பார்.

மேதின ஊர்வலத்திலும், கூட்டத்திலும் திலீபன் காணப்பட்டபோதும், யோகிதான் பிரதான இடத்தைப் பிடித்துக் கொண்டார்.

கொளுத்தும் வெய்யில் நேரத்தில் கூட்டம் நடைபெற்றபோதும் மக்கள் திரண்டிருந்தனர். பிரபாகரன் வந்து கலந்துகொள்ளக்கூடும். பார்த்துவிட்டுச் செல்லலாம் என்றும் பெரும்பாலானோர் காத்திருந்தனர்.

திடீரென்று மேடையில் இருந்து யோகி ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.

"இப்போது முக்கியமான ஒருவர் உங்கள் முன் தோன்றப்போகிறார். அவர் வருவதற்கு வழியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்" என்று கூறினார் யோகி.

பிரபாகரன்தான் வரப்போகிறார் என்று கூட்டத்தினர் மத்தியில் ஒரே பரபரப்பு.

ஒரு கார் ஒன்று வேகமாக வந்து கூட்டத்தினரை நெருங்கியது.

காருக்குள் இருந்தவர் கிட்டு. அவர் அருகே ராதாவும் இருந்தார்.

பிரபாகரனை எதிர்பார்த்திருந்த போதும், கிட்டுவைக் கண்டதுகூட கூடியிருந்த மக்களுக்கு மகிழ்ச்சியாகத்தான் இருந்தது.

எல்லோரும் முண்டியடித்து கிட்டுவைப் பார்த்துவிடும் ஆவலில் காரை முற்றுகையிட்டனர்.

காருக்குள் இருந்தபடியே கிட்டு உரையாற்றுவதற்கு ஒழுங்கு செய்து கொடுக்கப்பட்டது. காருக்குள் இருந்தபடியே கிட்டு உரையாற்றினார்.

கிட்டு உரையாற்றி முடிந்ததும் கூடியிருந்த பல்லாயிரம் மக்களிடமிருந்து வெளிப்பட்ட ஆரவாரம், கிட்டுமீது யாழ்ப்பாண மக்கள் கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடு தெரிந்தது.

### 35 இலட்சம் மக்கள் பலியானாலும்..

பிரபாகரன், மாத்தையா ஆகியோர் மேதினக் கூட்டத்தில் சமூகமளிக்கவில்லை.

மேதினக் கூட்டத்தில் யோகி ஆற்றிய உரையில் முக்கியமாக குறிப்பிட வேண்டிய விடயம் இது:

"35 இலட்சம் மக்கள் பலியாக வேண்டிய நிலை வந்தாலும், தமிழ் ஈழ இலட்சியத்தை நாம் ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டோம். தமிழீழம் உருவாகும்வரை போராடியே தீருவோம்." என்றார் யோகி.

மேதினக் கூட்டத்தின்பின்னர் புலிகள் இயக்கத்தில் புதிய நட்சத்திரமாக யோகி கணிக்கப்பட்டார். புலிகள் இயக்க அரசியல் நடவடிக்கைகளில் யோகி பிரதானமானவர் என்று கருதப்படுமளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

பிரபாகரனுக்கு மிக நம்பிக்கையானவராக இருந்தவர் பொன்னம்மான். அவரது சகோதரரான யோகி தனக்கும் இயக்கத்துக்கும் விசுவாசமாக இருப்பார் என்று பிரபாகரன் நினைத்தார். அதனால் தான் யோகிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

யோகிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமையானது கிட்டுவின் விசுவாசிகளை ஓரம்கட்டும் போக்கின் ஒரு வெளிப்பாடு என்றும் அப்போது பேசப்பட்டது.

எது எப்படியோ யோகியின் வரவோடு யாழ்ப்பாண அரசியல் பிரிவுப் பொறுப்பாளராக இருந்த திலீபனின் முக்கியத்துவம் குறையத் தொடங்கியது.

புலிகளின் யாழ் மாவட்ட தளபதியாக கிட்டு இருந்தவரை பத்திரிகைகளில் அவரது பேட்டிகளும், அவர் தொடர்பான செய்திகளுமே இடம் பெற்றுவந்தன.

கிட்டுவின் பின்னர் யாழ் மாவட்டத் தளபதியாக ராதா பொறுப்பில் இருந்தாலும், மாத்தையா, யோகி ஆகியோரின் ஆதிக்கமே யாழ்ப்பாணத்திலும் மேலோங்கியிருந்தது.

கிட்டு இருந்தவரை யாழ்ப்பாணத்தில் மாத்தையாவுக்கு தனது முக்கியத்துவத்தை காட்டக்கூடிய சந்தர்ப்பமே இருக்கவில்லை.

கிட்டுமீதான தாக்குதலின் பின்னர் தான் புலிகள் அமைப்பின் பிரதித் தலைவர் என்று யாழ்ப்பாண மக்கள் மத்தியிலும் மாத்தையா பிரபலமாகத் தொடங்கினார்.

மாத்தையாவுக்கென்று ஒரு விசுவாசிகள் கூட்டமும் யாழ்ப்பாணத்தில் உருவாகத் தொடங்கியது.

யாழ் பல்கலைக்கழகம் முன்பாக இருந்த புலிகளின் பிரதான அலுவலகத்திற்கு தினமும் வந்து சென்ற மாத்தையா, உள்ளூர் பிரமுகர்களையும் சந்தித்து ஆலோசனைகள் நடத்தினார்.

மாத்தையாவுக்கு தனக்கு அடுத்த நிலையில் உள்ள தலைவர் என்ற அங்கீகாரத்தை பிரபாகரனும் எவ்வித தயக்கமும் இல்லாமல் வழங்கியிருந்தார்.

கிட்டு மீதான மாத்தையா குழுவினரின் தாக்குதலுக்கு பிரபாகரன் ஒப்புதல் கொடுத்தாரோ, இல்லையோ, எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

கிட்டுவைவிட மாத்தையாமீதே அப்போது பிரபாகரன் பெரும் நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதற்கு, பிரபாகரன் யாழ்ப்பாணத்தில் நின்ற போதே கிட்டுமீதான தாக்குதல் நடத்தப்பட்டமையும் ஒரு உதாரணம் எனலாம்.

பிரபாகரனுக்கு பிடிக்காத ஒரு நடவடிக்கையை பிரபாகரன் யாழ்ப்பாணத்தில் நிற்கும் போதே மாத்தையா செய்யத் துணிந்திருக்க மாட்டார். அதன் விளைவு என்னாகும் என்று மாத்தையாவுக்கு தெரியும். எனவே கிட்டு மீதான தாக்குதலுக்கு பிரபாகரனின் மறைமுக ஒப்புதல் இருந்தது என்று ஏனைய



லெப்.கேர்.ராதா

இயக்கங்கள் மத்தியில் பரவலான பேச்சு இருந்தது.

யாழ்ப்பாணத்தில் இராணுவப் பொறுப்பாளராக ராதா இருந்தபோதும், உளவுப் பிரிவு நடவடிக்கைகள், விசாரணைகள், மற்றும் இயக்கம் தொடர்பான சகல நடவடிக்கைகளும் மாத்தையாவின் கட்டுப்பாட்டில் வந்திருந்தன.

## மாத்தையா-யோகி ஆதிக்கம் ஆங்கிலப் பத்திரிகைமீது பாய்ச்சல்

### சற்றடே ரிவியூ

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான ஒரே ஒரு ஆங்கில பத்திரிகை 'சற்றடே ரிவியூ.'

அதன் ஆசிரியராக முதலில் இருந்தவர் சிவநாயகம். சற்றடே ரிவியூ' பத்திரிகைக்கு நிதியுதவி வழங்கியது தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் (TRRO).

கொழும்பில் இருந்து வெளியான ஆங்கிலப் பத்திரிகைகள் தமிழ் தேசிய உணர்வுக்கு எதிரானவையாகவும், பேரினவாத உணர்வு சார்ந்தவையாகவுமே வெளிவந்தன.

நடுநிலையான பத்திரிகையாகவும், அரச பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தக்கூடிய வகையிலும் ஒரு ஆங்கிலப் பத்திகையை வெளியிடும் எண்ணத்தின் பிரதிபலிப்புத்தான் 'சற்றடே ரிவியூ'.

'சற்றடே ரிவியூ' ஆசிரியர் சிவநாயகத்திற்கு படையினர் தரப்பிலிருந்து மிரட்டல்கள் விடுக்கப்பட்டன. உதவியாசிரியர் ஈஸ்வரச் சந்திரன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். அதனால் பயந்துபோன சிவநாயகம் தமிழ்நாட்டுக்கு தப்பிச்சென்றார்.

அதன்பின்னர் 'சற்றடே ரிவியூ' பத்திரிகையின் ஆசிரியராகப் பொறுப்பேற்றவர் காமினி நவரட்ண. முற்போக்குச் சிந்தனை கொண்டவரும், தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிரான உணர்வுள்ள ஒருவராகவும் இருந்தார். இராணுவத்தினரின் தரப்பிலிருந்து மிரட்டல்கள் விடுக்கப்பட்டுக்கொண்டுமிருந்தமையால் காமினி நவரட்ண ஆசிரியராக இருப்பதுதான் சூழலுக்கு ஏற்றதாகவும் இருந்தது.

### புலிகள் முரண்பாடு

'சற்றடே ரிவியூ' பத்திரிகையில் வெளியான கருத்துக்கள் சிலவற்றோடு புலிகளுக்கு உடன்பாடில்லை. அது மட்டுமல்லாமல் புலிகளுக்கு ஆதரவாக பல்கலைக்கழக மட்டத்திலிருந்த சிலருக்கும் 'சற்றடே ரிவியூ' மீது நல்ல அபிப்பிராயம் இல்லை.

எனவே-சற்றடே ரிவியூமீதும், அதன் ஆசிரியர் காமினி நவரட்ண மீதும் புலிகளிடம் புகார் கூறிக் கொண்டிருந்தனர்.

மே மாதம் 11ம் திகதி யாழ்- பல்கலைக் கழகத்தில் ஒரு விமர்சனக் கூட்டம் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. புலிகள் அமைப்பினரின் நடவடிக்கைகளை விமர்சனக் கண்ணோட்டத்தோடு நோக்குவதுதான் அந்தக் கூட்டத்தின் நோக்கம். கூட்டத்தில் காமினி நவரட்ணாவும் கலந்துகொள்வதாக இருந்தது.

யாழ்-பல்கலைக்கழகம் மீதும், அங்கு நடைபெறும் விடயங்களை அறிவதிலும் புலிகள் எப்போதும் ஒரு கண் வைத்திருப்பார்கள். ஏனைய இயக்கங்களை தடைசெய்த பின்னர் யாழ்-பல்கலைக் கழகத்தின்மீது புலிகளின் கண் காணிப்பு பலமாகியிருந்தது.

பல்கலைக்கழக மாணவர்களாக இருந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் எவரும் தம்மை புலிகளோடு தொடர்புடையவர்களாகக் காட்டிக் கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட்டவேலை அப்படி.. பல்கலைக்கழகத்திற்குள் உளவு வேலை செய்வது தான் அவர்களுக்கு கொடுக்கப் பட்டவேலை.

புலிகள் தொடர்பான விமர்சனக் கூட்டம் நடைபெறும் செய்தியும் மாத்தையாவுக்கு எட்டிவிட்டது. மே 11 ம் திகதி கூட்டம் ஆரம்பமானபோது புலிகளது உளவுப்பிரிவைச் சேர்ந்தவர்களும் கூட்டத்தில் வந்து புகுந்து கொண்டனர்.

கூட்டத்தின் இடையிலேயே விடை பெற்றுக் கொண்டு காமினி நவரட்ண புறப்பட்டுவிட்டார். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒருவரால் அவர் பின்தொடரப்பட்டார். பின்னர் புலிகளால் கைதுசெய்யப்பட்டார்.

### எச்சரிக்கை

காமினி நவரட்ணாவை மாத்தையாதான் விசாரணை செய்தார். 'புலிகளுக்கு எதிராக ஒரு அறிக்கை தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்ப இருந்தார்'. என்று காமினி நவரட்ணமீது மாத்தையா குற்றம் சாட்டினார்.

காமினி நவரட்ண அதனை மறுத்தார்.

காமினி நவரட்ணவை விடுதலை செய்ய வேண்டும் என்று பலரும் புலிகளிடம் வலியுறுத்தினார்கள். 'புலிகளைப்பற்றிய விமர்சனங்கள் தவிர்க்கப்பட வேண்டும்' என்ற மறைமுகமான எச்சரிக்கையோடு காமினி நவரட்ண 4 வது நாள் விடுதலை செய்யப்பட்டார்.

காமினி நவ்ரட்ண ஒரு துணிச்சலான, நேர்மையான பத்திரிகையாளராக அப்போதிருந்தார். அவரால் தனக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பொறுத்துக்கொண்டு இருக்க முடியவில்லை.

காமினி நவரட்ண விடுதலையான பின்னர் வெளியான 'சற்றடே ரிவியூ'வில் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கம் காமினி நவரட்ணவை கைதுசெய்ததை கடுமையாகச் சாடியது.

பத்திரிகையைப் பார்த்த மாத்தையா உடனே உத்தரவிட்டார்: "சற்றடே ரிவியூ இனிமேல் வெளிவரக்கூடாது."

பத்திரிகைக்கு பண உதவி செய்த தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழக (TRRO) யாழ் மாவட்டப் பொறுப்பாளர் விசுவலிங்கத்தின் வீட்டுக்குச் சென்ற புலிகள் அவரை மிரட்டினார்கள். அவரும் பயந்து போனார். புனர்வாழ்வுக் கழகத்தின் மற்றொரு பிரமுகரான சட்டத்தரணி அரவிந்தன் என்பவரும் மிரட்டப்பட்டார். புலிகள்மிரட்டிய மிரட்டில் அவர் புலிகளின் விசுவாசியாகி, பத்திரிகையை மூடியேயாக வேண்டும் என்பதில் உறுதியாக நின்றார்.

### ஈரோஸ் தலையீடு

ஏனைய இயக்கங்கள் எதுவுமில்லை. ஈரோஸ் மட்டுமே அப்போது இருந்தது. 'சற்றடே ரிவியூ' மீதான தடையை நீக்குமாறு புலிகளிடம் பேசிப்பார்த்தது ஈரோஸ்.

ஈரோஸ் தலைவரான பாலகுமாருக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு ஆங்கிலப் பத்திரிகை வெளிவர வேண்டும் என்பதில் விருப்பம். பிரபாகரனிடம் நேரடியாகவே பேசிப்பார்த்தார் பாலகுமார்.

ஒரே பதில்தான் 'முடியாது'. அது மட்டுமல்ல அந்த விவகாரத்தில் ஈரோஸ் தலையிடுவது நன்றாக இருக்காது. தொடர்ந்தும் தலையிடாமல் இருப்பது நல்லது' என்றும் மறைமுகமான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

புலிகள் தடைசெய்யாதிருப்பது தம்மை மட்டும்தான். பிரச்சனையை ஏன் விலை கொடுத்து வாங்க வேண்டும் என்று நினைத்து ஈரோஸ் தலையிடாமல் ஒதுங்கிக்கொண்டது.

அத்தோடு சற்றடே ரிவியூ பத்திரிகைக்கு யாழ்ப்பாணத்தில் மூடுவிழா நடந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து அப் போது நான்கு தமிழ் பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன.

ஈழநாடு, உதயன், ஈழமுரசு, முரசொலி.

'ஈழநாடு' பத்திரிகை மட்டும் நடுநிலையை பேணியது. 'உதயன்' ஓரளவு நடு நிலையாக வெளிவர முயற்சித்தது. ஈழமுரசும், முரசொலியும் புலிகளின் பத்திரிகைகள் போலவே வெளிவர ஆரம்பித்தன.

கொழும்பிலிருந்து வெளியான தினபதி, சிந்தாமணி பத்திரிகைகள் தமிழ் ஈழப் போராட்டத்துக்கு எதிரானவை என்று புலிகளால் ஒரு தடவை யாழ் பல்கலைக் கழகம் முன்பாக எரியூட்டப்பட்டன.

### அரசாங்கத்தின் திட்டம்

யாழ்-குடாநாட்டில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றுக்காக மிக இரகசியமாக திட்டமிட்டது ஜே.ஆர்.அரசு.

யாழ் குடாநாட்டை கைப்பற்றியே தீருவது என்ற முடிவோடு திட்டங்கள் தீட்டப்பட்டுக் கொண்டிருந்தன.

பலாலி இராணுவ தளம், பருத்தித் துறை, ஊர்காவத்துறை போன்ற இராணுவ முகாம்களில் படைகள் குவிக்கப்பட்டன.

எந்த முனையில் இருந்து படை நடவடிக்கை ஆரம்பமாகப்போகிறது என்று ஊகிக்கமுடியாமல் இருக்க பல்வேறு முனைகளில் படைகளை குவித்துப் போக்குக் காட்டியது அரசாங்கம்.

தொடர்ச்சியான விமானத் தாக்குதல்கள், ஹெலித் தாக்குதல்கள் என்பவற்றால் மக்கள் பீதி கொண்டிருந்தனர். பங்கர்களை வெட்டி தற்காப்பு தேடுவதில் மும்முரமாயினர்.

இதேவேளை யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை உயர் அதிகாரிக்கு மே 3ம் திகதி ஒரு கடிதம் கிடைத்திருந்தது.

சுகாதார அமைச்சிடமிருந்து வந்த அந்தக் கடிதத்தில் மே 8ம் திகதி போதனா வைத்திய சாலையை மூடுமாறு பணிக்கப் பட்டிருந்தது.

பெரும் தாக்குதல் ஒன்றுக்கான அறிகுறியே அதுவாகும் என்று கருதப்பட்டது.

யாழ் போதனா வைத்தியசாலைமீது கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் விழுந்து வெடிப்ப துண்டு. அதனால் அரசாங்கத்திற்கு சர்வதேசரீதியாக கண்டனங்கள் எழுந்திருந்தன.

யாழ் ஆஸ்பத்திரியிலிருந்து புலிகள் ஷெல் தாக்குதல் நடத்துகிறார்கள். ஷெல் வரும் திசையை குறிவைத்துத் தாக்குவதால் ஆஸ்பத்திரி பாதிக்கப்படும் நிலை ஏற்படலாம். அதனால் அதனை மூடிவிட்டு வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்று அரசாங்கம் அப்பட்டமான பொய் ஒன்றை அவிழ்த்துவிட்டிருந்தது.

எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்ததில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்று யாழ் குடாநாட்டில் ஆரம்பமாகப் போகிறது என்பது புலிகளுக்கு மட்டுமல்லாமல், மக்களுக்கும் நன்கு விளங்கியிருந்தது.

### ஒப்பரேசன் லிபரேசன்

ஏனைய இயக்கங்களை புலிகள் தடை செய்தமையால்தான் படையினருக்கு யாழ் குடாநாட்டை கைப்பற்றும் துணிச்சல் வந்திருக்கிறது. புலிகள் தனித்து நின்று எப்படி சமாளிக்கப்போகிறார்கள்? என்று மக்கள் பேசிக்கொள்ள ஆரம்பித்தனர்.

மக்கள் அஞ்சத்தேவையில்லை. கடைசிப்புலி உள்ளவரை யாழ் குடாநாடு படைகளின் கையில் செல்ல விடமாட்டோம் என்று புலிகள் நம்பிக்கை கொடுத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது புலிகள் இயக்கப் பாடல்கள் தயாராகியிருக்கவில்லை. பாரதியாரின் பாடல்கள்தான் புலிகளால் பயன்படுத்தப் பட்டன.

'அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பது இல்லையே. உச்சிமீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும்...' என்ற பாடலை அடிக்கடி கேட்கக்கூடியதாக இருந்தது.

புலிகள் 'நிதர்சனம்' என்னும் தொலைக்காட்சி ஒளிபரப்பை அப்போது நடத்திக்கொண்டிருந்தனர்.

எல்லோரும் எதிர்பாத்த அந்த நாள் வந்தது.

வடமராட்சியில் குவிக்கப்பட்ட படைகள் யாழ் குடாநாட்டை கைப்பற்றும் தமது பாரிய படை நகர்வை ஆரம்பித்தன.

அதற்கு சூட்டப்பட்ட பெயர்.

'ஒப்பரேசன் லிபரேசன்'

பல புதிய திருப்பங்களுக்கு அடிகோலிய ஒப்பரேசன் அது. புலிகளும் பதிலடிக்கு தயாரானார்கள்.

(தொடர்ந்துவரும்)



படிப்பகம்

www.padippakam.com

# பேச்சுக்கு உதவாத முன் நிபந்தனைகள்

அலசுவது- இராஜதந்திரி

'சத்ஜய', அதாவது சத்திய வெற்றி என்ற பெயரில் ஆயுதப்படையினர் ஆனையிறவிலிருந்து கிளிநொச்சிவரை நகர்வொன்றை மேற்கொண்டிருந்தனர்.



'ஓயாத அலைகள்' என்று பெயரிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முல்லைத்தீவு இராணுவ முகாமை வெற்றிகொண்டதையடுத்தே 'சத்திய வெற்றி' இராணுவ நடவடிக்கையை ஆயுதப்படையினர் ஆரம்பித்திருந்தனர்.

முல்லைத்தீவு முகாமிலிருந்து பல கோடி பெறுமதியான நவீனரக ஆயுதங்கள், வாகனங்கள் என்பவை எல்.ரி.ரி.ஈயினரால் முல்லை முகாமிலிருந்து கொண்டுசெல்லப்பட்டுள்ளன.

இந்த ஆயுதங்கள் அனைத்துமே மிகவும் சக்திவாய்ந்தவை எனவும், நெடுந்தூரஞ் சென்று இலக்குகளைத் தாக்கக்கூடியவை என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்பயங்கர ஆயுதங்களைக் கொண்டு வடக்கே எப்பகுதியிலும் எல்.ரி.ரி.ஈ.யினர் தமது கைவரிசையைக் காட்டமுடியும்.

ஆனையிறவு, பூநகரி, மணலாறுப் பிரதேசங்களில் உள்ள இராணுவ நிலைகளே இந்த ஆயுதங்களினால் உடனடி அச்சுறுத்தலை எதிர் கொண்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட இராணுவ நிலைகள் ஏற்கனவே புலிகளின் பயங்கரத் தாக்குதல்களுக்குள்ளானவை என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய நவீனரக ஆயுதங்களைக் கைப்பற்றிய நிலையில் அவற்றைக் கொண்டு சென்று யாழ்குடா நாட்டிலுள்ள பலாலித்தளத்தையோ அல்லது வேறு முகாம்களையோ தாக்கும் முயற்சியில் எல்.ரி.ரி.ஈ.யினர் உடனடியாகக் குதிக்கமாட்டார்கள்.

வன்னிப் பிரதேசத்தையே தற்போது பலம்மிக்க தளமாகக் கொண்டிருக்கும் எல்.ரி.ரி.ஈ.யினர் அப்பிரதேசத்தை அண்டியுள்ள முகாம்களின் மீதே தமது கைவரிசையைக் காண்பிக்க முன்வருவார்கள்.

புவியியல் ரீதியாகப் பார்க்கும்போது எல்.ரி.ரி.ஈ.யினர் தற்போது வடக்கே விசாலமான, நிலப்பரப்பையே தமது பிடியில் வைத்துள்ளார்கள். யாழ்குடாநாட்டைவிட விரிந்த மற்றும் பல்வேறு விதத்திலும் வாய்ப்பானதொரு பெருநிலமாகவே வன்னிப் பகுதி விளங்குகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களின் புவியில் அமைப்பைச்சரிவரப் புரிந்து கொள்ளாதவர்கள் யாழ்குடாநாட்டில் படையினர் நிலைகொண்டுள்ளதைப் பெரிதாகக் கருதலாம். ஆனால் யாழ்குடாநாட்டைவிட இராணுவ நடவடிக்கைகளுக்கு வாய்ப்பானதொரு பிரதேசம் எல்.ரி.ரி.ஈ.யினரது பிடியில் இருப்பதே உண்மையாகும்.

## 'அடங்காத் தமிழர்' சுந்தரலிங்கத்தை கவர்ந்த வன்னி மண்!



இந்த உண்மையைப் புலப்படுத்துவதாகவே முல்லைத் தீவுத்தாக்குதல் விளங்குகின்றது. அத்துடன் ஆனையிறவின் உப்பளங்கள், பரந்தனின் பற்றைக் காடுகளைத்தாண்டி வந்த 'சத்ஜய' துருப்புக்கள் தொடர்ந்து முன்னேறுவதில் எதிர்நோக்கியுள்ள சிக்கல்களுக்கும் அடர்ந்து நிற்கும் வன்னிக்காடுகளே பிரதான தடைகளாக இருக்கின்றன.

அடங்காத் தமிழர் அமரர் சி. சுந்தரலிங்கம் அன்றைய தமிழ் அரசியலாளர்களில் துணிச்சல் மிக்கவர்.

சண்டித்தனமாகவும் அவ்வப்போது அவர் கருத்துக்களை வெளியிடுவதுண்டு. வன்னிப் பிரதேசத்தை அவர் பெரிதும் விரும்பியிருந்தார்.

வவுனியாவில்கூட அவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். தமது அரசியல் நாட்களில் பேரினவாதிகள் வெளியிட்ட கருத்தொன்றுக்குப் பதிலளிக்கையில் "வடபகுதிக்குள் எவராவது ஊடுருவ நினைத்தால் வன்னிமண்ணின் ஒவ்வொரு மரமும் ஓர் ஆயுதமாகும்." என்று கூறியிருந்தார்.

அரசியலில் மட்டுமல்ல, கணிதத் துறையிலும் மேதையான அமரர் சி. சுந்தரலிங்கம் அன்று கூறியது இன்று நிதர்சனமாகியிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

ஆனையிறவில் இருந்து மெற்கொள்ளப்பட்ட 'சத்திய வெற்றி' இராணுவ நடவடிக்கை, முல்லைத் தீவு முகாமை மீட்பதற்கான 'சட்ட பஹர' இராணுவ நடவடிக்கை என்பவை முல்லைத்தீவு முகாம் தாக்குதலையடுத்து ஆயுதப்படையினர் பலத்த தள்ளாட்டத்துக்குள்ளாகியிருப்பதையே உணர்த்துகின்றன.

படையினருக்கு ஏற்பட்டுள்ள இத்தள்ளாட்டம், ஆட்சியாளருக்கும் தமது நிலைப்பாடுகளை மறு பரிசீலனை செய்யத் தோன்றியுள்ளது.

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையையடுத்து அரசியல் பேச்சுக்கள் பற்றிப் பேசுவதை ஆட்சியாளர்கள் பெரிதும் தவிர்த்திருந்தனர்.

ஆனால் தமது நிலைப்பாடு தவறு என்பதை அவர்கள் புரிந்துள்ளதையே அவதானிக்கமுடிகின்றது.

அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், லக்ஷ்மன் கதிர்காமர், எஸ்.தொண்டமான் ஆகியோர் கடந்தவாரங்களில் எல்.ரி.ரி.ஈ.யினருடனான சமரசப் பேச்சுக்கள் குறித்துப் பிரஸ்தாபித்திருந்தனர்.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கருத்துவெளியிட்டபோது, எல்.ரி.ரி.ஈ.யினருடன் பேச்சுக்களை நடத்தத் தயாராகவுள்ளதாகவும், ஆனால் அவர்கள் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட வேண்டும் என்று கூறியிருந்தார்.

சந்திரிகா அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களிலேயே சிறந்த கல்விமான் என்று கூறுமளவுக்கு கல்வித்தகைமைகளைக் கொண்டவராக பேராசிரியர் பீரிஸ் இருக்கின்றார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக இருந்தவர். சட்டத்துறையில் ஒரு சிறந்த அறிஞர்.

இப்படிப்பட்டவர் எல்.ரி.ரி.ஈ.யினர் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடவேண்டுமென்று கூறியிருப்பது ஆச்சரியத்தைத் தருவதாகவே இருக்கின்றது.



பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டால் மட்டுமே எல்.ரி.ரி.ஈ.யினருடன் பேச முடியும் என்று பேராசிரியர் பீரிஸ் கூறியிருக்கின்றார். ஆனால் இக் கோரிக்கையைக் கைவிட்டால் பேசுவதற்கே எதுவுமில்லை என்பதைப் பேராசிரியர் பீரிஸ் அறிந்துகொள்ளவேண்டும்.

பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடச் செய்யும் விதத்திலும், அல்லது அக்கோரிக்கைக்கு மாற்றீடாக புதிய யோசனைகளை முன்வைக்கும் விதத்திலுமே பேச்சுக்களை நடத்தவேண்டியுள்ளது.

இந்நிலையில் காத்திரமான பேச்சுக்களின் தொனிப்பொருளாகவே 'பிரிவினை வாதக் கோரிக்கை' இருக்கின்றது.

இக்கோரிக்கையைக் கைவிடச் செய்வது அல்லது, இதற்குப் பதிலாக வேறொரு தீர்வுத்திட்டத்தைக் கொண்டுவருவது, இவற்றிலேயே அரசியல் பேச்சுக்களின் வெற்றி-தோல்வி தங்கியுள்ளது.

பிரிவினையைக் கைவிட்டுப் புலிகளை பேச்சுக்களுக்கு வருமாறு கோருவது, கால்களைக் கட்டிக் கொண்டு அவர்களைப் பந்தாட வரும்படி கோருவது போலவே இருக்கின்றது.

எல்.ரி.ரி.ஈ.யினரது அரசியல் நிலைப்பாடே தமிழீழம் என்ற பிரிவினைக் கோரிக்கையாகவே இருக்கின்றது. இன்றுவரை அந்த இலக்கிலிருந்து அவர்கள் இம்மியளவும் இறங்கி வரவில்லை.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என்று கூறியே எல்.ரி.ரி.ஈ.யினர் தமது எந்தவொரு நடவடிக்கையையும் ஆரம்பித்துவருகின்றனர்.

இந்நிலையில் அவர்கள் தமிழீழக் கோரிக்கையைக் கைவிட்டுப் பேச்சுக்களுக்கு முன்வருவார்கள் என்று எதிர்பார்ப்பது சரியாகவிருக்காது.

எல்.ரி.ரி.ஈ.யினர் ஆயுதங்களைக் கைவிட வேண்டும். அப்போதுதான் பேச்சுக்கள் சாத்தியமாகும் என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

எல்.ரி.ரி.ஈ.யினரது ஆயுதப்போராட்டத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியாளரைப் போல ஏற்றுக்கொண்டவர்கள் வேறெவருமே இந்த நாட்டில் இருக்கமுடியாது.

அவர்களது போரட்டம் நியாயமானது; கடந்தகால ஆட்சியாளர்கள் தமிழ் மக்களது கோரிக்கைகளைத் தட்டிக்கழித்ததாலேயே எல்.ரி.ரி.ஈ.யினர் ஆயுதப்போராட்டத்தை ஆரம்பித்தார்கள். சகல தமிழ் அமைப்புக்களிலும் எல்.ரி.ரி.ஈ.யினரே பலம் வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். எனவே எந்தவொரு தீர்வுக்கும் அவர்களுடன் பேச்சுக்களை நடத்தியே தீரவேண்டும் என்றெல்லாம் ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது அமைச்சரவையிலுள்ள ஏறத்தாள அனைத்து அமைச்சர்களுமே கூறியிருந்தார்கள்.

எனவே தமது தேர்தல் வாய்ப்புக்களுக்காவும், தமது சொந்த அரசியல் லாபங்களுக்காகவும் எல்.ரி.ரி.ஈ. யினரது போராட்டத்தை அங்கீகரித்தவர்கள் தற்போது அதனை நிராகரிப்பது வேடிக்கையானதாகவே இருக்கின்றது.

தமிழீழம் என்பது எல்.ரி.ரி.ஈ.யினரது கோரிக்கை; அதனைப் பலப்படுத்தி முன்னெடுக்கும் விதத்திலேயே அவர்கள் தம்மை ஒரு பலம்மிக்க இராணுவ சக்தியாகக் கட்டி எழுப்பியுள்ளனர்.

அத்துடன் அவ்வப்போது தமது பலத்தை நிரூபிக்கப் பெருந்தாக்குதல்களையும் மேற்கொண்டுவருகின்றனர்.

ஆகவே எல்.ரி.ரி.ஈ.யினரது தமிழீழக்கோரிக்கை; அவர்களது இராணுவ நிலைப்பாடு என்பவை குறித்தவையாகவே பேச்சுக்கள் அமைய வேண்டியுள்ளது.

வடக்கு-கிழக்குப் பிரச்சினையின் 'அடிநாதமாகவே' இருக்கும் இந்த இருநிலைப்பாடுகளையும் நிராகரித்த பேச்சுக்கள் எவ்விதத்திலும் ஆரோக்கியமான அரசியல் பேச்சுக்களாக அமைய மாட்டாதென்பதே யதார்த்தமாக உள்ளது. ●

**யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான 'ஈழநாடு' பத்திரிகையில் அதன் ஆசிரியர் ந.சபாரத்தினம் எழுதிய ஆசிரியர் தலையங்கம் இது. 16.12.84 இல் எழுதப்பட்டது.**

## மனித உரிமைகள்: கேலிச்சித்திரம்

மனிதனின் அடிப்படை உரிமைகள் யாவை என்று ஐ.நா. பிரகடனப்படுத்திய தினம் டிசம்பர் 10இல் 1948.

அது ஒரு திவ்விய தினமென்பதால், 36 ஆண்டுகளுக்குப் பின் எமது நாட்டில், அத்தினத்தில் மனித உரிமைகள் பற்றிப் பேசுவதோ, எழுதுவதோ ஒரு கேலிச் சித்திரம் போலிருக்குமென நினைத்து, அன்று மௌனம் சாதித்தோம்.

'1984' என்ற நூலை எழுதி, அவ்வருடம் உலகம் அழிந்துவிடுமென்று கூறியவர், ஆங்கில நாவலாசிரியர் ஜோர்ஜ் ஓர்வெல்: அதனை எழுதும்போது, அவர் பயங்கர நோயால் பீடித்திருந்தார். சில நாட்களில் இறந்து விட்டார்; எனவே அவருடைய 'சாத்திரம்' பொய்த்துவிடுமென்று கருதப் பட்டது.

உலக அரங்கை எடுத்துக் கொண்டாலும், எங்கள் நாட்டைப் பார்க்குமளவிலும் மனித உரிமைகள் பேசும்போதெல்லாம், நூலாசிரியர் ஜோர்ஜ் ஓர்வெல்லின் இன்னொரு நூல் நினைவுக்கு வருகின்றது. மன உடைவின் சிகரத்தில் நின்று அவர் எழுதிய நூல் 'மிருகப்பண்ணை' (Animal Farm).

"இப்பண்ணையில் வாழும் மிருகங்கள் எல்லாம் சமத்துவமுடையவை; ஆனால் சில மற்றவையிலும் பார்க்க கூடிய சமத்துவமுடையவை" என்கிறார் ஓர்வெல்.

எனவே, 'சில கூடிய சமத்துவ முடையவை' என்றால், மற்றவை



கட்டாயமாகச் சமத்துவத்தில் குறைந்தவையென்பது சொல்லாமலே விளங்கும்.

இலங்கையைத்தான் கருத்தில் கொண்டார் நூலாசிரியர் என்று சொல்ல எமக்குப் பேரவா உண்டு; ஆனால், மிருகப் பண்ணைகள் வேறு எத்தனை நாடுகளில் உண்டென்பதை நாமறியோம். இருப்பினும், இங்கு நடைபெறும் அழிவு, உலக அழிவு எவ்வாறிருக்குமென்பதை உணர்த்துகிறது. உலக நாடுகளில் நிரம்பிவழியும் இராணுவ ஆயுதங்கள், இங்கு வந்திறங்குவதால் நிலைமை திருந்துமா?

சுதந்திரம், சமத்துவம், சகோதரத் துவம் என்ற காப்புடன் தொடங்கி, மூன்றாவது ஷரத்தில், மனிதன் உயிர்வாழும் உரிமையுடையவன் என்ற பாட்டுப் பாடுகின்றது; வாழ்வின்றேல் உரிமைகள் பற்றி என்ன பேச்சு?

'எனக்கு வாழும் உரிமை உண்டு; ஆனால், என்னோடு வாழும் நீ என்னை வாழவிட வேண்டும்.'

இதன் அர்த்தம் இன்று தான் இந்த நாட்டில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் உணரக் கூடியதாகவிருக்கிறது. வாழ மட்டுமல்ல, சாகவே உரிமையில்லை. இந்த நிலை மாறுவதற்கு ஆண்டவனைவிட வேறு யாருமில்லை.

இதனை எம்முடைய ஆன்மீக மரபில், 'உயிர்ப் பிச்சை' என்று சொல்வது வழக்கம். அகால மரணத்திலிருந்து காப்பாற்றும் இறைவனுக்கு, உயிர்ப் பிச்சை தந்துதவும் ஆண்டவனுக்கு நாம் 'நேர்த்திக் கடன்' செய்யும் வழக்கம், இன்னும் சமூகத்தில் மறைந்து விடவில்லை. ஆனால், இறைவனுடைய அதிகாரத்தை-மனித உரிமை என்று பிரகடனப் படுத்தியபோதும்-மனிதன் அபகரித்திட முடியுமானால், அது உலக அழிவின் அறிகுறி என்று சொல்ல வேண்டாமா?

இவ்வருட முடிவுக்கு முன் எங்கள் நாட்டைப் பொறுத்தளவில், நூலாசிரியரின் தீர்க்கதரிசனம் நிறைவேறுமா? ●



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளைராணி பூலான்தேவி

4

என் அம்மாவுக்கு ஒரு அண்ணன் இருந்தார். கோர்ஹா என்பது அவர் பெயர். எப்போதாவது வந்துவிட்டுப் போவார்.

அவரிடம்தான் எனக்கு மாப்பிள்ளை தேடும் பொறுப்பை ஒப்படைத்திருந்தார்கள்.

கோர்ஹாதான் தன்னோடு ஒரு ஆளை அழைத்துவந்திருந்தார். அப்பா உள்ளே வந்து அம்மாவிடம் பேசிக் கொண்டிருந்தது எனக்குக் கேட்டது.

"மாப்பிள்ளை வந்துவிட்டார். பூலானை தயார்படுத்து."

"அவரா மாப்பிள்ளை? வயதானவர் போலத்...." அம்மா எச்சில் விழுங்கினாள்.

"அப்படியொன்றும் வயதாகவில்லை. முப்பது வயதுதான். நீண்ட தூரம் நடந்தே வந்ததால் களைத்துப் போயிருக்கிறார். பூலானிடம் மோர் கொடுத்தனுப்பு என்ன?" அம்மா தயக்கமாய் தலையாட்டினாள்.

நான் ஓடிப்போய் அம்மாவின் காலைக் கட்டிக்கொண்டேன். "என்னடி?"

"எனக்குப் பயமாக இருக்கம்மா!"

"என்னடி பயம்?"

"மாமாவோடு வந்திருக்கிறாரே; அந்த ஆளு யாரம்மா?"

"மரியாதையாகப் பேசு. அவர்தான் உன்னைக் கல்யாணம் பண்ணப்போற மாப்பிள்ளை?"

"அ....அவனா....அவரா?"

"ம்....ம்..." அம்மா பானையில் இருந்த மோரை மொண்டு என்னிடம் தந்தாள். என் தலையில் துப்பட்டாவால் போட்டிருந்த முக்காட்டை சரிப்படுத்தினாள்.

"கொண்டுபோய் கொடு. காலில் விழுந்து வணங்கிவிட்டு வா. என் ராசாத்தி. போ."

நான் போகும்போது அப்பா பேசிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது.

"என் மகள் பூலான் இருக்கிறாளே, கெட்டிக்காரி. பயங்கரமான தைரியம் அவளுக்கு. எவனும் இதுவரை அவள்மீது கை வைத்ததில்லை."

பொருள் சுத்தமானது என்று விலை கூறும் வியாபாரி போல அப்பா சாதுரியமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

வீட்டுக்கு முன்புறமாக அயலவர்கள் வந்துகூடியிருந்தனர். அம்மாதான் தகவல் சொல்லி அழைத்திருந்தாள்.

அந்த மாப்பிள்ளை- அவன் பெயர் புத்திலால்- என்னைப் பார்த்து ஈ என்று இளித்தான். எனக்கு அவன் மூஞ்சியைப் பார்க்கவே வெறுப்பாக இருந்தது. வேண்டுமென்றே ஈ என்று பற்களைக் காட்டி இளித்துக்காட்டினேன். அவன் முகம் சுருங்கியது போலிருந்தது.

அவன் முன்பாக குவளையை பொட்டென்று வைத்தேன். மோர் தளும்பிச் சிந்தியது. அப்பா அதனைக் கவனித்திருக்க வேண்டும். நான் ஓடிப்போய் அம்மாவோடு ஒட்டிக்கொண்டேன்.

"பூலான் சின்னப்பெண். பதினொரு வயதுதானே. விளையாட்டுக் குணம் போகவில்லை. ஆனால் ஒரு ஆண்பிள்ளையைப் போல உழைக்கக் கூடியவள்." என்றார் அப்பா.

எங்கள் பகுதியில் மணமகன்தான் பணமோ, பொருளோ கொடுத்து மணமகளை வாங்கிக்கொள்ளவேண்டும்.

சந்தையில் மாடு பிடிப்பதுபோல பணம் கொடுத்து மணப்பெண்ணை பிடித்துக்கொண்டு போவார்கள். பணத்திற்காக குரங்கின் கையில் கிளியையும் கொடுக்கலாம். ஏழைக்னாச்சே! என்ன செய்வது?

என் தம்பிக்கு ஒரு சைக்கிளும், எங்கள் வீட்டுக்கு ஒரு கறவை மாடும் தருவதாகச் சொன்னான் புத்திலால். எனக்கு அவன் போட்ட மதிப்பு அதுதான்.

அப்பா தயங்கினார்.

"மாப்பிள்ளை! தப்பாக நினைக்கக் கூடாது. தருவதை ரொக்கப்பணமாகவே தந்தால் உபகாரமாக இருக்கும்!"

எனக்கு அப்போது ஒன்றுமே புரியவில்லை. மாடு ஏன் கொடுக்கிறார்கள். மாட்டை கொடுத்துவிட்டு என்னைப் பிடித்துக் கொண்டு போகப்போகிறானோ?

'அய்யோ...அப்பா மாடு வேண்டாம் அப்பா. நான் அந்த மாட்டைவிட கடுமையாக வேலை செய்து தருவேனே. என்னை இந்த ஆளுக்கு பிடித்துக்கொடுக்காதீர்கள் அப்பா' என்று கத்தவேண்டும்போல் இருந்தது. பயத்தில் அடங்கிப்போயிருந்தேன்.

அப்போதுதான் வீட்டுக்கு முன்பு கூடியிருந்த அயவலர்கள் மத்தியில் இருந்து அந்தப் பெண் எழுந்தாள். அவளை எல்லோரும் 'பைத்தியம்' என்று கேலிசெய்வதைப் பார்த்திருக்கிறேன். ஏனோ நான் மட்டும் அவளை ஒருநாள் கூட கேலி செய்ததில்லை. பாவமாக இருக்கும்.

அவள்தான் முகத்தில் எள்ளும், கொள்ளும் வெடிக்க காளி போல எழுந்தாள். என் அப்பா வையே முறைத்துப் பார்த்தபடி உரத்துச் சப்தமிட்டாள்.

"தேவிதீன் உனக்கு மானம் ரோசம் இல்லையா? ஒரு பசுவுக்கும், ஒரு சைக்கிளுக் கும் ஆசைப்பட்டு அந்த சின்னப் பெண்ணை விற்கப் பார்க்கிறியே! என்னைப் பைத்தியம் என்று சொல்வீர்களே, இந்த தேவிதீனுக்கு பிடித்திருக்கும் பைத்தியத்தை யாருமே கண்டு கொள்ளாமல் இருக்கிறீர்களே! நீங்கள் எல்லாம் உருப்படுவீர்களா? எப்படியோ தொலையுங்கள்! யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன?" அவள் விறு விறுவென்று போய்விட்டாள்.

புத்திலாலின் முகத்தைப் பார்த்தேன். கோணலாகியிருந்தது. எனக்கு சிரிப்புப் பொத்துக்கொண்டுவந்தது. கைகளால் வாயை மூடிக்கொண்டேன்.

பணமாக கொடுத்து என்னை வாங்க புத்திலால் உடன்படவில்லை. அவன் வீட்டில் ஒரு நோஞ்சான் பசு மாடு இருந்தது. அதனை அப்பாவின் தலையில் கட்டி விடலாம் என்றுதான் கணக்குப் போட்டான்.

வேறு வழியில்லாமல் பசுமாட்டுக்கும், சைக்கிளுக்கும் என்னைத் தாரைவார்த்துக் கொடுத்தார் அப்பா.

வெட்டி விருந்தாக்க கொண்டு செல்லப் படும் ஆட்டுக்குட்டியைப் பார்த்திருக்கிறீர்களா?

அப்படித்தான் நானும் புத்திலாலுடன் அவன் கிராமம் நோக்கிப் புறப்பட்டேன்.

அம்மா சேலைத்தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டு விம்மிக் கொண்டிருந்தாள்.

தம்பி தன்னைவிடப் பெரிய சைக்கிளில் தாவி ஏற முயலுவதும், முடியாமல் சைக்கிளோடு விழுவதுமாக மல்லுக்கட்டிக் கொண்டிருந்தான்.

என் மூன்று தங்கைகளுக்கும் ஒன்றுமே புரியாமல் திருதிருவென்று முழித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்பாவுக்கு என் பிரிவை தாங்கமுடியாதாம்; புத்திலால் கொடுத்த நோஞ்சான் பசுவுடன் எங்கோ போயிருந்தார்.

நான் மட்டும் அழவில்லை. ஏன் அழ வேண்டும். எனக்கு யார் இருக்கிறார்கள். எனக்காக அந்த 'பைத்தியம்' கூட என்னமாய் பரிந்து பேசி வலிய வந்து அப்பாவோடு சண்டை போட்டாள். இந்த அம்மா வாயைப் பொத்திக்கொண்டுதானே இருந்தாள்!

எத்தனை விளையாட்டுக் காட்டியிருப்பேன். அப்பா அடித்தால் அழுதுகொண்டு 'அக்கா,அக்கா' என்று வருவானே சிவநாராயணன், என் தம்பி, அவனை கொஞ்சிக் கொஞ்சி தேற்றுவேன். அவனுக்கு என்னைவிட ஒரு சைக்கிள் பெரிதாகிவிட்டது.

அவனுக்கு சைக்கிள் வேண்டும். அப்பாவுக்கு கறவை மாடு வேண்டும். என்னை யாருக்கும் வேண்டாம்தானே! எனக்கும் யாரும் வேண்டாம்! நான் அழவேயில்லை.

'மஹேஷ்பூர் கி மரியா' என்பதுதான் புத்திலாலின் கிராமத்துக்கு பெயர்.



பூலான் தேவியின் தந்தை-தேவிதீன்

நானும் புத்திலாலும் கிராமத்துக்கு சென்றபோது இருட்டிவிட்டது. எங்கள் வீட்டைவிட புத்திலாலின் வீடு விசாலமாக இருந்தது. வீட்டில் புத்திலாலின் வயதான தாய் மட்டுமே இருந்தாள்.

என்னைக் கண்டதும் புத்திலாலின் அம்மா கவலைமிகக் கொண்டவள்போல காணப்பட்டாள். புத்திலாலை தனியாக அழைத்துச் சென்று ஏதோ பேசிக் கொண்டாள். சிறிது நேரத்தில் அவளும், புத்திலாலும் வாக்குவாதப் பட்டனர்.

"அவளுக்கு என்னடா தெரியும்? சின்னப் பெண். உனக்கு மகள் போல இருக்கிறாளடா. இப்படித்தானே அவளையும் கொன்றாய். 14 வயதில் பிள்ளை பெற முடியாமல் செத்துப் போனாள்....பெண் பாவம் சும்மாவிடாதடா" என்றாள் தாய்.

புத்திலாலின் முதல் மனைவி பற்றித்தான் தாயார் பேசினார்கள் என்பது பின்னர்தான் எனக்குத் தெரியும்.

திடீரென்று வாக்குவாதம் முற்றியது. புத்திலால் தனது தாயை எட்டி உதைத்தான். வயிற்றில் அடிபட்டாள். வலியால் துடித்தபடி ஒரு மூலையில் மடங்கி புலம்பிக் கொண்டிருந்தாள்.



பூலான்

நான் அதுவரை சந்தித்த மையாதீன், அந்த கொள்ளிவாய்ப்பிசாசு கிராம அதிகாரி, அவர்கள்மீது எத்தனை வெறுப்புக் கொண்டேனோ, அதேயளவு வெறுப்பு புத்திலால் மீதும் எனக்கு ஏற்பட்டது. மறுபுறம் பயமாகவும் இருந்தது.

ஓடிப்போய் ஒரு மூலையில் பாய்விரித்து சுருண்டு படுத்தேன். புத்திலால் என்னை நோக்கி வருவது காலடி சத்தத்தில் இருந்து தெரிந்தது.

கண்களை இறுக மூடிக்கொண்டு நல்ல தூக்கத்தில் இருப்பதுபோல கிடந்தேன்.

"பூலான்" என்று கூப்பிட்டான். நான்தான் தூங்கிப் போய்விட்டேனே. அசையாமல் கிடந்தேன்.

"எடியே பூலான்!" கோபம் வந்ததுபோல தொட்டு உலுக்கினான். வாரிச் சுருட்டியபடி எழுந்தேன்.

"சாப்பிடாமல் படுத்துவிட்டாயே! வா சாப்பிடலாம்."

"வேண்டாம். எனக்கு பசிக்கவில்லை!"

அவன் என் கையைப் பிடித்தான். பேசாமல் இருந்தேன். தலையைத் தடவினான். அவன் தொட்ட இடமெல்லாம் அட்டை ஊர்வதுபோல இருந்தது.

என் நெஞ்சில் கைவைத்து நீவி விட்டான். எனக்கு சுள்ளென்று கோபம் வந்தது. கையைத் தட்டிவிட்டேன்.

"பயப்படாதே. நன்றாக இருக்கும். ஒரே ஒரு தடவைதான். பின்னர் பாரேன் நீயே கேட்டுக்கொண்டிருப்பாய்!"

அவன் என்ன சொல்கிறான் என்று எனக்கு எதுவுமே அப்போது புரியவில்லை. அவன் என்னைத்தொடுவதற்கு விடுவதில்லை என்றுமட்டும் தீர்மானம் செய்து கொண்டேன்.

எழுந்துபோய் ஒரு பெட்டியைத் திறந்து ஏதோ தேடினான்.

நான் கொஞ்சம் பயந்துபோனேன்.

பெட்டிக்குள் இருந்து ஒரு சேலையை எடுத்துக்கொண்டு என்னிடம் வந்தான்.

"பூலான் இது உனக்குத்தான். நீ கட்டியிருக்கும் சேலை நன்றாகவா இருக்கிறது? அது வேண்டாம். அதை களைந்துவிட்டு, இந்தா இதைக் கட்டிக்கொள்!" வேண்டுமென்றே குரலில் பரிவை வரவழைத்துக் கொண்டு பேசினான்.

"வேண்டாம். இதுவே போதும்!"

"எத்தனை நாளைக்கு இப்படியே இருப்பாய்?"

"எத்தனை நாள் வேண்டுமானாலும்!"

புத்திலாலுக்கு கோபம் வந்துவிட்டது.

"எனக்கு கோபம் வந்தால் தாங்க மாட்டாய். உன் அப்பனுக்கு ஒரு பசுமாடும், சைக்கிளும் கொடுத்திருக்கிறேன். நான் சொன்னபடியெல்லாம் நீ கேட்காவிட்டால் பசுமாட்டையும், சைக்கிளையும் பறித்துக் கொண்டு வந்துவிடுவேன். கிட்டவாடி கழுதை!"

அவனே கிட்ட வந்தான். நான் விலகிப் போனேன். சேலையில் பிடித்திழுத்தான். நான் இழுத்துக் கொண்டு ஓடினேன்.

எலிக்குஞ்சொன்றை பூனை துரத்தியது போல அவன் என்னை துரத்தினான். ஒரு அறைக்குள் எப்படி அவனிடமிருந்து தப்பிக் கொண்டே இருப்பது?

என் கழுத்தில் எட்டிப் பிடித்தான். கன்னத்தில் ஓங்கி அறைந்தான். எனக்குக் கண்கள் இருண்டு கொண்டு வந்தன. காதுக்குள் இரைச்சல் கேட்டது.

அப்படியே என்னை தரையில் மல்லாக்கத் தள்ளிச் சிரித்தான்.

"எனக்கா தண்ணிகாட்டுகிறாய் சிறுக்கி!" சொல்லிக்கொண்டே தன் வேஷ்டியை உருவிப் போட்டான். உடம்பில் துணியில்லாமல் அவனைப் பார்க்க எனக்கு அசிங்கமாக இருந்தது.

எழுந்து ஓடும் எண்ணத்தில் முழுப் பலத்தையும் உடலுக்கு கொடுத்து உடம்பை நிமிர்த்தினேன். குனிந்து என் கன்னத்தில் பளார் பளார் என்று அறைந்தான்.

வலிதாங்கமுடியாமல் கூச்சலிட்டேன்.

அவன் அடிப்பதை நிறுத்திவிட்டு என்மேல் பரவினான். எனக்கு மூச்சு முட்டியது.

மெல்ல மெல்ல என் சுயநினைவு தப்பிக்கொண்டிருக்கையில்,

வெளியில் இருந்து புத்திலாலின் அம்மா, "அவளை விடடா பாவி!" என்று கத்திக் கொண்டிருப்பதும், எங்கோ கிணற்றுக்குள் இருந்து கேட்பது போல காதில் விழுந்து கொண்டிருந்தது.

எனக்குள் இருந்த அந்த வெள்ளை உடைத் தேவதை இப்போது எழுந்து கொண்டிருந்தாள்.

"புத்திலாலை விடாதே. பூலான்." என்றாள்.

(தொடர்ந்து வரும்)

தருவது —ரசிகன்

## செந்தமிழ் பயிலும் ஜெர்மன் இளைஞன்

ஆங்கிலத்தில் பேசுவதுதான் நாகரிகம் என்று தமிழ் பேசுவோரிடமும் ஆங்கிலத்தில் பேசும் தமிழர்களும் இருக்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரை தமிழில் பேசுவது நாகரிகமில்லை.

ஆனால், தமிழின் வாசனையே தெரியாத ஜெர்மன் நாட்டு இளைஞர் ஒருவருக்கு தமிழின்மீது காதல். எப்படியாவது தமிழ் மொழியைக் கற்றுவிடவேண்டும் என்று தமிழ் நாட்டுக்கு சென்றிருக்கிறார்.

அந்த வாலிபரின் பெயர் மாட்ஸ். வயது 24. மாட்ஸ் தமிழ் மீது எப்படிக் காதல் கொண்டார்?

ஜெர்மன் பல்கலைக்கழகத்தில் இந்திய மொழிகளான இந்தி, தமிழ், சமஸ்கிருதம் ஆகியவற்றை பயிற்றுவிக்கிறார்கள்.

அடிப்படைத் தமிழைப் படித்ததுமே செந்தமிழ் சிறப்பான மொழி; விபரமாகப் படித்தேயாக வேண்டும் என்று முடிவுக்கு வந்தாராம் மாட்ஸ்.

தமிழ் படிக்க தமிழகத்தில் தங்கியுள்ள மாட்ஸ் ஒரு விஷயத்தைச் சொல்லி கவலைப் படுகிறார்.

"எழுத்துத் தமிழுக்கும், பேச்சுத் தமிழுக்கும் இடையே நிறைய வித்தியாசம் உள்ளது. என்னுடைய பெரிய பிரச்சனை, தமிழ் மொழியை நன்றாகப் பேசவேண்டும்



என்பதே இதற்காக தமிழர்களிடம் தமிழில் பேசு கிறேன். ஆனால் எல்லோரும் ஆங்கிலத் திலேயே பதில் கூறுகின்றனர்." என்கிறார் மாட்ஸ்.

தனது துணைவியுடன் தமிழகத்தில் தங்கியுள்ள மாட்ஸ், தமிழ் மொழியைக் கற்பதோடு நிறுத்தப்போவதில்லை, தமிழ் மொழியைப்பற்றி பல ஆராய்ச்சிகளையும் மேற்கொள்ளப்போகிறாராம்.

## சுஷ்மிதா சென்னின் சுவையான பேட்டி

முன்னாள் உலக அழகி சுஷ்மிதா சென் நடிகையாகிவிட்டார் என்பது தெரிந்த சங்கதிதான் மும்பாய் நடிகைகள் போல சுஷ்மிதாவும் கலக்கலான பேட்டிகள்



கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

பம்பாய் பத்திரிகையான 'ஷோடைம்' கேட்ட கேள்விகளுக்கு சுஷ்மிதா பட்பட்டென்று பதில் சொல்லியிருக்கிறார். சுஷ்மிதாவின் துணிச்சலை நீங்களும் அறிய வேண்டாமா. உதாரணத்திற்காக சில கேள்வி பதில்கள்.

**கேள்வி:-** ***மிஸ் சுஷ்மிதா உங்கள் உயிர்த் தோழிக்கு தாம்பத்திய வாழ்க்கையில் திருப்தி இல்லை. அதனால் கணவருடன் கசப்பாக இருக்கிறாள் என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் என்ன யோசனை சொல்வீர்கள்?***

**சுஷ்மிதா:-** அவளது காதலனுடன் மனம் விட்டுப் பேசுமாறு கூறுவேன். எது தேவை. எப்படியான விருப்பங்கள் என்று இருவரும் மனம்விட்டுப் பேசினால்தான் உடல்ரீதியான ஒத்துழைப்பு ஏற்பட முடியும் என்று கூறுவேன்.

**கேள்வி:-**

***1. உணர்வைத் தூண்டும் இசை.***
***2. ஜோடியாக ஆடும் நடனம்.***
***3. கவர்ச்சியான உடை.***
***4. கண்ணாடியில் உடலைப் பார்ப்பது.***
***5. குளிக்கும் போது உங்கள் உடலை நீங்களே பார்க்கும்போது.***
***6. மென்மையாக மசாஜ் செய்யும்போது. இவற்றில் எதன் மூலமாக மன வெழுச்சிகள் ஊக்குவிக்கப்படுகின்றன?***

**சுஷ்மிதா:-** உணர்வைத் தூண்டும் இசையைக் கேட்டும் போது அனைவருக்கும் ஒரு கிளு கிளுப்பு உண்டாகிவிடுகிறது. அதற்கடுத்தபடியாகவே மற்றவையெல்லாம் என்று நினைக்கிறேன்.

**கேள்வி:-** ***செக்ஸியான ஜோக்குகள், செக்ஸியான பேச்சுக்களை விரும்புகிறீர்களா? நீங்களும் பேசுவீர்களா?***

**சுஷ்மிதா:-** நிச்சயமாக. அதற்கு மேல் நான் எதுவும் கூறமாட்டேன். அவை ரகசியம்.

உறவு என்பது உடல்ரீதியாக மட்டுமல்லாமல் மனரீதியாகவும் இருப்பதற்கு செக்ஸியான பேச்சுக்கள் அவசியம் என்று கருதுகிறேன்.

**கேள்வி:-** ***தாம்பத்யம் பற்றிய கீழ்கண்ட விளக்கங்களில் உங்களுக்குப் பிடித்தது?***

***1. தாம்பத்யம் என்றால் வெற்றி பெறுவது.***
***2. சந்தோசத்தை பகிர்ந்து கொள்வது.***
***3. உடல், உள விருப்பத்தை இருவருக்கிடயே வெளிப்படுத்திக் கொள்வது.***
***4. மன அழுத்தத்தை வெளிப்படுத்துவது.***
***5. அன்பைக் காட்டுவது.***
***6. அன்பு இருப்பதாக உணர்வது.***

**சுஷ்மிதா:-** சந்தோசத்தை கொடுத்து வாங்குவது. உடல் உளரீதியான விருப்பத்தை வெளிப்படுத்தல். அன்பைக் காட்டுவதும், அன்பை உணர்வதும்.

**கேள்வி:-** ***தாம்பத்யம் எப்போது வேடிக்கையாகத் தெரிகிறது?***

**சுஷ்மிதா:-** ஒருவர் உணர்ச்சிவசப்பட்டுக் கொண்டிருப்பதை பார்க்கும்போது.

## முகமத் அலிக்காக கண்ணீர்

அட்லாண்டா ஒலிம்பிக் பந்தயத்தின் துவக்கநாள் நிகழ்ச்சியில் ஒலிம்பிக் ஜோதியை முன்னாள் குத்துச்சண்டைவீரர் முகமத் அலி ஏற்றிவைத்தார். அவர்தான் ஒலிம்பிக் ஜோதியை ஏற்றிவைப்பார் என்ற செய்தி கடைசிவரை இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

நோய்காரணமாக பலவீனமாக காணப்பட்ட முகமத் அலி ஜோதியை வாங்கிய போது கைகள் நடுங்கின. எனினும் மன உறுதியுடன் சென்று அவர் ஜோதியை ஏற்றிவைத்தபோது பார்வையாளர்கள் பலர் கண்ணீர்விட்டனர்.

1960ம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் முகமத் அலி தங்கம் வென்றவர். அப்போது இன வேறுபாடு காரணமாக அவரைக் கிண்டல் செய்தனர். அதனைக் கண்டித்து தனது பதக்கத்தை ஆற்றில் வீசியெறிந்தவர் முகமத் அலி.



## அங்கும் வெடிகுண்டு

சுவீடன் நாட்டில் நடைபெற்ற ஒரு சம்பவம் இது.

சுவீடன் நாட்டின் தெற்கு பகுதியில் உள்ள ஒரு துணிக்கடைக்கு தொலைபேசியில் வெடிகுண்டு மிரட்டல் வந்தது.

உடனே பொலிசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. பொலிசார் பறந்துவந்து, துரிதமாக காரியத்தில் இறங்கினார்கள்.

கடையில் உள்ள அனைவரையும் வெளியேற்றிவிட்டு, கடைக்குள் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தினார்கள்.

ஒரு மூலையில் பார்சல் ஒன்று கிடந்தது. அதுதான் வெடிகுண்டாக இருக்க வேண்டும் என்று பொலிசார் ஊகித்து விட்டனர்.

தம்மோடு கொண்டுவந்த இயந்திர மனிதன் (ரோபோ) மூலமாக பார்சலை கடைக்கு வெளியே கொண்டுவந்து சேர்த்தனர்.

அதன்பின்னர் பெட்டியை மிக மிக மிக எச்சரிக்கையாக பிரித்த போதுதான் அது நடந்தது.

பாய்ந்து வெளியே வந்தன,
இரண்டு பூனைக்குட்டிகள்.

வெடிகுண்டுப் புரளி இல்லாத நாடே கிடையாது போலிருக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

# சிறுமிக்கு உதவும் சிட்டுக் குருவி



வெளிநாடுகளில் வீடு வீடாகச் சென்று பத்திரிகை போடுவது நல்ல வருமானமுள்ள தொழில். வெளிநாடுகளுக்கு சென்ற நம்மவர்கள் செய்யும் தொழில்களில் அதுவும் முக்கியமானது.

படத்தில் இருப்பவர் அவுஸ்திரேலிய சிறுமி. பெயர் ராச்செல் ரோஜர்ஸ் வயது 11. பள்ளிக்கு செல்லும் முன்பாக தனது சைக்கிளில் ஒரு ரவுண்ட் அடித்து வீடு வீடாக பத்திரிகை போடுவார். அதனால் தனது படிப்புச் செலவைத் தானே கவனிக்கிறார்.

வாடிக்கையாளர்களை கவரவும், தனக்கு ஒரு உற்சாகத்திற்காகவும் சைக்கிளில் சிட்டுக் குருவியுடன் தான் வலம் வருவாள். பத்திரிகைகளை போடும் வீடுகளுக்கு முன்னால் சைக்கிள் நின்றவுடன் ஹேண்டில் பாரில் உள்ள சிட்டுக்குருவி 'கீச், கீச்' என்று குரல் எழுப்பும். வீட்டுக்காரர்களுக்கும் அந்த சத்தம் கேட்பதில் ஒரு உற்சாகம். சிட்டுக் குருவி இருப்பதால் சிறுமியின் சைக்கிளில் 'பெல்' கிடையாது. சிட்டுக்குருவிக்கு 'புருபுட்கி' என்று பெயர் வைத்திருக்கிறாள்.

"சிட்டுக்குருவியின் கீச் ஒலி கேட்டுத்துதான் தனது வாடிக்கையாளர்கள் பலர் துயில் எழுகிறார்கள்" என்று பூரிப்போடு சொல்லுகிறாள் சிறுமி.

# மயக்கமா? கலக்கமா?




மனிதர்களுக்கு மட்டும் தான் நாளையைப் பற்றி யோசனைகள் இருக்குமா என்ன? இந்த சிம்பன்சி குரங்காரும் பலத்த யோசனையில் ஆழ்ந்திருக்கிறார் பாருங்கள்.

குரங்கிலிருந்து தோன்றிய மனிதர்கள் அநியாயமாக சண்டை போட்டு அழிந்து கொள்கிறார்களே என்ற கவலையோ?

மனிதன் மிருகத்தைவிட கீழாக மாறும்போது, மிருகம் மேலானதாகிவிடுகிறது.

பின்லாந்திலுள்ள மிருகக் காட்சி சாலையில் 'கிளிக்' செய்யப்பட்ட படம் இது. அநேகமான நாட்களில் இந்தச் சிம்பன்சியார் இப்படித்தான் தீவிர யோசனையில் ஆழ்ந்துவிடு கிறாராம்.

# தாயம்மாவான நாயம்மா



இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஐதராபாத்தில் எடுக்கப்பட்ட புகைப் படம்.

கன்றுக்குட்டி ஒன்று நாய்ப் பால் குடித்து வளருகிறது. இதன் பின்னால் ஒரு சோகக் கதை இருக்கிறது.

யதுய்யா என்பவர் ஒரு பசுவையும், நாயையும் வளர்த்து வந்தார். பசு ஒரு கன்று ஈன்றது. நாயும் நான்கு குட்டி போட்டது.

துரதிஷ்டவசமாக நான்கு நாய்க்குட்டிகளும் கார் ஒன்றில் மாட்டுப்பட்டு இறந்துவிட்டன.

அதுபோதாது என்று கன்றை ஈன்ற பசுவும் காணாமல் போய்விட்டது.

குட்டிகளை இழந்த நாய். தாயை இழந்த பசுக்கன்று. இந்த நிலையில் பசுக்கன்று ஒரு நாள் நாயிடம் வந்து பால் குடிக்க, நாயம்மாவும் பால் கொடுத்தது. அதன் பின்னர் நாயம்மாவிடம் பால் குடித்து வளருகிறது பசுக்கன்று.

உயரமான கன்றுக்குட்டிக்கு வசதியாக பால் கொடுக்கக் கூடிய உயரத்தில் இல்லாமல் போனேனே என்று நாயம்மா வருத்தப்படக்கூடும். யார் கண்டது.

# உண்ணும் மலையின் ஒரு நேர உணவுப் பட்டியல்



சுமோ மல்யுத்தத்தில் மோதும் மனித மலைகளைப் பார்த்து வியந்திருப்பீர்கள். எந்தக் கடையிலே எந்த அரிசி வாங்கினாய் என்று கேட்கத் தோன்றும்?

படத்தில் இருக்கும் சுமோ மல்யுத்த வீரரின் பெயர் ரொவான். ஜப்பான்காரர்கள் தான் சுமோ மல்யுத்தத்தில் சூரர்களாக இருக்கின்றனர். அவர்களை வீழ்த்திக் காட்டுகிறேன் என்று புறப்பட்டிருக்கிறார் ரொவான். இவர் அமெரிக்கர்.

ஜப்பான் மலைகளை ஒரு கை பார்க்க தயாராகிவிட்ட ரொவான் இப்போது சாப்பாட்டு விஷயத்தில் ஒரு கை பார்த்துவருகிறார்.

ஒரு நேரச் சாப்பாட்டுப் பட்டியல் இதுதான்.

காலை 11.30 மணிக்கு சாப்பாட்டு யுத்தம் ஆரம்பமாகிறது. 4 பெரிய பாத்திரத்தில் உணவு. அது வயிற்றுக்குள் போனதும், அதே மூச்சில் இரண்டு டசின் (24) கோழித் துண்டுகள். பின்னர் 20 முட்டைகள். அதற்குமேல் பச்சைக் காய்கறிகள். பின்னர் சற்றும் விட்டுக் கொடுக்காமல் 2 கிலோ அரிசிச் சோறு, வறுத்த மீன், பொரித்த நூடில்ஸ். இறுதியாக 5 லிட்டர் பால். சின்னதாக ஒரு ஏப்பம் விட்டபடி எழுந்து கொள்வார். மளமளவென்று சாப்பாட்டு வகைகளை கொடுக்க ஒரு சிஷ்யர் தயாராக இருக்கிறார். சாப்பிட்ட பின்னர் மூன்று மணி நேரம் தூக்கம்.

எடை 212 கிலோ. உயரம் 6 அடி. தனது வெற்றியின் இரகசியமே சாப்பாட்டில்தான் இருக்கிறது என்கிறார் ரொவான். என்ன மலைப்பாக இருக்கிறதா? இருக்காதா பின்னே!



# முடித்தியாகி

நேர்த்திக் கடனுக்கு மொட்டை போடுவார்கள். இவரோ நடிக்கும் பாத்திர நேர்த்திக்காக மொட்டை போட்டிருக்கிறார்.



வடிவுக்கரசி தான் 'குடும்பச் சங்கிலி' படத்திற்காக மொட்டை போட்டு முடித்தியாகம் செய்திருக் கிறார். தகவலும் படமும் வித்தியாசமாக இருந்ததால் தகவல் பெட்டியில் போட்டாச்!

# பந்தாடும் பாவை

உடலா, இது உடலா? ஒரு வில்போல் அன்றோ இருக்குது! நம் விழிகள் வியப்பால் அன்றோ விரியுது!

அட்லாண்டாவில் நடைபெற்ற ஒலிம்பிக்கில் ரிதமிடிக் ஜிம்னாஸ்டிக் போட்டியில் ஒரு வீராங்கனையின் சாகசம் இது. இவர் ருமேனியாவைச் சேர்ந்தவர். பெயர் அலினா. பந்தோடு விளையாடும் பாவை, நம் உள்ளத்தையும் வியப்பால் பந்தாடி விட்டாரல்லவா.



# தகவல் பெட்டி


## வீதியில் ஒரு ரயில்

ஒரு கட்டிடமே அசைந்து வருகிறதா? அல்லது ரயில் ஒன்று தண்டவாளத்தில் இருந்து தவறி தெருவீதியில் இறங்கிவிட்டதா? இரண்டுமேயில்லை.

இதன் பெயர் 'ரோடு டிரெயின்.' பார்வைக்கு ரயில் வண்டிமாதிரியே தெரியும். தெருவில் இது செல்லும் காட்சியே கல கலப்புத்தான்.

அவுஸ்திரேலியாவில் பண்ணை வேலைகளுக்கு இதனை பயன்படுத்துகிறார்கள்.

62 டயர்கள். 18 கியர்கள். 32 எயார் பிரேக்குகள். 525 குதிரை வலுக்கொண்ட எஞ்ஜின். இது மணிக்கு 85 மைல் வேகத்தில் செல்லக்கூடியது. இதன் நீளம் ஐம்பது மீட்டர். ஒரே தடவையில் 117 தொன் சுமையை சுலபமாக காவிச் செல்லும். இரண்டு அடுக்குகளை கொண்ட மூன்று பிரமாண்டமான பெட்டிகளைக் கொண்ட இராட்சத வண்டி இதுவாகும்.





படிப்பகம்

www.padippakam.com

## பிரசாந்த்-ஐஸ்வர்யா ராய்

பிரசாந்துக்கு சமீபகாலமாக படங்கள் எதுவும் சரியாக அமையவில்லை. கிருஷ்ணா, 'தாலுத் இப்ராகீம்' போன்ற படங்களும் சொல்லிக்கொள்ளும்படி அமையவில்லை.

பிரசாந்தின் மார்க்கெட்டில் மீண்டும் சூடுபிடிக்கக்கூடிய புதிய படம் ஒன்று தயாராகப்போகிறது.

'இந்தியன்' பட இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் ஹொலிவுட் படத் தயாரிப்பாளர்களான விஜய் அமிர்தராஜ் சகோதரர்கள் தயாரிக்கப்போகும் புதிய படத்தில் பிரசாந்த் நடிக்கப் போகிறார்.

பிரசாந்தின் ஜோடி யார் தெரியுமா? முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய். பிரசாந்த் பாடு கொண்டாட்டம்தான்.

## சல்மானின் காதல்

இந்தி நடிகர் சல்மான்கான் தற்போது கண்ணும் கருத்துமாக காதலித்துக் கொண்டிருப்பது சோமி அலியை. இந்தி நடிகையான சோமி அலியின் வீட்டில்தான் சல்மான்கான் தற்போது தங்கி யிருக்கிறார்.

சல்மான்கான் பல நடிகைகளுக்கு அல்வா கொடுத்தவர். சோமி அலியிடம் மட்டும் வசமாக மாட்டிக் கொண்டுவிட்டார் என்கிறார்கள்.

## யுவராணியின் புதிய காதலர்

'சக்தி' படத்தில் மாபெரும் எதிர்பார்ப்போடு நடித்து வருகிறார் யுவராணி.

'சக்தி' படத் தயாரிப்பாளர் குஞ்சுமோன் யுவராணியை பெரிய நடிகையாக்கியே தீருவது என்று ஒரு சபதமே செய்திருக்கிறார். சபதத்தை நிறைவேற்றுவதற்காக யுவராணியை தனது நேரடிக் கவனிப்பில் தங்க வைத்திருக்கிறார் குஞ்சுமோன்.

குஞ்சுமோனின் மனைவிக்கு விஷயம் தெரிந்துவிட்டது. இருவரும் தங்கியிருந்த பங்களாவுக்கு அதிரடி 'விசிட்' செய்திருக்கிறார் குஞ்சுமோனின் மனைவி. கையும் களவுமாக மாட்டிக் கொண்டார்கள் இருவரும்.

படத்தின் கதையைப் பற்றி விரிவாக விவாதிக்கவே யுவராணியிடம் சென்றதாகக் கூறினாராம் குஞ்சுமோன். நடிகையும், தனது கணவரும் இருந்த நிலையைச் சுட்டிக் காட்டிய மனைவி, "விவாதிக்கும் இலட்சணமா இது?" என்று முகத்துக்கு எதிரேயே கேட்டுவிட்டார்.

மனைவியின் கண்டிப்பையும் மீறி யுவராணியுடன் தொடர்ந்து தீவிர 'கதை விவாதத்தில்' ஈடுபட்டு வருகிறார் குஞ்சுமோன்.

ஏற்கனவே விஜய், விக்னேஷ் ஆகியோருடனும் கிசுகிசுக்கப்பட்டவர் யுவராணி. இடையில் பட வாய்ப்புக்கள் இல்லாமல் இருந்த யுவராணிக்கு குஞ்சுமோன்தான் கைகொடுத்து உதவியிருக்கிறார்.

இதற்கிடையே 'சக்தி' படத்தில் தனது ஜோடியாக நடிக்கும் வினித்மீதும் யுவராணி மையல் கொண்டிருப்பதாக ஒரு கிசுகிசு பரவியது. அதனைக் கிளப்பி விட்டவர் குஞ்சுமோன்தானாம். தனக்கும், யுவராணிக்கும் இடையே உள்ள நெருக்கத்தை மறைக்க குஞ்சுமோன் செய்த தந்திரம் அது.



யுவராணி
படம் - சக்தி

## சுகன்யா 'டூப்'

இந்தியில் பிஸியாகிக்கொண்டிருப்பதால் தமிழில் முடிக்கவில்லை என்று சொல்லிக்கொண்டிருந்த நடிகைகளின் பட்டியலில் சுகன்யாவும் சேர்ந்துவிட்டார்.

மார்க்கெட் டல்லாகிவிட்டால் இப்படியெல்லாம் கதைவிடுவது புதிதல்ல.

பாவம் சுகன்யா, இந்தியில் அவருக்கு கிடைக்கும் ஒரு வாய்ப்பு, மொழிமாற்றப்படும் இந்தியன் படம் மட்டும்தான்.

## ஆள் கிடைத்தது

மணிரத்னத்தின் 'ஆனந்தம்' படத்தில் நானா படேகர், மம்முட்டி, அரவிந்தசாமி, சத்யராஜ் ஆகியோர் நடிக்க மறுத்த பாத்திரத்தில் நடிக்க ஆள் கிடைத்துவிட்டார். 'ஆசை' பட வில்லன் பிரகாஷ்ராஜ் அந்தப் பாத்திரத்தில் நடிக்க சம்மதித்துவிட்டார்.

## தயாராகிறது காதல் கிராமம்

வினித், தபு, அப்பாஸ் ஆகியோர் நடிக்க பிரமாண்டமாக உருவாகும் படம் 'காதல் தேசம்'.

அந்தப் படப் பெயரின் சாயலில் இப்போது மற்றொரு படம் தயாராகிறது. படத்தின் பெயர்: 'காதல் கிராமம்.'

'ராசாவே உன்னை நம்பி', 'பொங்கி வரும் காவேரி' போன்ற படங்களை இயக்கிய டி.கே.போஸ் 'காதல் கிராமம்' படத்தை இயக்குகிறார்.

புதுமுகங்கள் காதல் ஜோடிகளாக அறிமுகம் செய்யப்படுகிறார்கள். பழைய முகங்களும் உண்டு. விஜயகுமார், நாசர், செந்தில், சில்க் சுமிதா, சார்லி ஆகியோரும் நடிக்கின்றனர்.





அருண்குமார்-மந்த்ரா
படம்- பிரியம்

## பதிலுக்குப் பதில்

முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராயும், சுனில் ஷெட்டியும் வாயை வைத்துக் கொண்டு சும்மா இருப்பதில்லை. வாய்ப்போரே நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

பெண்களைப் பற்றி கிண்டலடித்தார் சுனில் ஷெட்டி. "பெண்கள் காதலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. யாரை வேண்டுமானாலும் காதலிப்பார்கள்" என்று சொன்னார் சுனில் ஷெட்டி.

உடனே சூடாக திருப்பிக் கொடுத்திருக்கிறார் ஐஸ்வர்யா ராய். "ஆண்கள் பெண்களை ஏமாற்றவே நினைக்கிறார்கள். ஆனால் அவ்வளவு சுலபமல்ல. எல்லா ஆண்களுமே குழந்தைகளைப் போன்றவர்கள்" என்று சொல்லியிருக்கிறார் அழகி.

"பெண்கள் ஏமாறுவதற்கு பெண்களின் முட்டாள்தனம்தான் காரணம்" என்று பதிலடி கொடுத்திருக்கிறார் சுனில் ஷெட்டி. இது தேவைதானா.

## கலக்கலான காதல் கோட்டை

'ஆசை' படத்தின் வெற்றிக்குப் பின்னர் இளம் ஹீரோக்களில் முதலிடம் பெற்றவர் அஜித்குமார்.

'ஆசை' படத்தின் பின்னர் 'வான் மதி' படமும் ஹிட்டானது. 'மைனர் மாப்பிள்ளை' படம் சூப்பர் ஹிட்டாகாவிட்டாலும் வசூலுக்கு வஞ்சகம் பண்ணவில்லை.

தற்போது வெளியாகியுள்ள 'காதல் கோட்டை' படம் அஜித்குமாரை உச்சிக்கு கொண்டுசென்று விட்டது. பலத்த வரவேற்போடு திரையிடப்பட்ட இடமெல்லாம் தமிழ்நாட்டில் வெற்றி நடைபோடுகிறது 'காதல் கோட்டை'.

சண்டைக்காட்சிகளிலும், காதல் காட்சிகளிலும் வெளுத்து வாங்கியிருக்கிறார் அஜித். ஹீரா வளைந்தும், நெளிந்தும் ரசிகர்களை கவர்ச்சிக் கோட்டைக்குள் இழுத்துச் சென்றாலும், நடிப்பில் தேறி மனதில் இடம்பிடிப்பவர் தேவயாணிதான்.

நம்பர் வன் காதல் படம் என்று தமிழகப் பத்திரிகைகள் பாராட்டியுள்ளன. கல்லூரி மாணவ, மாணவிகள் கூட்டம் திரையரங்குகளை மொய்க்கிறது. நம்நாட்டில் வீடியோவில் பார்க்கலாம்.

அஜித்குமாரின் காட்டில் அடைமழை. தயாரிப்பாளர்கள் அவரை துரத்திக் கொண்டிருக்கிறார்கள். போதாக் குறைக்கு நடிகைகள் வலைவீசிக் கொண்டிருக்கிறார்கள்.

ரஜின
ரஜினி
தயாரிப்பா
நீண்டுகொ
'குபேர
ரஜினியின்
செய்து
ரஜினி
நடிப்பார்
"நான்
என்று உ
ஒரு நடி
"நீதா
என்று ரஜ்
என்று பூ
ரஜினி
ராயைவிட
அந்த
யோகம்தா

நெப்
'பகவ
சங்கவியும்
"ஆத்
மாமா, ஆ
என்றொ
படமாக்க
இயக்
போலியன்
வுக்கு நெ
சங்க
நெப்போ
புரண்டு
தைரியத்
காட்டிவி
வரை பூர
காட்சி
மாகக்
தொறுங்
கினாரா



படிப்பகம்

# சினிவிசிட்




## ஜூகியின் ஜோக்

முன்னாள் இந்திய அழகி நடிகை ஜூகி சாவ்லாவுக்கும், தொழிலதிபர் ஜெயின் மேத்தாவுக்கும் இடையே காதல் என்று பரவலாகப் பேசப்பட்டது. காதலாவது, கத்தரிக்காயாவது ஒன்றுமேயில்லை என்று முன்னர் மறுத்தார் ஜூகி சாவ்லா.

தற்போது மறுப்பு வாபஸ். தங்கள் இருவருக்கும் விரைவில் திருமணம் என்று ஜூகி சாவ்லாவே அறிவித்திருக்கிறார்.

இதற்கிடையே 'லோபர்' படத்தில் ஜூகி சாவ்லா நடித்த ஒரு காட்சி பற்றி கடும் விமர்சனம் கிளம்பியிருக்கிறது.

'லோபர்' படத்தில் குட்டைப் பாவாடை அணிந்துவருவார் ஜூகி சாவ்லா. அந்தப் பாவாடையில் தனது முகத்தை துடைத்துக் கொள்வார் ஹீரோ அனில் கபூர். அக்காட்சிதான் விமர்சனத்திற்கு உள்ளானது.

அதுபற்றி ஜூகி சாவ்லா கவலைப் படவில்லை "நல்ல வேளை அனில் பாவாடையில்தான் முகத்தை துடைத்தார். எனது சட்டையை உருவித் துடைக்காமல் விட்டாரே" என்று ஜோக்கடிக்கிறார் ஜூகி சாவ்லா.

## செந்திலும் உதையும்

ஜெயராம், சுகன்யா நடிக்கும் படம் 'பரிவட்டம்'. படத்தில் செந்திலுக்கு வயதான வேடம். 70 வயது கிழவனாக, கவுண்டமணியின் தாய்மாமனாக நடிக்கிறார் செந்தில்.

வடிவேலு, செந்தில் இருவரையும் ஒன்றாக நடிக்கவைத்தாலும் ரசிகர்களிடம் வரவேற்புக் கிடைக்காது. கவுண்டமணியும், வடிவேலுவும் இணைந்து நடித்தாலும் எடுபடாது. அதனால் கவுண்டமணி பந்தா காட்டினாலும், ஊதியத்தை உயர்த்தினாலும் கவுண்டமணி, செந்தில் ஜோடியைத்தான் தயாரிப்பாளர்கள் நாடவேண்டி இருக்கிறது.

அதென்னவோ தெரியாது கவுண்டமணி என்னை உதைத்தால்தான் ரசிக்கிறாங்க. வடிவேலு உதைத்தால் ரசிகர்கள் முறைக்கிறாங்க" என்கிறார் செந்தில்.

## ...ளிக்கு இரண்டு ஜோடிகள்


...முரளி கதாநாயகனாக நடிக்கும் ... படம் 'பூமணி'. இரண்டு ...நாயகிகள் இருந்தால்தான் ஒரு ...விறுப்பு, ரசிகர்களுக்கும் ஒரு ...றுப்பு என்று கருதப்பட்டுவரு... 'பூமணி' படத்திலும் முரளிக்கு ...டு ஜோடிகள். ஒருவர் தேவயாணி. ...னொருவர், ரேஷ்மா. வில்லனாக ...பவர் பிரகாஷ்ராஜ்.

மணிவண்ணன், வினுசக்கர...தி, பவானி ஆகியோரும் நடிக்கின்ற...

...தை, திரைக்கதை, வசனம் எழுதி ...குபவர் மு.களஞ்சியம். இவர் ...குநர் வசந்த்திடம் உதவி இயக்கு...க இருந்தவர். களஞ்சியத்திடம் ... சரக்கு இருக்கிறது என்பது ... படம் வந்த பின்னர்தான் தெரியும்.

இசை, இளையராஜா. பாடல்கள் மு.மேத்தா, பழனி பாரதி.




## இப்போது தபு

தெலுங்கு நடிகரும், நடிகை அமலாவின் கணவருமான நாகார்ஜுன் நடிகைகள் விடயத்தில் படு சபலிஸ்ட் என்று பெயரெடுத்தவர்.

ரம்யா கிருஷ்ணன், நக்மா, மனிஷா கொய்ராலா போன்ற நடிகைகளுடன் வெகு நெருக்கமாகப் பழகியவர் நாகார்ஜுன்.

தற்போது நாகார்ஜுனின் பார்வை தபு பக்கம் திரும்பியிருக்கிறது. நாகார்ஜுன், தபு ஜோடியாக நடித்த 'சிஷ்யந்தரி' என்னும் படம் சூப்பர் ஹிட்டானது. அதனையடுத்து மீண்டும் ஒரு படத்தில் அதே ஜோடி நடிக்கிறது. புதிய படத்தின் பெயர் 'நின்னெ பெல்லாடுதா'.

தபுவுக்காகப் பலமாக சிபாரிசு செய்கிறார் நாகார்ஜுன். இருவரும் படப்பிடிப்பு தளங்களிலும் கமராவுக்கு முன்னாலும், பின்னாலும் பசைபோல ஒட்டிக்கொள்கிறார்களாம்.

## இந்தியன் சாதனை

'இந்தியன்' படம் பல சாதனைகளை முறியடித்துக் கொண்டிருக்கிறது. சென்னையில் மட்டும் திரையிடப்பட்ட 60 நாட்களுக்குள் மொத்த வசூல், 1 கோடியே 15 இலட்சம். (இந்திய பண மதிப்புப்படி)

இந்தியாவில் 200 பிரிண்டுகள் போடப்பட்ட முதலாவது படமும் 'இந்தியன்' தான்.

கடந்த ஏழு மாத காலத்தில் வெளியான தமிழ்ப் படங்களில் வசூல் ரீதியாக உள்ள பட வரிசை.

1. இந்தியன்
2. உள்ளத்தை அள்ளித்தா.
3. பூவே உனக்காக.
4. காலம் மாறிப் போச்சு.
5. சிறைச்சாலை
6. இரட்டை ரோஜா.

## ...ின் ஜோடி ரம்பா

...ன் புதிய படத்தின் பெயர், இயக்குநர் ...யார், யார், யார்? விடையில்லாமல் ...ருக்கும் வினா அதுதான்.

'மேஸ்திரி' ஆகிய பெயர்களை ...திறுவனமான ரஜினி ஆர்ட்ஸ் பதிவு ...ருக்கிறது.

புதிய படத்தில் ஐஸ்வர்யாராய் ...று எதிர்பார்க்கப்பட்டது.

ரஜினியின் புதிய பட நாயகி" ...கச் சொல்லிக்கொண்டிருக்கிறார் ...ந்த நடிகை ரம்பா.

...ர் படத்தில் ஜோடி. தயாராக இரு. ...ரே என்னிடம் சொல்லி விட்டார்" ...டி சொல்லி வருகிறார் ரம்பா.

புதிய படத்தில் நடிக்க ஐஸ்வர்யா ...ராவுக்கு அதிக வாய்ப்பிருக்கிறது. ...ப்புக் கிடைத்தால் ரம்பா பாடு...

## வயது பதினெட்டு

சுரேஸ் கிருஷ்ணா இயக்கத்தில் தெலுங்கில் வெற்றிபெற்ற படம் ஒன்று தமிழுக்கு வருகிறது. தமிழில் 'நக்கீரன்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

வெங்கடேஷ், ரம்யா கிருஷ்ணன் ஜோடியாக நடிக்கின்றனர்.

'அம்மன்' படத்துக்கு இசையமைத்த ஸ்ரீலேகா என்னும் 18 வயதுப் பெண்தான் நக்கீரன் படத்துக்கும் இசையமைத்துள்ளார்.

## பெயர் சூட்டல்

சரத்குமார் அரசியலில் குதித்த பின்னர் அவரிடம் பிரச்சனைகளை சொல்லி தீர்வுகாணப் பலர் படையெடுக்கின்றனர். முடிந்தால் உடனுக்குடன் தீர்த்துவைக்கிறார்.

தமது பிள்ளைகளுக்கு பெயர் சூட்டுமாறும் பலர் வந்து கேட்கிறார்கள். 'சுந்தரேசன்', 'அரவிந்தன்', 'நேதாஜி' போன்ற பெயர்களை சூட்டி மகிழ்கிறார் சரத்.

## ...லியனின் வெட்கம்

...ங்' படத்தில் நெப்போலியனும், ...கவன், மனைவி.

...ரி உடம்பு முழுக்க அனலடிக்குது ...த ஒரு மருந்து சொல்லுமாமா" ...லு கிளுப்பான பாடல்காட்சி ...து.

...காட்சியை விளக்கியபோது நெப... ...லில் கூச்சப்பட்டாராம். அந்தள...மான காட்சி.

...டுக்கையறையில் படுத்திருக்க... அவர் மேல் சரிந்து கட்டிப்...க வேண்டும். சங்கவி கொடுத்த ...சற்றுக் கூடுதலாகவே வேகம் ... நெப்போலியன். காட்சி முடியும் ...த்துழைப்பு கொடுத்தார் சங்கவி. ...நபின் நெப்போலியனை செல்ல...ந்துக் கொண்டாராம். "எலும்பு ...ந்தால் என்னாவது?" என்று சிணுங்...கவி.

## மினி

* மலையாளத்தில் மம்முட்டி நடித்து வெற்றி பெற்ற 'ஹிட்லர்' படம் தமிழில் தயாராகிறது. இதில் பிரபு கதாநாயகனாக நடிக்கிறார். இதே வேளையில் 'ஹிட்லர்' தெலுங்கிலும் தயாராகப் போகிறது. தெலுங்கில் சிரஞ்சீவி நடிக்கவுள்ளார்.

* கமலின் சொந்தப் படமான 'மகளிர் மட்டும்' இந்தியில் 'லேடீஸ் ஒன்லி' என்ற பெயரில் தயாராகவுள்ளது. ரேவதி, ஊர்வசி நடித்த வேடங்களில் கரிஷ்மா கபூர், ஜூஹி சாவ்லா நடிக்கிறார்கள். கதாநாயகன் இன்னும் முடிவாகவில்லை.

* கே.டி.குஞ்சுமோன் தயாரித்த 'சிந்துநதிப்பூ' படத்தில் அறிமுகமாகி, அந்தப் படத்துடனேயே காணாமல் போனவர் ராஜகுமாரி. இவர் தற்போது தனது பெயரை ரமீதா என்று மாற்றிக்கொண்டு படவாய்ப்புக்களைத் தேடி வருகிறார்.

* சத்யராஜ் புதிதாக நடிக்கும் படமொன்றுக்கு 'இந்தியா டுடே' என்ற பெயரும், ஆர்.கே.செல்வமணி இயக்கத்தில் சரத்குமார் நடிக்கும் படத்திற்கு 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

* இளையராஜாவின் மகனான கார்த்திக்ராஜா முதன் முறையாக இசையமைத்துள்ள 'மாணிக்கம்' படம் வருவதற்குள் ஏழு படங்களுக்கு இசையமைத்துவருகிறார். அத்துடன் முதன்முறையாக 'உல்லாசம்' படத்தில் பாடல் ஒன்றையும் பாடியுள்ளார்.

* 'இந்தியன்' படத்தின் இயக்குநரான ஷங்கர் தனது மகளுக்கு ஐஸ்வர்யா என்று பெயர் வைத்துள்ளார். ரஜினி, பிரபுவின் மகள்களின் பெயரும் ஐஸ்வர்யாதான்.

* சத்யராஜ், சரத்குமார், ஆனந்தராஜ் போன்றோர் சினிமாவுக்காக மொட்டையடித்து நடித்திருந்தனர். இந்த வரிசையில் முதன் முறையாக தமிழில் நடிகை ஒருவர் மொட்டையடித்துள்ளார். 'குடும்பச் சங்கிலி' படத்திற்காக வடிவுக்கரசி மொட்டையடித்து நடிக்கிறார்.

* பாரதிராஜாவால் 'புதிய வார்ப்புகள்' படத்தில் பாக்யராஜிற்கு ஜோடியாக அறிமுகப்படுத்தப்பட்டவர் ரதி அக்னிஹோத்ரி. இவரது சகோதரர் அதுல் அக்னிஹோத்ரி சில இந்திப்படங்களில் நடித்துள்ளார். விரைவில் அதுல் தமிழ்படமொன்றில் அறிமுகமாகவுள்ளார்.

* 'மாணிக்கம்', 'அரவிந்தன்' ஆகிய படங்களைத் தயாரித்து வரும் டி. சிவா அடுத்து நெப்போலியன் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கிறார். 'வீரப்பன்' என்று இப்படத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது.

* ஜெயராம்- விஜயசாந்தி இணைந்து நடிக்க 'சத்யஜோதி' என்ற பெயரில் படமொன்று தொடங்கப்பட்டது. இப்போது அந்தப் படத்திட்டத்தைத் தயாரிப்பாளர்கள் கைவிட்டுவிட்டார்கள்.

## 'மந்த்ரா' 50 கிலோ

பிரியம் படத்தில் கதாநாயகியாக நடிக்கும் மந்த்ராவுக்கு இப்போதுதான் பதினாறு வயது. அவர் பிறந்த தேதி. 29.6.80 உயரம், ஐந்து அடி மூன்று அங்குலம். எடை, ஹீரோக்கள் சுலபமாகத் தூக்கக்கூடிய 50 கிலோ.

பூர்வீகம் ஆந்திரா. பிறந்தது, வளர்ந்தது எல்லாம் சென்னையில்.

பல படங்களில் குழந்தை நட்சத்திரமாக நடித்திருக்கிறார். நடிகர் விஜயகுமாரும், அவர் மனைவி நடிகை மஞ்சுளாவும்தான் 'மந்த்ரா' என்று பெயர் சூட்டினார்கள். சொந்தப் பெயர், விஜயா.




www.padippakam.com
படிப்பகம்

# முக அமைப்பும் குண இயல்பும்

முக அமைப்பை வைத்து, ஒருவருடைய குணாதிசயங்களைத் தெரிந்து கொள்ள சில குறிப்புக்கள்:

**புருவங்கள்:**

★ சமமாக இருந்தால்....
எப்போதும் ஒரே மாதிரி சிந்திப்பார்கள். மற்றவர்களது ஒழுங்கீனங்களை பொறுத்துக் கொள்ள மாட்டார்கள்.

★ மிக அடர்த்தியாக இருந்தால்....
ஆதிக்க குணமுடையவர்களாக இருப்பார்கள்.

★ வளைந்திருந்தால்....
மிகச் சுலபமாக மனமுடைந்து போவார்கள்.

★ நேராக இருந்தால்....
எதைச் செய்தாலும் அதிக சிரத்தையுடனும், ஈடுபாட்டுடனும் செய்வார்கள்.

★ மிக உயரமாக இருந்தால்.....
ஒவ்வொரு வார்த்தையையும் யோசித்துப் பேசுவார்கள்.



**கண்கள்:**

★ இமைகளே இல்லாமல் இருந்தால்....
எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடியவர்களாக இருப்பார்கள்.

★ கண்கள் வட்டமாக இருந்தால்....
ஒரு விஷயத்தைப் பற்றி முழுவதும் தெரியாமல் அந்தப் பற்றி ஆதரித்தோ, மறுத்தோ பேசமாட்டார்கள்.

★ கண்களின் கீழ்ப்பகுதி வளைந்திருந்தால்....
கற்பனை வளம் மிக்கவராகவும், வெளிப்படையாகப் பேசக்கூடியவராகவும் இருப்பார்கள்.

**மூக்கு:**

★ நீளமாக இருந்தால்.....
கடினமாக உழைக்கக்கூடியவர்களாகவும், பழமை விரும்பிகளாகவும் இருப்பார்கள்.

★ நேராகவும் நீளமாகவும் இருந்தால்....
அதி புத்திசாலியாக இருப்பார்கள்.

★ அகலமாக இருந்தால்....
சாதனையாளர்களாகவும், துணிச்சல் மிக்கவராகவும் இருப்பர்.

★ மிகப் பெரியதாக இருந்தால்....
தனித்திறமை வாய்ந்தவர்களாக இருப்பர்.

**கன்னங்கள்:**

★ மிக அகலமாக இருந்தால்....
செக்ஸில் அதிக நாட்டமுள்ளவராக இருப்பார்கள்.

★ வட்டமாக இருந்தால்....
விருந்தோம்பலில் சிறந்தவர்களாகவும், இரக்க குணமும், தாராள மனப்பான்மையும் உள்ளவர்களாக இருப்பார்கள்.

★ மெல்லியதாக இருந்தால்....
யாரிடமும் அதிகம் பேசாத, தயக்க சுபாவமுள்ளவர்களாக இருப்பார்கள்.

**உதடுகள்:**

★ கீழ் உதடு பெரிதாக இருந்தால்.....
மிகச் சாதுர்யமாகப் பேசக்கூடியவர்கள்.

★ மேல் உதடு பெரிதாக இருந்தால்....
மனதில் படுவதை வெளிப்படையாகப் பேசக் கூடியவர்களாக இருப்பார்கள்.

★ வாய் பெரியதாக இருந்தால்....
கலகலப்பான பேர்வழிகளாக இருப்பார்கள்.

★ சிறியதாக இருந்தால்....
நேர்மையானவர்களாக இருப்பர்.

**முகம்:**

★ ஓவல் வடிவமாக இருந்தால்...
உறுதியான மனம் படைத்தவர்களாகவும், எந்த விஷயத்திற்கும் சட்டென முடிவெடுப்பவர்களாகவும், எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்கப் பாடுபடுபவர்களாகவும் இருப்பார்கள்.

★ சதுரமாக, அகலமாக இருந்தால்....
இலட்சிய மனிதர்களாகவும், சுறுசுறுப்பானவர்களாகவும் இருப்பார்கள்.

★ நெற்றி அகலமாக இருந்தால்....
புத்திசாலிகளாவும், பிடிவாதக்காரர்களாகவும் இருப்பர்.

இவையாவும் நூறுவீதம் சரியாகத்தான் இருக்கும் என்று நினைக்கவேண்டாம்.

# சின்னச் சின்ன விஷயங்கள்

## சிறைப்படுத்தாமல் பார்த்துக்கொள்ளுங்கள்!

உங்களுக்கென்று நிச்சயமாக ஒரு திறமை உண்டு. அந்தத் திறமையை வெளிக் கொண்டு வந்து சாதனைப்படிகளில் ஏறிப் புகழ்பெற விரும்புகிறீர்களா? சின்னச் சின்ன விஷயங்கள் உங்களைச் சிறைப்படுத்தாமல்- பாதிப்பிற்கு ஆளாகாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.

பெரிய சாதனைகள் புரிய வேண்டுமானால் சின்னச் சின்ன விஷயங்களில் சிக்காமல், சிறைப் படாமல் இருக்க வேண்டும். காலில் முள் தைத்தால் காலையா வெட்டுகிறோம்? அதே போல கண்ணில் தூசி விழுந்தால் உறுத்தட்டுமே என்று அதை விட்டுவிடுவீர்களா?

அதேபோல தூசிக்குச் சமமான சின்ன விஷயங்கள் உங்களை உறுத்தாமல் உதறித் தள்ளி விட்டுச் சாதனை புரியக் கிளம்புங்கள்.

உங்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக இருப்பதே உங்கள் 'மூட் அவுட்'தான். மூட் அவுட் உங்கள் முன்னேற்றத்தை மட்டுமன்றி உங்கள் உடல் நலத்தையும் பாதிக்கும்.

அதேபோல் உங்களை எதிர்நோக்கும் ஏமாற்றங்களையும் தாங்கிக் கொள்ள வேண்டும். எதற்கெடுத்தாலும் பாராட்டப்பட வேண்டும் என எதிர்பார்த்தால் ஏமாற்றம் தான் மிஞ்சும். எனவே ஏமாற்றத்தைக் கண்டு தளர்ந்து விடாதீர்கள்.

மேலும் உங்கள் திறமையை மற்றவர்கள் குறை கூறி விமர்சிக்கும்போது அந்தப் பாதிப்பிலிருந்து உங்களைக் காத்துக் கொள்ள, உங்கள் திறமையை விமர்சிக்க இவர்கள் தகுதியானவர்களா எனக் கண்டறியுங்கள். தகுதி உடையவரானால் உங்கள் திறமையில் உள்ள குறையை அலசி ஆராய்ந்து அதைச் சரிப்படுத்திக் கொண்டால் பிரச்சனையே இல்லை.



சின்னச் சின்ன விஷயங்கள் உங்களைச் சிறைப்படுத்தாமல் இருக்கக் குறைகளைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திருத்திக் கொண்டாலே போதும்.

ரோஜாக்களுக்கிடையே கிடக்கும் முட்களுக்காக வருத்தப்படாமல் முட்களுக்கிடையே பூத்திருக்கும் ரோஜாவிற்காகச் சந்தோஷப்படுங்கள்.

# மெத்தையும்-தலையணையும்

## உங்களுக்காக சில யோசனைகள்

இன்று மெத்தை, தலையணைகளில் எத்தனையோ வகைகள் இருந்தாலும் அவரவர் வசதி, வாய்ப்புக்களுக்கேற்ப அவற்றை வாங்கும் முன் சில முக்கிய விஷயங்களைக் கவனத்தில் கொள்வது அவசியம்.

☛ மெத்தை மிகவும் கெட்டியாக இருக்கக்கூடாது. அது போலவே மிகவும் மெல்லியதானதாகவும் இருக்கக்கூடாது. உடலின் எடை முழுவதும் ஒரே விதமாய் இருப்பதில்லை. தோள்களில் இருந்து இடுப்பு எலும்புகள் வரை உடலின் எடை அதிகளவு இருக்கும். இப்பாகத்தில் தான் 'அழுத்தப்புள்ளிகள்' இருக்கின்றன. மெத்தை கெட்டியானதாக இருந்தால் இப்புள்ளிகள் தொல்லைகளாகி தூக்கம் சரியாக வராது. அதுபோலவே, மெத்தை மிகவும் மென்மையானதாக இருந்தால் இடுப்பு வலிக்கு அது காரணமாகி விடும். நன்றாக நிமிர்ந்து நிற்கும்போது முதுகுத் தண்டு எப்படி நேராக வளையாமல் இருக்குமோ அதே போல் தூக்க நிலையிலும் அப்படியே உடலை வைத்து உறங்குவதே சரியான முறையாகும். அதனால் மெத்தை முதுகெலும்பைத் தாங்குவதாக இருக்க வேண்டும்.

☛ மனிதனின் உயரத்தை விட மெத்தை குறைந்தது 15 சென்டிமீட்டர் கூடுதல் நீளமாக இருக்க வேண்டும். அதேபோல, இரண்டு கைகளும் தலைகளும் வைத்துத் தூங்கும் அளவுக்கு அகலம் கொண்டதாகவும் மெத்தை இருக்க வேண்டும்.

**மெத்தை வாங்கும் முன்.....**

மெத்தை வாங்குவது எவ்வளவு அவசியமோ அந்த அளவு 'தரம்' வாய்ந்ததவையாக- நாலைந்து கடைகள் ஏறி, இறங்கி வாங்குவதும் முக்கியமாகும். சோம்பல் பட்டு 'விற்பனையாளர்கள்' தேனொழுகும் பேச்சில் மயங்கி வாங்கி விட்டுப் பின்னர் அவதிப்படுவதில் பலனில்லை. அவ்வாறே வெறும் கண்ணால் பார்த்துவிட்டு வாங்குவதோடு நில்லாமல் படுக்கையின் மீது அமர்ந்து அதன் தரத்தையும் சோதிக்க வேண்டும்.



**கடைப்பிடிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை:**

ஸ்பிரிங் மெத்தையை வாங்கியவர், அதை 15 நாட்களுக்கு ஒரு முறை திருப்பிப்போட்டுப் பயன்படுத்த வேண்டும். சிறிது நாட்களுக்குப் பின்- மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறையோ- இப்படி மாற்றிப் போட்டு உபயோகிப்பது போதுமானது. ஸ்பிரிங் படுக்கையை எப்போதும் மடிக்கவே கூடாது. படுக்கையின் உறை சரியான அளவில் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஃபோம் மெத்தைகளையும் 15 நாட்களுக்கு ஒருமுறை நன்றாகத் தட்டி வெய்யிலில் காய வைக்க வேண்டும்.

தலையணையை வாங்கும்போது தரத்தை அறிந்து கொள்ள, அதன் மீது ஒரு 'குத்து' குத்திப் பாருங்கள். உடனே அது பழைய நிலைக்குத் திரும்பி விட்டதா? சந்தேகமில்லாமல் அது நல்ல தரமானதே!

# அழட்டும்- தடுக்காதீர்கள்!



பச்சிளங்குழந்தைகள் அடிக்கடி அழும். பொதுவாக எந்தக் குழந்தையும் அழுவது நல்லது. குழந்தை அழும்போது நுரையீரல் நன்கு வேலை செய்வதால் சளி கட்டாமல் தடுக்கப்படுகிறது. சளி இருந்தாலும் குழந்தை அழும் வேகத்தில் இருமல் உண்டாகி சளி வெளிப்படுத்தப்படும்.

ஆனால் குழந்தை தொடர்ந்து விடாமல் அழுதால் அதன் காரணத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். குழந்தை வயிற்றுவலி காரணமாக அழலாம். இந்த நேரத்தில் குழந்தைக்கு உணவு கொடுத்தால் வலி அதிகமாகி விடும். பசிக்கும், வயிற்று வலிக்கும் உள்ள வேறுபாட்டைத் தாயாரால் கண்டு பிடிக்க முடியும். பசியினால் அழும் குழந்தையைத் தூக்கினால் குழந்தையின் அழுகை நின்று விடும். ஆனால் வலியால் அழும் குழந்தையைத் தூக்கினால் அழுகை நின்று விடாது. வயிற்றைத் தொட்டாலே அழுகை மேலும் அதிகரிக்கும்.

# புன்னகையில் மின்சாரம்

## பற்களைக் கவனியுங்கள்

கே.ஆர்.விஜயாவைப் 'புன்னகை அரசி' எனப் பாராட்டுவார்கள். ஏன் அவர் மட்டும் தான் புன்னகை அரசியா? நீங்களும் ஆகக் கூடாதா? இல்லை முடியாதா? முயன்றுதான் பாருங்களேன்!

'முத்துப் போன்ற பற்கள் இல்லையே!' என முகம் கோண வேண்டாம். 'நமக்கு தெற்றுப் பற்கள் அமைந்து விட்டனவே' என்று திடுக்கிடவும் வேண்டாம்.

பின்காணும் குறிப்புகளைக் கவனமாகப் பின்பற்றுங்கள். தொடர்ந்து கடைப்பிடியுங்கள். நீங்களும் நிச்சயமாய்ப் புன்னகை அரசியாய் மாற முடியும்.

1. . முதலாவதாக, பற்களைச் சாம்பல், செங்கல்பொடி கொண்டு துலக்கக் கூடாது. அவை பற்களின் பாதுகாவலனான எனாமலைச் சிதைத்து விடும். தரமான பற்பசை, பற்பொடி இவற்றையே பயன்படுத்த வேண்டும். உமிச் சாம்பலை மூலப் பொருளாகவைத்து, மலிவு விலையில் விற்கப்படும் சாதாரண பற்பொடிகளை உபயோகிக்கவே கூடாது.
2. பற்களைச் சுத்தம் செய்வதற்கு உபயோகிக்கும் 'ருத் பிரஷ்'களை வருடக் கணக்கில் வைத்துக் கொண்டிருக்கக்கூடாது. குறைந்தது மாதம் இருமுறையாவது ருத் பிரஷ்ஷை மாற்றி விட வேண்டும்.
3. பற்கள் மஞ்சள் கறை பிடித்து அசுத்தமாக உள்ளதா? காலை, மாலை இரண்டு வேளைகளிலும் பற்களை ருத் பிரஷ் கொண்டு நன்றாகத் துலக்க வேண்டும். பெரும்பாலும் உணவு உட்கொண்ட பிறகே பற்களைச் சுத்தம் செய்வது நல்லது.
பற்களை ருத்பிரஷ் கொண்டு துலக்கும் போது இடது வலதாகத் துலக்காமல் மேல் கீழாகத் தேய்த்து வருவதே நல்லது. தேய்த்து முடித்து விட்டு வாய் கொப்பளிப்பதற்கு முன்னால் ஈறுகளை விரலால் மெல்லத் தேய்த்துவிட வேண்டும். பின்னர் நாக்கையும் நன்றாக வழித்துச் சுத்தம் செய்ய வேண்டும்.
வாரத்திற்கு ஒரு முறை சிறிது எலுமிச்சம் பழச்சாற்றில் உப்பையும் சேர்த்து 'ருத் பிரஷ்' கொண்டு நன்றாகத் தேய்த்து வந்தால் விரைவில் பற்களின் மஞ்சள் நிறம் விடைபெற்று விடும்.
4. தினசரி பற்களைச் சுத்தம் செய்து முடித்தபிறகு சூடான நீரில் உப்புக் கலந்து வாய் கொப்பளித்தால்-பிறரை அண்டவிடாத வாய் நாற்றம் ஓடி விடும்.
5. ஆண்டிற்கு ஒரு முறையாவது பல் வைத்தியரைப் பார்த்துப் பற்களைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும்.
சொத்தைப் பற்களை அடைத்து விடவோ, அவசியமென்றால் மருத்துவரை வைத்துப் பிடுங்கி எடுத்து விடவோ வேண்டும்.
பற்களைச் சுத்தம் செய்ய நவீன வசதிகள் எவ்வளவோ அறிமுகமாகியுள்ளன.
அவற்றின் மூலம் பற்களைச் சுத்தம் செய்தால் பார்க்க 'பளிச்' சென்று இருக்கும்.
6. தெற்றுப் பல் உள்ளவர்கள் 'கிளிப்' போட்டுக் கொண்டால் நாளடைவில் பற்கள் உள்ளே ஒடுங்கிவிடும். அறுவைச் சிகிச்சையின் மூலம் பற்களின் அரணைச் சரி செய்து ஒழுங்குபடுத்தும் வழி முறைகளும் உள்ளன.
7. சிலருக்குப் பற்களில் இருந்து இரத்தம் கசிந்து கொண்டே இருக்கும். உப்பு கலந்த வெதுவெதுப்பு நீரில் வாய் கொப்பளித்தால் இரத்தம் வருவது உடனே நின்று விடும். அடிக்கடி இவ்வாறு இரத்தம் கசிந்தால் 'கல்சியம்' குறைவாக இருக்கலாம். எனவே மருத்துவருடன் கலந்தாலோசித்து கல்சியச் சத்துள்ள மாத்திரைகளை வாங்கி உண்ணுவது அவசியம்.
8. இனிப்புப்பதார்த்தங்களை உண்டால் உடனே விரலால் பற்களைத் தேய்த்துவிட்டு வாய் கொப்பளித்து விட வேண்டும்.



முறுக்கு போன்ற கடினமான பலகாரங்களைக் கடித்துச் சாப்பிடவேண்டும். இவை பற்களுக்கு நல்ல பயிற்சி.

எல்லாவற்றிற்கும் மேலாக எப்போதும் புன்னகையுடனேயே தோற்றமளிக்க வேண்டும்.

'வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்' என்பார்கள். வாய் விட்டுச் சிரிக்கப் பற்கள் வேண்டாமோ? எனவே பற்களைப் பாதுகாப்போம்!

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** AC

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 17-08-1996**

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## பாண்டிருப்பு வாசகிக்கு அதிஷ்டம்

| | |
|---|---|
| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
| இவர்தான். | **கே. மெற்றில்டா.** திரௌபதை அம்மன் கோயில் முன் வீதி, பாண்டிருப்பு-02, கல்முனை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## சமைப்போம் சுவைப்போம்
தொகுத்துத் தருவது- சுகந்தினி

### சேமியா வடை

**தேவையானவை:**
சேமியா - 1 கப்
ரவை - 1/2 கப்
தேங்காய்த் துருவல் - 3 கரண்டி
அரிசி மாவு - கொஞ்சம்
உப்பு - அளவாக
பச்சைமிளகாய் - 2
இஞ்சி - சிறிய துண்டு
கருவேப்பிலை - சிறிதளவு
நெய் - தேவையான அளவு.

**செய்முறை:** ரவையை ஒரு தேக்கரண்டி நெய் ஊற்றி லேசாக வறுக்கவும். சேமியாவைத் தனியாக நெய் ஊற்றிச் சூடு வரும் வரை வறுத்து அதில் ஒரு கப் தண்ணீர் ஊற்றி இரண்டு நிமிடம் கழித்து வடிகட்டவும். பிறகு மறுபடியும் ஒரு கப் தண்ணீர் ஊற்றி, சுத்தமாக வடிகட்டவும். பிறகு அதில் ரவை, அரிசி மாவு, உப்பு, பொடியாக நறுக்கிய இஞ்சி, பச்சை மிளகாய்த் துண்டுகள், தேங்காய்த் துருவல் ஆகியவற்றைப் பிசைந்து கொள்ளவும். வாணலியில் எண்ணெயை ஊற்றிக் கொதித்ததும், வடைகளைத் தட்டிப் போட்டுப் பொன்னிறமாக வந்ததும் எடுக்கவும். இதற்குத் தொட்டுக் கொள்ள தக்காளி சட்னி ஏற்றது.

www.padippakam.com

## அர்த்தம் தொலைத்தவர்கள்........

ஐயா பண்டிதரே!
அருமைப் பெரியோரே- ஒரு
ஐயம் ஐயா-இந்த
அப்பாவித் தமிழனுக்கு!
▫▫
தீர்த்திடுவீர்
என்றெண்ணி கூறுகிறேன்:
கூட்டணிபோல்
(கூட்டமான அணி)
குழப்பாமல் பதில்கூறும்!
▫▫
இப்போது எம்நாட்டில்
'சமாதானம்' என்று
எல்லோரும்
பேசித் திரிகின்றார்....
▫▫
என்ன அர்த்தம்
'சமாதானத்திற்கு?'
ஏதும் தெரியவில்லை:
யாதும் புரியவில்லை.
▫▫
சமாதானம் என்றால்
ஏதேனும் பொருளா?
யார் அதை எங்கு
எப்போது
ஒளித்துவைத்தார்?
▫▫
யாராவது மனிதரின்
பெயரா?
எங்கு அவர்
ஓடிப் போனார்?
▫▫
சமாதானம் என்றால்-
யுத்தம்
என்றென்
அம்மா சொன்னார்!
▫▫
சமாதானம் என்றால்-
"விடுதலை"
என்றென்
அண்ணா சொன்னார்!
▫▫
என் மாமாவோ
"ஆறு மாதத்தில்
பிடித்து தருவேன்"
என்று குழுரைத்துள்ளார்.
▫▫
ஐயா பெரியவரே!
தமிழனின் அகராதியை
கொஞ்சம் புரட்டிப்
பார்த்து
புரியும்படி சொல்லும்....!
சமாதானம் என்றால்
என்னவென்று!
▫▫
முகவரி:- அகதிகள்நாடு,
கவலைகள் இல்லம்,
சமாதான நகரம்,
இல-000

விரைவாக அனுப்பும்!
எமக்குத்தான்
'முகவரி'
நிரந்தரம் இல்லையே...?

சுபா வரன், கண்டி.

## உறங்கமறுக்கும் பனித்துளி.......

வானம்
உமிழ்ந்து துப்பும்
அமாவாசை நிலாவைப்போல்,
பனிமேகச் சீலை
காற்றில் பறக்க,
நீலப்பர்தாவினுள்ளிருந்து
வெளிப்பட்டுவரும்
பௌர்ணமி முகவாட்டு.....
+++
புரளுமந்த விழிகளின் கீழ்
விரிந்து விரிந்து
ஒட்டுமந்த உதடுகள்....
+++
என்னிதயம்
நீராய்: உருகி உருகி
என்னுள்ளே வடிவதும்:
ஒடுங்கி ஒடுங்கி
பனிக்கட்டியாய் உறைவதும்
உன் பார்வைகளில்தான்.....
+++
என்-
இரசக் கிண்ணமே!
நீ-
உரசிவிழுந்தாலும்
வட்டவட்டமாய்த்தான்
என்னுள் பிரிகிறாய்....
+++
மகரந்தவாசமே
நீ-எனக்கு
காற்றில் அனுப்பும்
காதல் கடிதமா....?
+++
நீ-
விளக்காக இரு:
நான்
விட்டிலாக வருவேன்.....
+++
உன்
சகமான பார்வைகளால்
சடப்படுவதுதான்
என் காதல்!
+++
"காதலி!
நீயில்லாத என்னிதயம்
வெறுமைப்படட்டும்:
பொட்டல்தரையாகட்டும்!"
இதுவே- என்
பிரார்த்தனைகளின்
வேத(னை) வெளிப்பாடு.
+++
என் இதயம்
காதுமடல்களில்
குந்தித்திரிகிறது,
உன் பேச்சுக்களை
கேட்பதற்காக...
+++
உன் முகம் பார்ப்பதற்கே
விழி உறங்க
மறுக்கிறது-
கனவுகளையும் வெறுத்து!
+++
உன் விடைகளுக்காகவே
விரல்களும்-
வினா எழுப்புகிறது.
+++
நீ பேச.....
உன் பக்கமிருக்கும்
நண்பியுடனாவது.
+++
நான்
வார்த்தைச் சுவரில்
முட்டிமுட்டி விழுவதைப்
போல்
நீயிருக்க முடியாது.
+++
ஏனெனில்,
நான்-
உன் பார்வைகளால்
உறிஞ்சப்படும்
பட்டிக்காட்டுப்பனித்துளி.
+++

'வளர்மதி'

## நரி இருட்டும் கோழி விடியலும்

'விடியுது
விடியுது
'இந்தா' விடியுது' என்று,
புறவளவின் மாமரத்துக்கொப்பில்
தங்கியிருந்து எச்சம்போடும்
செம்பாட்டுச் சேவல் கத்தும்:
இறக்கையைத் தட்டியும்
சிலவேளை சத்தமிடும்.
▫*▫
கண்ணைத் திறந்து
சன்னல் துணியை
நீக்கிவிட்டுப் பார்த்தால்....
கறுப்புமையைப் பூசினாற்போல
எங்கும் ஒரே இருட்டு.
▫*▫
ஆனால்...
வாலை உயர்த்தி
சொண்டை விரித்து
சத்தமிடும் சேவலுக்கு
விடியுது....!
பொழுது விடியுது....!
▫*▫
குறுக்கறுக்கும் பேடுகளோடு
கண்டகண்ட இடங்களில்
ஏறி...மிதித்து....
ஆசைதணிக்கும் சேவலுக்கு
விடியுது.....!
▫*▫
சனங்களே....!
ஆரும்,
அரண்டெழும்பத் தேவையில்லை!
▫*▫
அரண்டெழுந்து
வாய்கழுவி
ஒரு அள்ளு வெற்றிலையைக்
கொதுப்பவோ,.......
பீடி..சுருட்டுக்கு
நெருப்பேற்றவோ தேவையில்லை!
▫*▫
ஏனெனில்
இது....
கொக்கரிக்கும்
கோழிவிடியல்!
▫*▫
குஞ்சுக்கு இரையூட்ட முன்னர்
பெட்டையோடு குலவ
சேவல்போட்ட மாயமான் கூவல்!
▫*▫
குருடாகவே படுங்கள்!
வெளியே நரி இருட்டு,
அடுப்புக் கரி இருட்டு:
▫*▫
விடியவும்,
கொதுப்பிய வெற்றிலைத்
துப்பலைப் போல், கதிர்
எழும்பவும்:....
காலை புலரவும்
விடிவதற்கு நேரமிருக்கு-
தூங்குங்கள்!
இழுத்துப் போர்த்திக்கொண்டு
தூங்குங்கள்!
▫*▫
தூக்கம் ஒரு வகையில்
சுகம்தான்...
சுகாதாரந்தான்...
இல்லையா?

நீலா பாலன்.

## காதல் கருவானதோ?

அழகான இடை என்ன இலதானதோ
அமைவான விழி யென்ன வேலானதோ
பழகாத மொழி மௌனப் பாய் போட்டதோ
பண்பாடு தான் வந்து தடை போட்டதோ....?

***

மெதுவாக விரல் தீண்டச் சுகமானதோ
மென்பட்டுக் கன்னந் தான் சிவப்பானதோ
புதிதாக உலகொன்று உருவானதோ
புறச் சூழல் இலையென்ற நிலையானதோ...?

***

விழிமூடிச் சுகம் காண வழியானதோ
விண் மஞ்சத் தேர் ஊர்தல் போலானதோ
அழியாத சுகங் கோடி உருவானதோ.
அம்மாடி உன் காதல் கருவானதோ....?

***

உன் வழியை நான் பார்த்துச் சுகங்காண்கிறேன்:
உன் மனதை நான் எண்ணி மகிழ்வாகிறேன்:
பொன்மாதும் மென்னுடலும் எனதாவதால்-
புதுவாழ்க்கை நான் காணத் திடமாகின்றேன்!

க. கோணேஸ்வரன்.

## நொந்த மனசு

நாங்கள்
எல்லைப்புற
வாசிகள்:
எங்கள்
நிலவரங்களை
நேரில் கண்டவர்கள்,
அறியாதவர்களாய்....
இருக்கின்றார்கள்!
••
ஒவ்வொரு-
பொழுதிலும்....
எம்-
இதயத்துடிப்புகள்
பயத்தினால்
அதிகரிக்கின்றன! ••
எங்கள்
காதுகளுக்கு-
அதிரும்
வேட்டொலிகளையும்
குண்டுச் சத்தங்களையும்
விட
வேறெந்த இசையும்-
கேட்பதில்லை!
••
இராப் பொழுதுகளில்,
ஆயுத மணத்துடன்
புரியாத முகங்கள்
இருட்டினில்
அசையும் போது,
கண்மூடி....
காதைப் பொத்தி...
காத்திருப்போம்
ஒரு அவலத்தை....!
••
இரவுகள்
ஒவ்வொன்றிலும்
'யமனை'-
சந்திப்பதாய்-ஒரு
உணர்வு!
••
பகலில்.....
உடல் மெலிந்து
உருவம் மாறி
உருக்குலைந்து
நடைப்பிணமாய்
நடமாடுகின்றோம்.
••
எம் பின்னால்....
நாக்கு நீண்ட
நாய் மேல்
அலகு நீட்டி வருகிறது
காகம்! ••
"சுதந்திரத் தாயே...!
நாம்-
உன் குழந்தைகளாய்-
உரிமை பெறுவது
எப்போது....?"
••

ஆர். சாந்தசீலன்,
பொத்துவில்.

## அந்த நாள் ஞாபகம்



'களத்தூர் கண்ணம்மா' படத்தில் ← கமல். ஐந்தில் வளைந்தவர்.



தன் முன்னோடியான நடிப்புலக வேந்தனுடன் கமல். படம்- 'சத்யம்'. சிவாஜியின் தீவிர அபிமானி கமல். →



இந்தியில் கமலின் முதல் படம், 'ஏக் துஜே கேலியே'. இயக்குநர் பாலசந்தர் முதன் முதலில் இந்தியில் இயக்கிய படமும் இதுதான். கமல் அகில இந்திய நடிகராக பிரகாசிக்க உதவிய படம். (கமல்-ரதி) ←

முதல் மனைவி வாணியுடன் ←





மனைவி சரிகாவுடன் →

## இந்த வாரம் உங்கள் பலன்

( 11.08.96 முதல் 17.08.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில்நிலை மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | மு.ப. 9 | மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பிரயாண மிகுதி. | பகல் 12 | மணி |
| புதன்- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை பணச் செலவு. | பி.ப. 3 | மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | மு.ப. 9 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 | மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பணவரவு. | காலை 7 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 6 | மணி |
| புதன்- மனக் கவலை, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 | மணி |
| வியாழன்-இனசன நன்மை, பணவரவு. | பி.ப. 1 | மணி |
| வெள்ளி- வீண் பிரயாணம், செலவு மிகுதி. | காலை 6 | மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, பண வரவு. | மு.ப. 9 | மணி |
| செவ்வாய்- பெரியோர் பகை, செய்தொழில் வீழ்ச்சி. | காலை 7 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, மனக்கவலை நீங்கும். | பகல் 12 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 6 | மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப. 1 | மணி |
| சனி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பி.ப. 3 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம் சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 3 | மணி |
| திங்கள்- இனசன நன்மை, பிரயாண மிகுதி. | மு.ப. 9 | மணி |
| செவ்வாய்- பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 | மணி |
| புதன்- தொழில் மந்தம், கடன் தொல்லை. | பி.ப. 1 | மணி |
| வியாழன்- மனக் குறைநீங்கும். முயற்சி பலிதம். | காலை 7 | மணி |
| வெள்ளி- தொழில் மாற்றம், மனக் கவலை. | பி.ப. 2 | மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், பயனற்ற செயல். | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. 3 | மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, காரிய சித்தி. | காலை 7 | மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, உயர்ந்த நிலை. | மு.ப. 9 | மணி |
| புதன்- அந்நியர் சகவாசம், கௌரவக் குறைவு. | பகல் 12 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- வீண் கவலை, தேகசுகம் பாதிப்பு. | காலை 6 | மணி |
| சனி- தொழில் விருத்தி, பண வரவு. | மு.ப. 9 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, உயர்ந்த நிலை. | காலை 6 | மணி |
| திங்கள்- அந்நியர் பகை, பணக் கஷ்டம். | பி.ப. 2 | மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 7 | மணி |
| புதன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 1 | மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, தொழில் கஷ்டம். | காலை 6 | மணி |
| வெள்ளி- செல்வாக்கு நிலை, இனசன நன்மை. | காலை 9 | மணி |
| சனி- புதிய முயற்சி, பண வரவு. | பகல் 12 | மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன். |
| சிம்மம் | - புதன். |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி, கேது. |
| மிதுனம் | - வெள்ளி, செவ்வாய். |

★ சந்திரன்- மிதுனம், கர்க்கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 7 | மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, அந்நியர் உதவி. | பகல் 12 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், பொருள் விரயம். | காலை 7 | மணி |
| புதன் - வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 1 | மணி |
| வியாழன்- கடன் தொல்லை, மனக் கவலை. | காலை 6 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 | மணி |
| சனி- தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணவரவு குன்றும். | பி.ப. 2 | மணி |
| திங்கள்- வீண் முயற்சி, மனக் கவலை. | காலை 6 | மணி |
| செவ்வாய்- அந்நியர் சகவாசம், பணச் செலவு. | பி.ப. 1 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | காலை 7 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 12 | மணி |
| வெள்ளி- இனசன நன்மை, பயனுள்ள செயல். | காலை 7 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், தொழில்நிலை உயர்ச்சி. | பி.ப. 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 6 | மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. 1 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மனக் கவலை. | காலை 7 | மணி |
| புதன்- வீண் துயர், வெளியிடப் பயணம். | பி.ப. 2 | மணி |
| வியாழன்-தொழில்நிலை மந்தம், பணக் கஷ்டம். | காலை 6 | மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், புதிய முயற்சி. | பகல் 12 | மணி |
| சனி- வீண் தொல்லை, உயர்ந்த நிலை. | காலை 6 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பண விரயம். | பி.ப. 1 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | காலை 7 | மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பகல் 12 | மணி |
| புதன்- இனசன நன்மை, கௌரவம். | பி.ப. 2 | மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | காலை 7 | மணி |
| வெள்ளி- செல்வாக்கு மிகுதி, உயர்ந்த நிலை. | பி.ப. 2 | மணி |
| சனி- மனக்குறை நீங்கும், பொருள் வரவு. | காலை 7 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. 1 | மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, வெளியிட வாழ்க்கை. | காலை 7 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், பண வரவு. | பி..ப. 2 | மணி |
| புதன்- இட மாற்றம், செல்வாக்கு குறைவு. | பகல் 12 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பண விரயம். | காலை 7 | மணி |
| வெள்ளி- தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. 1 | மணி |
| சனி- பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 6 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, உயர்ந்த நிலை. | பி.ப. 2 | மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, தொழில் சிறப்பு. | காலை 6 | மணி |
| செவ்வாய்- மன மகிழ்ச்சி, பொருள் வரவு. | பகல் 12 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 1 | மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, இனசன நன்மை. | பி.ப. 2 | மணி |
| வெள்ளி- முயற்சி தடை, பண விரயம். | காலை 7 | மணி |
| சனி- செய்தொழில் நன்மை, கடன் தொல்லை. | பகல் 6 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2



படிப்பகம்





## அகந்தை வேண்டாம்

நான்தான் என்றோர் அகங்காரம்
நம்மில் குடியாய் இருக்குமெனின்
வீண் எனப் பலவிதப் பிரச்சனைகள்
வந்து வாழ்வைக் கெடுத்திடுமே!

ஒருகை ஓசை எழுப்பாது,
உதவும் காரியம் செய்யாது;
இருகை இணைப்பால் ஓசைவரும்
இதை நாம் என்றும் உணர்ந்திடுவோம்!

நாம் என எங்கும் இயங்கிடுவோம்!
நலமாய் பலதும் சேர்ந்திடுமே;
தேம்பல் அங்கே வளராதே;
செழுமை வளரும் மனம் மகிழும்!

அகந்தை நீக்கி வாழ்ந்திடுவோம்!
அனைவரும் ஓர்குலம் என்றிடுவோம்!
உகந்த வரையில் ஒருங்கிணைவோம்!
ஒற்றுமைகாத்து நலம் பெறுவோம்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

---

நமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற- எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!
அமிழ்தில் இனியதடி பாப்பா! நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா!
-சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை

# உண்மையின் விலை



ஒருநாள் இரவு குமரேசன் என்பவரின் வீட்டில் கொள்ளையர்கள் நுழைந்தனர்.

"ம்.....மரியாதையாய் பணமும், நகையும் எங்கே வைத்திருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள். இல்லையென்றால் உங்களைக் கொன்று விடுவோம்!" என்று குமரேசனையும், அவரது மனைவியையும் கட்டிப் போட்டு மிரட்டினார்கள்.

"எங்கள் வீட்டில் ஒன்றுமில்லை. எங்களை விட்டுவிடுங்கள்" என்று இருவரும் கெஞ்சினார்கள். கொள்ளையர்கள் அதை நம்பாமல் அவர்களைத் துன்புறுத்தினார்கள்.

அதற்குள் தூங்கிக் கொண்டிருந்த குமரேசனின் மகன் சேகர் தூக்கம் கலைந்து வெளியே வந்தான். கொள்ளையர்களிடம் சென்றான்.

"என் அப்பா அம்மாவை அடிக்காதீர்கள். நான் உண்மையைச் சொல்கிறேன். அதோ அந்த அறையில் ஒரு பீரோ இருக்கிறது. அதற்குள் பணமும், நகையும் இருக்கிறது. எடுத்துக் கொள்ளுங்கள்," என்றான்.

"ம்....இப்படி வா வழிக்கு. எங்களைப் பார்த்து இப்படித்தான் பயப்பட வேண்டும்," என்றான் கொள்ளையரில் ஒருவன்.

"நான் ஒன்றும் உங்களைப் பார்த்துப் பயப்படவில்லை," என்றான் சேகர்.

இதைக் கேட்டதும் கொள்ளையருக்கு வியப்பாக இருந்தது. கொள்ளையர் தலைவன் சேகரிடம் வந்தான்.

"என்ன எங்களைப் பார்த்துப் பயப் படவில்லையா? பயமில்லை என்றால் நீயும் உன் பெற்றோரைப் போல பணமும், நகையும் இல்லை என்று பொய் சொல்லியிருக்கலாம் தானே. உண்மையை ஏன் சொன்னாய்?" என்று சற்றுக் கோபமாய் அதட்டினான்.

அதற்கு சேகர், "என் பெற்றோருக்கு உண்மை, பொய் இவைகளின் விலை தெரியாது. எனக்கு நன்றாகத் தெரியும். அதனால் தான் உண்மையைச் சொன்னேன்!" என்று அமைதியாகப் பதில் சொன்னான்.

"என்னது.... உண்மை, பொய் இவற்றுக்குமா விலை? அப்படியானால் உண்மையின் விலை என்ன? பொய்யின் விலை என்ன?" என்று வியப்புடன் கேட்டான் கொள்ளைக்காரன்.

சற்றும் தயங்காமல் சேகர் சொன்னான்: "உண்மையின் விலை என் தாய் தந்தையர். பொய்யின் விலையோ சிறிது நகையும், பணமும். பணத்தையும், நகையையும் நாம் மீண்டும் சம்பாதித்துக்கொள்ளக்கூடிய மலிவான பொருட்கள். ஆனால் என் தாய் தந்தையரின் உயிரோ விலை மதிப்பற்றது. போனால் போனது தான்; திரும்பவும் பெற முடியாதது."

சேகரின் பதில் கொள்ளையர்களைச் சிந்திக்க வைத்தது. சற்று நேரம் மௌனம் சாதித்த அவர்கள், தூணிலே கட்டி வைத்திருந்த குமரேசனையும், அவரது மனைவியையும் அவிழ்த்துவிட்டு, அந்த வீட்டில் கொள்ளையடிக்காமலேயே சென்று விட்டார்கள்.

உண்மையின் விலை எப்போதும் விலை மதிப்பிட முடியாதது.

---

## வாரம் ஒரு நாடு

### ஓமான்

தலைநகர்:- மஸ்கட்
பரப்பு:- 3,00,000 சதுர கிலோமீட்டர்
மக்கள் **தொகை:-** 1.7 கோடி
மொழி:- அரபி
சமயம்:- இஸ்லாம்
எழுத்தறிவு:- 20%
நாணயம்:- ஓமானி றியால்
தனி நபர் வருமானம்:- 5900 டொலர்.
அமைவிடம்:

அரேபியத் தீபகற்பத்தில் தென் கிழக்குப் பகுதியில் இது அமைந்துள்ளது. இதன் கடற்கரை அரபிக் கடல், ஓமான் வளைகுடா, பேர்சியன் வளைகுடா ஆகியவற்றைச் சார்ந்து அமைந்துள்ளது.



வரலாறு:-

மன்னராட்சி நடைபெறுகிறது. அரசியல் சட்டம் ஏதுமில்லை. சுல்தானே அமைச்சரவையை நியமிக்கிறார். பிரிட்டனுடன் 1951ல் ஒரு நல்லிணக்க ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. 1982ல் கையெழுத்தான ஒப்பந்தத்தை அடுத்து, சில முக்கிய தருணங்களில் பிரிட்டனின் ஆலோசனையைப் பெற வழி செய்யப்பட்டுள்ளது.

பொருளாதாரம்:-

எண்ணெயே முக்கிய வருமான மூலம். ஈச்சம்பழம் முக்கிய விவசாய விளை பொருள். முக்கிய ஏற்றுமதி நாடு இந்தியா. பிற விவசாயப் பொருட்களுக்கான விளைச்சல் வாய்ப்புக்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

---

## ஆண்டும் விழாவும்

இருபத்தைந்து ஆண்டுகள் முடிந்தால் சில்வர் ஜூபிலி- அதாவது வெள்ளி விழா, 50 ஆண்டுகள் முடிந்தால் கோல்டன் ஜூபிலி- அதாவது தங்க விழா என்பதும் உங்களுக்குத் தெரியும். இதோ இன்னும் சிலவற்றைத் தெரிந்து கொள்ளுங்கள்:

| | |
|---|---|
| ஓராண்டு - பேப்பர் ஜூபிலி | (Paper Jubilee) |
| இரண்டாண்டு- கொட்டன் ஜூபிலி | (Cotton Jubilee) |
| மூன்றாண்டு - லெதர் ஜூபிலி | (Leather Jubilee) |
| நான்காண்டு-புக் ஜூபிலி | (Book Jubilee) |
| ஐந்தாண்டு- அயன் ஜூபிலி | (Iron Jubilee) |
| ஆறாண்டு- வூடன் ஜூபிலி | (Wooden Jubilee) |
| ஏழாண்டு- பிரோன்ஸ் ஜூபிலி | (Bronze Jubilee) |
| எட்டாண்டு- எலக்ற்றிக் ஜூபிலி | (Electric Jubilee) |
| ஒன்பதாண்டு- பொட்டரி ஜூபிலி | (Pottery Jubilee) |
| பத்தாண்டு- ரின் ஜூபிலி | (Tin Jubilee) |

தொகுப்பு:-எம்.இப்திகார், பாணந்துறை.

---

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 17.08.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 153
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 151

பரிசுக்குரியவர்:
இஸ்ஸதுல் ஃபர்மிளா,
அல் மதீனா வித்தியாலயம், குடாநெலுபேவ, ஹிதோகம.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| கோபாலசிங்கம் சாந்தப்பிரியா,<br>க.மு./விபுலாநந்தா மத்திய கல்லூரி, காரைதீவு-10 | செல்வன் ந. வெங்கடேஸ்வரன்,<br>மாத்தளை இந்துக்கல்லூரி, மாத்தளை. |
| எஸ். கிருஷ்ணவேணி,<br>நிலாகல தோட்டம், லபுகம, ஹல்தோட்ட. | செல்வன் ப. ருசான்,<br>நாமகள் வித்தியாலயம், கல்குடா. |
| ந. நவதர்சினி,<br>கிரிஸ்லஸ் ஃபாம் த/ வித்தியாலயம், கொட்டக்கலை. | எம்.எஃப்.எம். பைரூஸ்,<br>மத்ரஸா ஒழுங்கை, மன்னார் வீதி, புத்தளம். |
| செல்வி தனுஷியா குமாரசாமி,<br>சென் மத்யூஸ் கல்லூரி, தெனியாய. | செல்வி எஸ். மேரி ஜெசிந்தா,<br>விதான பில்டிங், பூண்டுலோயா. |
| எம். ஃபஹாட்,<br>இல-2, டிமெல் ஃப்லாட், கிரான்பாஸ் வீதி, கொழும்பு-14. | அஹ்மட் அல் ஷாதிக்,<br>ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரி, கொழும்பு-12. |

---

## சூலூ

- **சூலூ என்பவர்கள் யார்?**
தென் ஆபிரிக்காவில் நேடால் பகுதியில் வாழும் பழங்குடி மக்கள் சூலூ என அழைக்கப்படுகின்றனர். இவர்களது எண்ணிக்கை 30 இலட்சம்.
- **இவர்களது பிரபலமான முதல் தலைவர் யார்?**
ஷாகா. இவரது தலைமையில் தான் சூலூக்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டப் போராடினர். அதுவரை அவர்கள் இனம் ஒரு முக்கியத்துவ மற்ற இனமாக இருந்தது.
- **சூலூக்களின் செல்வாக்கு சரிந்தது எப்போது?**
தென் ஆபிரிக்காவில் சூலூக்கள் அமைதியாக வசதியாக வாழ்ந்தனர். நாடு பிடிக்கும் பேராசையில் அந்தப் பக்கம் வந்த ஆங்கிலேயர்களும், டச்சுக்காரர்களும் சூலூக்களைத் தந்திரமாக ஒடுக்கி அவர்களது நிலங்களைப் பறிமுதல் செய்து அதிகாரம் செலுத்தினர். வெள்ளையர்களுடைய துப்பாக்கிகளின் முன்பு வீரமும், நேர்மையும் கொண்ட சூலூக்களின் ஈட்டியும் கேடயமும் தோற்றுப் போனது.
- **ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போராடிய சூலூக்கள் பெற்ற மிகப் பெரிய வெற்றி எது?**
இசாந்லவானா என்ற இடத்தில் 1879ம் ஆண்டு நடந்த சண்டையில் சூலூக்கள் பெரிய வெற்றியைப் பெற்றனர்.
- **தொடர்ந்து நடந்த போரில் இறுதி வெற்றியைப் பெற்றது யார்?**
நவீன ஆயுதங்கள் இல்லாததால் சூலூக்கள் தோற்றனர். 1897ம் ஆண்டு தென் ஆபிரிக்க நிறவெறி அரசின் கீழ் சூலூக்கள் அடக்கி ஆளப்பட்டனர். அப்போதும் மனம் தளராது பல போராட்டங்கள் நடத்தி, பல சூலூக்கள் தங்கள் உயிர்களைப் பலி கொடுத்ததால் இன்று நிறவெறிக் கொள்கையில் தளர்வு ஏற்பட்டுள்ளது. சூலூக்கள் முழு சுதந்திரத்தை நோக்கி முன்னேறிக் கொண்டே இருக்கின்றனர்.



---

## நாடுகளின் முதல் செய்தித்தாள்கள்

| | |
|---|---|
| **இந்தியா** - | பெங்கால் கசட் |
| **சீனா** - | பீப்பிள்ஸ் டெய்லி |
| **அமெரிக்கா** - | த பப்ளிக் ஒக்கரன்ஸஸ் |
| **ஃபிரான்ஸ்** - | லோ கசட் |
| **ரஷ்யா** - | இஸ்க்ரா |
| **ஜப்பான்** - | படாலியா நிம்புன் |
| **சுவீடன்** - | அட்டன் பிளாடட் |
| **சுவிற்ஸலர்லாந்து** - | பியுலி ஈராயில் |
| **இங்கிலாந்து** - | அபோட் கசட் |
| **ஒஸ்ரியா** - | லைனர் ஸெய்டாஸ் |
| **கனடா** - | நோவோஸ் காட்டியா. |

தொகுப்பு-சூர்யா.

---

## ஆர்ட்டீசியன் கிணறு

சில இடங்களில் கிணறு தோண்டினால் தரைக்கடியில் உள்ள நீர் அழுத்தத்தினால், நீர் பீச்சிக்கொண்டு எப்பொழுதும் மேலே வந்தவாறு இருக்கும். இதற்குப் பொங்கு புனல் அல்லது ஆர்ட்டீசியன் கிணறு (ARTESIAN WELL) என்று பெயர்.

முதன் முதலில் இவ்வகைக் கிணறுகள் ஃபிரான்ஸ் நாட்டில் ஆர்ட்டீஸ் என்னும் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டதால் இவைகளுக்கு இப்பெயர் வந்தது. மேலே கண்ணறைகள் கொண்ட நீர் கொள்பாறைக்கு அடியில் உள்ள களிமண் பாறைகளின் அடுக்குகளுக்கிடையில் நீர் நிறையத் தேங்கிநிற்கும். நீர் கொள் பாறையின் அடிப்பகுதி சரிவாகவும், சரிவின் மேற்பகுதி தரையருகிலும் அமைந்திருக்கும். மழைநீர் தரையில் வீழ்ந்து சரிவுப்பாறை வழியாகக் கசிந்து பாறைக்கடியில் தேங்கியிருக்கும். சரிவுப்பாறையில் ஒரு பக்கத்தில் குழாய்க் கிணறு தோண்டினால், நீர் பீச்சிக் கொண்டு எப்பொழுதும் வெளிவந்து கொண்டிருக்கும்.




---

## அறிவோம் மனதில் பதிவோம்



★ உலகின் கூரை எனப்படும் திபெத் நாட்டின் தலைநகர் லாசா, மிகவும் உயரத்தில் அமைந்துள்ளது. உயரமான இடத்தில் இது அமைந்திருப்பதால் இங்கு ஒட்சிசன் (பிராண) வாயு குறைவு. அதனால் அந்நகருக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.



★ இரண்டாம் உலகப் போரின் போது ரஷ்யாவில் உள்ள லெனின் கிராட்டில் இறந்தவர்களின் எண்ணிக்கை 10 இலட்சம்.

★ பதினோராம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் அரசு விடுமுறை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்வது பெரிய குற்றமாகக் கருதப்பட்டது. அப்படிச் செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனைகளும் வழங்கப்பட்டது.



www.padippakam.com

# அசத்தல் 5

# தூரா!

**தமிழக க்ரைம் கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்**

**இதுவரை** மதன் கீதா இருவரும் காதலர்கள். கடற்கரையில் மாலை நேரத்தில் சந்திக்கின்றனர். இருட்டாகி விட்டதால் இருவரும் புறப்படுகிறனர். மதனின் பர்ஸ் தொலைந்து விடுகிறது. கடற்கரையில் ஒரு பெண்ணின் உடல் கிடக்கிறது. அந்தப் பெண்ணின் பெயரும் கீதா. மரிய கீதா. பொலிசார் விசாரணைக்கு வருகிறன்றனர். மதனின் பர்ஸ் கிடைக்கிறது. மதனைத் தேடி வருகின்றனர். மதனின் காற்சட்டையில் இரத்தக் கறை இருக்கிறது. மதன் கைது செய்யப் படுகிறான். காற்சட்டையில் எப்படி இரத்தக்கறை வந்தது என்பதை அவனால் விளக்க முடியவில்லை. மதனின் காதலி கீதாவுக்கு பொலிசார் போன் செய்கின்றனர். மதன் என்று யாரையும் தனக்குத் தெரியாது என்கிறாள் கீதா. விசாரணை தொடர்கிறது. **இனி...**



"வீட்ல யாருங்க? கதவைத்திறங்க...."

"மல்லிகா, வாசல்ல யாருன்னு பாரு. காய்கறிக்காரனா?"

"இல்லைம்மா....போலீசு."

"போலீசா....? என்ன சார் வேணும்?"

"வாசல்லேயே நின்று சொல்லக் கூடிய விஷயம் இல்லைங்க. கதவைத் திறங்க. இதானே அருணாசல ஆசாரி தெரு?"

"ஆமாங்க."

"இதானே டோர் நம்பர் பதினேழு?"

"ஆமாம் சார்."

"சும்மா உட்காருங்க மேடம். ராஜசேகரன் யாரு?"

"என் ஹஸ்பண்ட் சார்."

"வெல். உங்க தங்கை பேரு மரிய கீதாவா?"

"ஆமாம் சார்."

"உன் தங்கை எங்கே இப்போ?"

"நேத்து மத்தியானம் புறப்பட்டு வெளில போனவ இன்னும் வரலை சார்."

"ராத்திரி பூரா வரலை! உங்களுக்கு பதட்டமா இல்லையா?"

"இல்லைங்க. இப்படி அடிக்கடி நடக்கிறதுதான். அவநாடகத்திலே நடிக்கிறவ. ஒத்திகைன்னு போவா. வெளியூர் ப்ரோக்கிராம்னு புறப்பட்டுப் போவா, வருவா, யாராச்சும் நடிகை திடீர்னு வரலைன்னா, இவளை கூட்டிட் டுப் போய்டுவாங்க. நல்லா நடிப்பா. நேத்து திடீர்னு ஏதாச்சும் வேலை வந்து போயிருக்கணும். நீங்க என்ன விஷயமா.....?"

"எப்படி உங்கக்கிட்ட சொல்றதுன்னு தெரியலையே மேடம். உங்கள் ஹஸ்பண்ட் எங்கே, கூப்புடுங்களேன்."

"அவர் டூர் போயிருக்கார் சார். மெடிக்கல் ரெப்ரசன்டேடிவ்."

"எப்போ போனார்? எப்போ வருவார்?"

"மூணு நாளாச்சி போய். வர இன்னும் பத்து நாளாகும்."

"வீட்ல வேற ஆம்பளைங்க யாருமில்லையா?"

"இல்லையே. ஏன்?"

"சொல்றேன். அதுக்கு முன்னாடி கொஞ்சம் விசாரிச்சுக்கறேன். எல்லாம் சொல்லிட்டு போறேன். ஏன், எதுக்குன்னு கேள்வி கேக்காம என்னோட கேள்விக் கெல்லாம் பதில் சொல்லுங்க. இது வேலை பார்க்கிற பொண்ணா?"

"ஆமாம்."

"இங்கே வாம்மா! இந்தா. ஓடிப் போயி ஒரு தினத்தந்தி வாங்கிட்டு வா. மேடம், உங்க பேர் ரோஸ்லினா?"

"ஆமாம்."

"மரிய கீதா உங்க சொந்த தங்கையா?"

"ஆமாம்."

"உங்களோடதான் இருக்காங்களா?"

"நாலு வருஷமா என்னோடதான் இருக்கா. அப்பா அம்மா இல்லை. அண்ணன் ஒருத்தன் இருக்கான் பங்களூர்ல. உதவாக்கரை. நான்தான் இவளுக்கு ஆதரவு."

"மரிய கீதாவுக்கு யாராச்சும் பகை உண்டா?"

"பகையா? சார், நீங்க எதுக்காக இதெல்லாம் கேக்கிறீங்க?"

"கேள்வி கேக்க வேணாம்னு சொன்னேனில்லே. சொல்லுங்க பகை இருக்கா?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை சார். ரொம்ப கலகலப்பான டைப். பார்த்த பத்தாவது நிமிஷமே யாரையும் கவர்ந்துடுவா."

"ஐ.சீ. நேத்து மத்தியானம் எங்கே போறதா சொல்லிட்டுப் போனாங்க?"

"யாரோ ஒரு டைரக்டரைப் பார்த்து சான்ஸ் கேக்கப் போறேன்னு சொன்னா."

"அப்புறம்? வேற எங்கேயாவது போறதா சொன்னாங்களா?"

"சாயங்காலம் அஷ்டலக்ஷ்மி கோயில் போகணும்னு சொன்னா."

"எதுக்கு? ஹிந்து கோயில்களுக்கும் போவீங்களா நீங்க?"

"அப்படி இல்லை. யாரையோ அங்கே சந்திக்கணும்னு சொன்னா."

"மேடம் எந்தத் தகவலையும் முழுங்காதீங்க. தயவு செஞ்சு. நேரா கேக்கறேன். தெரிஞ்சா ஒத்துக்குங்க. உங்க தங்கை யாரையாச்சும் காதலிக்கிறதா சொன்னாங்களா?"

"ஆமா சார்......"

"யாரு?"

"பேர் கூட சொல்லலை எனக்கு. சஸ்பென்சா இருக்கட்டும், திடீர்னு ஒரு நாள் அறிமுகப்படுத்தறேன்னு சொன்னா."

"அந்தப் பையன் என்ன செய்றான்னு சொன்னாங்களா?"

"வேலை தேடிக்கிட்டிருக்கிறதா சொன்னா."

"அந்தப் பையனோட போட்டோ பார்த்திருக்கீங்களா?"

"இல்லை சார். அவகிட்ட இல்லை. நானும் என் தங்கையும் ரொம்ப ஓபன் டைப். எதையும் மறைச்சுக்கிறதில்லை. வளர்ந்த பொண்ணு. வெளில சுத்தற தொழில். அதனால அவளை நான் கண்டிக்கலை. உன் புத்திக்கு எது சரியாப்படுதோ அப்படி நடந்துக்கோன்னு சொன்னேன்."

"எத்தனை நாளா காதலிக்கிறாங்கன்னு தெரியுமா?"

"ஆறு மாசமா தான்."

"அந்தப் பையன் எங்கே இருக்கான்னு தெரியுமா?"

"தெரியாது, சார். சொல்லுங்க ப்ளீஸ். எனக்கு பதறுது. எதுக்காக இந்த விசாரணை?"

"மேடம் இங்கே உங்களுக்கு சொந்தக்காரங்க இருக்காங்களா?"

"நிறையப் பேர் இருக்காங்க."

"யாரையாச்சும் கூப்பிட்டு மொதல்ல உங்க புருஷனை டூர்லேர்ந்து வரவழைக்கப் பாருங்க."

"எதுக்கு சார்?"

"சார், இந்தாங்க தினத்தந்தி."

"மேடம், இதிலே மூணாம் பக்கத்திலே விவரமா வந்திருக்கு. நான் போனதும் படிச்சுப் பாருங்க. மொதல்ல விஷயத்தை சொல்லியிருந்தா இத்தனை பதில்கள் சொல்லியிருக்க மாட்டீங்க. அதனாலதான் உடனே சொல்லலை. ஸாரி."

"சார். என்ன சொல்றீங்க?"

"உங்க தங்கை நேத்து சாயங்காலம் கொலை செய்யப்பட்டிருக்காங்க. இப்போ ஜி. ஹெச்ல போஸ்ட் மாட்டம் முடிஞ்சி மார்ச்சுவரில வச்சிருப்பாங்க. இது என் போன் நம்பர். உங்க ஹஸ்பெண்ட் வந்ததும் காண்டாக்ட் பண்ணுங்க."

"சார்! சார்! என்ன சொல்றீங்க? கீதாவா? மரிய கீதாவா?"

"ஆமாம். இந்த போட்டோவை நீங்க ஒரு தடவை பார்த்துச் சொல்லிட்டா எனக்கு நூறு சதவீதம் உறுதியாயிடும். பாருங்க. இது மரிய கீதா தானே?"

"அய்யோ! அய்யோ! அய்யோ! கீதா! கீதா! நீயா? என்ன சார் இது? எப்படி சார் இது? அடப்பாவி! செத்துப் போய்ட்டியா? ஜீசஸ்! எல்லாம் நிஜமா?"

"ஸாரி மேடம். நான் வர்றேன். மறுபடி வருவேன். உங்க தங்கையோட ரூமை, பொருள்களை நாங்க பார்க்கணும். தைரியமா இருங்க."

*****

"**வா**ங்க சசிதரன், ஒரு குட் நியூஸ்."

"என்ன சார்?"

"ஸ்ரீதர் ரிப்போர்ட் அனுப்பியிருக்காரு. கத்தியில உள்ள ரேகையும், நீங்க அனுப்பின ரேகையும் ஒத்துப் போகுது. ஸோ....."

"அது மட்டும் இல்ல சார். கேசே முடிஞ்சி போச்சி. பொண்ணு யாருன்னு தெரிஞ்சுக்கிட்டாச்சு. பேரு மரியகீதா. நாடக நடிகை. விலாசம் கூட கிடைச்சி, போய் அவங்க அக்காவுக்கும் தகவல் கொடுத்துட்டேன். இந்த ஸ்கவுண்ட்ரல் தான். ஏதும் ஒத்துக்கிட்டானா? விசாரிச்சிங்களா?"

"விசாரிக்காம? ரிப்போர்ட் வந்ததுமே ரெண்டு சாத்து சாத்தி கேட்டேன். அழுவுறான்யா. இல்லை, இல்லைன்றான். இன்னொரு விஷயம், பி.எம்.ரிப்போர்ட் சொல்லுது. மரியகீதா வயத்திலே ஐம்பது நாள் கரு இருக்கு. பேரு மதன். அதான் விளையாடிட்டான். ஒத்துக்கத்தான் மாட்டேங்கறான்."

"எந்த குற்றவாளி சார் ஒத்துக்கிட்டான், முதல் நாள்லயே? கோயில்ல கொஞ்சம் விசாரிச்சா போதும். வழக்கே ரெடி. இன்னிக்கே மாஜிஸ்ட்ரேட்கிட்டே ஆஜர் படுத்திடலாம் சார்."

"எதுக்காக கொலை சசிதரன்? மோட்டிவ் தெரியுதா?"

"சொல்லான்னா சொல்றான். நான் விசாரிக்கிறேன் ஸ்பெஷலா?"

"பார்த்து கொஞ்சம் நிதானம் வேணும். எக்குத்தப்பா அடிச்சிடாதீங்க. கோர்ட் கஸ்டடி கேட்டு பிரிசன் போய்ட்டான்னா நமக்கு கஷ்டம்."

"என்னால மோட்டிவ் யூகம் பண்ண முடியுது சார்."

"சொல்லுங்க."

"ஆறு மாசமா மரிய கீதாவும், மதனும் காதலிச்சிருக்காங்க. அவ கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி வற்புறுத்திருக்கா. இவரு அதுக்கு தயாரா இல்லை. நேத்து தகராறு முத்திப் போயி படக்குன்னு கத்தி எடுத்துக் குத்திட்டு ஓடிட்டாரு. அவ்வளவு தான்."

"நல்லாபொருத்தமாதான் இருக்கு. அவன் ஒப்புக்கணுமே."

"இதோ.....இப்போ ஒப்புக்குவான் சார். கங்காதரன் லாக்கப்பை திறந்து விடுங்க."

"மைல்டா விசாரிங்க சசிதரன்."

❑ ❑ ❑

"**எ**ன்ன மிஸ்டர் மதன், சுருண்டு படுத்துட்டீங்க? எந்திரிங்க. அட! சொல்றேன் படுத்துக்கிட்டே இருக்கியே. எந்திரிடா ராஸ்க்கல்."

"சார், சத்தியமா இந்த கொலைக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை."

"இங்க பாரு, ஒவ்வொரு நகமா பிச்சிடுவேன். ஒத்துக்கிட்டேன்னுவை, கொலை திட்டமிடப்படலை, உணர்ச்சிப்பூர்வமான துன்னு வெறும் ஜெயில் தண்டனையோட சரி-முரண்டு பிடிச்சே- சுத்தமான தூக்குத் தான். சினிமால பார்த்திருப்பியே, மூஞ்சில கறுப்பு துணி போட்டு, மேடையில நிக்க வச்சி, கடைசி ஆசை கேட்டு சொடக்கு போடறதுக்குள்ளே நிரந்தரமா உலகத்திலேர்ந்து விலக்கிடுவாங்க. கடக்கடக்னு கழுத்து எலும்பெல்லாம் உடையும் பாரு, மூஞ்சியை ஏன் மூடறாங்க தெரியுமா? கண்ணு ரெண்டும் பிதுங்க, நாக்கு வெளியே தள்ளி, அய்யோ பயங்கரம்ப்பா அது. அதெல்லாம் உனக்கு நேரணுமா?"

"சார் தயவு செஞ்சி நடந்தது என்னண்ணு கேளுங்க."

"சரி சொல்லு. நீ என்னதான் சொல்றேன்னு கேட்டுக்கறேன்."

"நான் நேத்து சாயங்காலம் அஷ்டலக்ஷ்மி கோயிலுக்குப் போனது உண்மை."

"இப்பத்தான் முதல் உண்மை வருது. இப்படியே வரிசையா எல்லா உண்மையையும் சொல்லிடு ரைட். மேல சொல்லு."

"அங்கே என் காதலி கீதாவை சந்திச்சேன்."

"அதாவது மரிய கீதாவை."

"இல்லை சார். வெறும் கீதாவை."

"சரி. சொல்லு."

"ரெண்டு பேரும் கடற்கரையோரமா ரொம்பதூரம் நடந்தோம். அப்போ வெளிச் சம் அதிகம் இல்லை. மணல்ல உக்காந்தோம். பேசிட்டிருந்தோம். அவளோட சும்மா விளையாட்டுக்கு கையைப் பிடிச்சி இழுத் தப்போ கண்ணாடி வளையல் உடைஞ் சிடுச்சி."

"அப்புறம் சார்?"

"என் டைரில பாடம் செஞ்சி வைக்கணும். நாலு மல்லிகைப் பூ தான்னேன். வேணாம்னா. நான் பிடிவாதமா பிடுங்கினேன். பூவெல்லாம் உதிர்ந்து போச்சி."

"ம்....அப்புறம்?"

"நாங்க புறப்பட்டப்போ என்னோட ஒத்தை செருப்பைக் காணாம மணல்ல துளாவினப்போ கைல கத்தி மாதிரி பிசுபிசுன்னு ஏதோ பட்டுச்சி. அது ஏதோ எலும்பா இருக்கும்னு தூக்கி போட்டுட்டு கடல்ல கை கழுவிட்டு புறப்பட்டுட்டேன். வழில என் மணி பர்சை தவற விட்டுட்டேன். தேடிப்பார்த்து கிடைக்காம ரூமுக்குப் போயிட்டேன்."

"சபாஷ்! உனக்கு கற்பனை சரளமா வருது."

"சார்! சத்தியமா இதுதான் நடந்தது."

"வளையலை விளையாட்டா உடைச்சாராம். பூவை விளையாட்டா பிச்சாராம். எலும்புன்னு நினைச்சி கத்தியை எறிஞ்சாராம். மதன், ஏதோ ஒரு படத்திலே ஒரு வக்கீல் சொல்வான்யா ஒரு வசனம். பொண்டாட்டி புருஷன் மூஞ்சில காறித்துப் பிட்டா. ஏன் துப்பினா? புருஷன் மீசை தீப்பிடிச்சி எரிஞ்சுது. அதை அணைக்கிற துக்காக துப்பினா! எப்படி? அந்த மாதிரி இருக்கு, நீ சொல்றது?"

"சார், என்னை நம்புங்க. நான் அப்பாவி."

"எழுதி நெத்தில ஒட்டிக்கிட்டா புரிஞ்சுக்க சுலபமா இருக்குமில்லே? ராஸ்கல்! வேஷமா போடறே? ராத்திரி உக்காந்து ரத்தக் கறை பாண்ட்டை துவைக்கிறே. என்னடான்னா இன்ட்டர்வியுங்கறே. வாய்க்கு வந்த போன் நம்பர் சொல்றே. சொல்லு. மரிய கீதாவை எதுக்காக கொலை செஞ்சே?"

"நான் பார்த்ததுகூட இல்லை சார். நீங்க சொல்ற பொண்ணை."

"டேய், பெல்ட்டை கழட்டினாத்தான் சரியா வருவியா?"

"சார் இதெல்லாம் அநியாயம். அடிக்காதீங்க. அய்யோ! அடிக்காதீங்க. ஆ! அடிக்காதீங்க....சார்....அம்மா!"

"கங்காதரன், லாக்கப்பை பூட்டுய்யா. அப்புறம் விசாரிக்கிறேன்."

"என்ன சசிதரன், பிடிவாதம் பிடிக்கிறானா?"

"ஆமாம். செட்டப்பா ஒரு கதை சொல்றான்."

"ஐ.... எவிடன்ஸ் இல்லையே சசிதரன்."

"இந்த கேஸ்ல சிச்சுவேஷனல் எவிடென்சே போதும்னு நினைக்கிறேன் சார். ரேகை பொருத்தம் ஒண்ணு போதும் நமக்கு. சார் ஆட்டோலேர்ந்து இறங்கிறது யார் தெரியுதா?"

**(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: ரி.சந்திரமோகன். வயது: 20 முகவரி: முதலாவது டிவிசன், 277/5, மரு தானை, கொழும்பு-10. பொழுது போக்கு: வானொலி, ரி.வி., பத்திரிகை.

பெயர்: வி.பாஸ்கரன். வயது: 30 முகவரி: 6ம் வட்டாரம், சாம்பல் தீவு திருகோணமலை. பொழுதுபோக்கு: பேனா நட்பு.

பெயர்: கே.ராஜன் வயது: 24 முகவரி: P.O.BOX-13197, DOHA, QATAR. பொழுது போக்கு: ரி.வி., பத்திரிகை.

பெயர்: எம்.ஹில்மி. வயது: 23 முகவரி: 70/1, சுனத்திரா தேவி வீதி, கொகுவளை, நுகேகொட. பொழுது போக்கு:பேனா நட்பு, பத்திரிகை.

பெயர்: எம்.அஷ்ரப். வயது: 21 முகவரி: 64,பள்ளி வீதி, உரு கொடருக்கஹவில. பொழுது போக்கு: நாவல், உதைபந்து.

பெயர்: எஸ்.ரஷீட். வயது: 22 முகவரி: P.O.BOX-67070, CODE-43761, AL-BAYAN, KUWAIT. பொழுது போக்கு : பத்திரிகை, புத்தகம்.

பெயர்: நியால்தீன் முகமட். வயது: 27 முகவரி: 135, கெழும்பு கஹவத்தை, அக்குறனை. பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம்.பௌஸ். வயது: 15 முகவரி: 557 N/1, ஸம்ஸம் வீதி, மருதமுனை-03, கல்முனை. பொழுதுபோக்கு: பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: ரி. தசிகுமார். வயது: 22 முகவரி: WUHR STR-28, 8003, ZURICH, SWITZERLAND. பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம். சிவகுமார். வயது: 17 முகவரி: எலிஸ்டன் தோட்டம், மேல் பிரிவு, புவக்பிட்டிய. பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எஸ். மணிசேகரன். வயது: 18 முகவரி: சப்பிரி ஜனபத்தய, இரட்டைப்பாதை. பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம்.இஸ்ஹாக். வயது: 21 முகவரி: 38/1, பமுணுவ வீதி, மஹரகம. பொழுது போக்கு: பத்திரிகை, நண்பர் தொடர்பு.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

## மக்சீம் கார்க்கி

## 88

"எனக்கு இப்போது தேநீர் தேவையில்லை", என்றாள் தாய்.

"எனக்கும்தான் தேவை இல்லை. அந்தப் பையன்களைப் பற்றி நீ என்ன நினைக்கின்றாய்? இவ் வுலகத்திலேயே அவர்கள் மட்டும்தான் இருப்பது போலல்லவா, அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். மற்றவர்களெல்லாம் அவர்களுக்கு ஒரு பொருட்டாகவே தோன்றவில்லையே. அந்த பியோதரைப் பார்!"

சமோய்லவின் தந்தை அவர்கள் அருகில், தொப்பியைக் கையில் பிடித்தவாறே, வந்து சேர்ந்தான்.

"என் கிரிகோரியைப் பார்த்தீர்களா?" என்று கசந்த புன்னகையோடு கூறினான் அவன்: "அவன் எதிர்வாதம் செய்யவும் மறுத்துவிட்டான்; அவர்களோடு பேசவே அவன் விரும்பவில்லை. முதன்முதல் அவனுக்குத்தான் இந்த யோசனை எட்டியிருக்கிறது. பெலகேயா, உன் மகனோ வக்கீல்களை வைத்து நடத்திப் பார்ப்பதற்குச் சம்மதித்திருக்கிறான். இவனோ எதற்கும் முண்டியதில்லை. அதன் பிறகு நாலு பேர் இவனைப் போலவே மறுத்து விட்டார்கள்."

அவனது மனைவி அவனுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். கண்ணில் பொங்கும் கண்ணீரை அடக்க எண்ணி அவள் கண்ணை மூடி மூடி விழித்தாள்; கைக்குட்டையால் நாசியைத் துடைத்துவிட்டுக் கொண்டாள்.

"இதுதான் அதிசயம்!" என்று தன் தாடியைப் பிடித்துக் கொண்டும், தரை மீது பார்வையை ஊன்றிப் பதித்துக் கொண்டும், பேசத் தொடங்கினான் சமோய்லவின் தந்தை. "இவர்களை, இந்தப் பயல்களைப் பார்க்கும்போது, இவர்கள் இந்த மாதிரியான சங்கடத்துக்குள் போய் மாட்டிக்கொண்டதையெண்ணி நம்மால் அனுதாபப்படாமலிருக்க முடியவில்லை. உடனே திடீரென்று நமக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. ஒரு வேளை இந்தப் பயல்கள் சொல்வது தான் சரியான உண்மையோ என்று நினைக்கத் தோன்றுகிறது! அதிலும் நாளுக்கு நாள் தொழிற்சாலையில் இவர்கள் கூட்டம் பெருத்து வருவதைக் கண்டால், இப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது. பொலிசாரோ அவர்களைப் பிடித்துக் கொண்டு போன வண்ணமாயிருக்கிறார்கள்; அவர்களோ ஆற்று மீன்களைப் போல பெருகிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களிடம்தான் சக்தி இருக்கிறதோ என்று நினைக்கத் தோன்றுகிறது."

"ஸ்திபான் பெத்ரோவிச்! இந்த விவரத்தைப் புரிந்து கொள்வது நம் போன்றவர்களுக்கு முடியாத காரியம்!" என்றான் சிஸோவ்.

"ஆமாம், சிரமமானதுதான்" என்று ஆமோதித்தான் சமோய்லவின் தந்தை.

"போக்கிரிகள், இவர்களுக்குத் தான் எவ்வளவுசக்தி!" என்று பலத்துச் சிணுங்கிக்கொண்டே கூறினாள். அவனது மனைவி.

பிறகு அவள் தாயின் பக்கம் திரும்பி, தனது தொளதொளத்த அகன்ற முகத்தில் புன்னகை அரும்பப் பேசினாள்:

"நீலவ்னா, என்மீது கோபம் கொள்ளாதே. கொஞ்ச நேரத்துக்கு முன்னால் நான்தான் உன் மகனைக் குறைகூறினேன். ஆனால் யார் குற்றம் அதிகம் என்று எவர் கூற முடியும்? எங்கள் கிரிகோரியைப் பற்றிப் பொலிஸ்காரர்களும், உளவாளிகளும் என்ன சொன்னார்கள் பார்த்தாயா? அவனும் இந்த விவகாரத்தில் தன்னாலானதைச் செய்திருக்கிறான், செந்தலைப் பிசாசு!"

தனது உணர்ச்சியை அவள் உணர்ந்து கொள்ளாவிட்டாலும் அவள் தன் மகனை எண்ணிப் பெருமை கொள்வதாகவே தோன்றியது. எனினும் தாய் அவள் கூறியதைக் கேட்டு மெச்சிக் கொண்டாள். அன்பான புன்னகை ததும்ப உள்ளத்திலிருந்து பிறந்த வார்த்தைகளோடு பதில் சொன்னாள் தாய்:

"இளம் இதயங்கள்தான் உண்மையைச் சட்டென்று எட்டிப் பிடித்துக் கொள்கின்றன..."

ஜனங்கள் வராந்தாவில் நடமாடினார்கள். கூட்டம் கூட்டமாகக் கூடி நின்று உள்ளடங்கிப் போன குரல்களோடும் ஆர்வத்தோடும் பேசிக்கொண்டிருந்தார்கள். யாருமே தன்னந்தனியாய் ஒதுங்கி நிற்கவில்லை. எல்லோரது முகங்களிலுமே, பேசவேண்டும்,

> **பொலிசாரோ அவர்களைப் பிடித்துக் கொண்டு போனவண்ணமாயிருக்கிறார்கள்; அவர்களோ ஆற்று மீன்களைப் போலப் பெருகிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களிடம்தான் சக்தி இருக்கிறதோ.....?**

கேள்வி கேட்கவேண்டும், பதில் தெரிய வேண்டும் என்ற ஆசையுணர்ச்சிகள் பிரதிபலித்தன. சுவர்களுக்கு இடையேயுள்ள நடைபாதைகளில் அவர்கள் ஓரிடத்திலும் கால் தரிக்காமல் முன்னும் பின்னும் காற்றினால் அலைக்கழிக்கப்பட்ட மாதிரி நடமாடினார்கள்; எதையோ தேடித் திரிவது போலவும் அதைக் கண்டுபிடித்து விட்டால், நிம்மதியாக இருக்கலாம் என்று எண்ணி உறுதியோடும் பலத்தோடும் பரபரத்துத் திரிவதைப் போலவுமே அவர்கள் காணப்பட்டார்கள்.

புகினின் மூத்த சகோதரன்-புகினைப் போலவே, நிறமற்ற அந்த நெட்டைச் சகோதரன்-தன் கைகளை ஆட்டிக் கொண்டும் எதையோ நிருபணம் செய்யப் போகிறவன் மாதிரி நாலா திசைகளிலும் திரும்பிப் பார்த்துக் கொண்டும் வந்து சேர்ந்தான்.

"அந்த கிளெபானவ்-அவன் தான் அந்த ஜில்லா அதிகாரி-அவனுக்கு இங்கு என்ன வேலை?..."

"கான்ஸ்தந்தீன்! உன் வாயைக் கொஞ்சம் மூடு!" என்று அவனது தந்தையான ஒரு குட்டைக் கிழவன் அங்குமிங்கும் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டே எச்சரிக்கை செய்தான்.


"முடியாது. என்னால் முடியாது. போன வருஷம் அவன் ஒரு குமாஸ்தாவின் மனைவியை அடைவதற்காக, அந்த குமாஸ்தாவையே கொன்று தீர்த்துவிட்டான் என்று ஊரில் பேசிக்கொள்கிறார்கள். இப்போது இவன் அவளோடுதான் வாழ்கிறான். இதைப்பற்றி நீ என்ன சொல்கிறாய்? மேலும் இவன் ஒரு பெரிய திருட்டுப் பயல் என்பதும் எல்லோர்க்கும் தெரியும்..."

"ஐயோ! நீ நன்றாயிருப்பாய், கொஞ்சம் பேசாமல் இரேன், கான்ஸ்தந்தீன்!..."

"ரொம்ப சரி" என்றான் சமோய்லவின் தந்தை: "ரொம்ப சரி. இந்த விசாரணை நேர்மையானது என்று சொல்லவே முடியாது.."

மூத்த புகின் இந்தக் குரலைக் கேட்டான்; அவன் தன்னோடு பலரையும் சேர்த்திழுத்துக் கொண்டு முன்னேறி வந்தான். அவனது முகம் சிவந்து போயிருந்தது. அவன் தன் கைகளை ஆட்டிக்கொண்டு சத்தமிட்டான்:

"கொலையானாலும் திருட்டானாலும் குற்றவாளிகளைப் பொது மக்களின் ஜூரிகளைக் கொண்டு விசாரிக்கிறார்கள். அந்த ஜூரிகளில் விவசாயிகளும், நகர மாந்தர்களும், தொழிலாளர்களும் உண்டு. ஆனால், ஜனங்கள் அதிகாரிகளுக்கு எதிராகப் போராடினால் மட்டும், அவர்களை விசாரிப்பது பொது மக்களின் ஜூரிகளல்ல; அதிகாரிகளே அவர்களைப் பிடித்து விசாரிக்கிறார்கள்! இதை என்ன சொல்கிறாய்? நீ என்னை அவமானப்படுத்தினாய் என்று வைத்துக் கொள். நான் உன் தாடையில் ஓங்கியறைகிறேன். அப்புறம் நீ என்மீது தீர்ப்புக் கூறுகிறாய்; நீ என்ன கூறுவாய்? என்னைத்தான் குற்றவாளி என்பாய். ஆனால் முதன் முதலில் தவறு செய்தது யார்? நீ தான். அது போல..."



நரைத்த தலையும் கொக்கி மூக்கும் கொண்ட ஒரு காவலாளி மார்பகலத்துக்குப் பற்பல மெடல்களை மாட்டிக்கொண்டு அங்கு வந்து சேர்ந்தான். அவன் ஜனக் கூட்டத்தைக் கலைந்துபோகச் செய்தான். புகினின் சகோதரனைப் பார்த்து விரலால் சுட்டிக்காட்டிப் பத்திரம் என்றான்.

"கூச்சலை நிறுத்து. இது ஒன்றும் கள்ளுக்கடை இல்லை!" என்றான் அவன்.

"அது சரிதான், பெரியவரே, எனக்குத் தெரியும். ஆனால் நான் உங்களை அடித்து விட்டு, பிறகு நானே நீதிபதியாகவும் மாறினால், அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்...?"

"உன்னை இங்கிருந்து கல்தாக் கொடுத்து வெளியில் தள்ளத்தான் நான் நினைக்கிறேன். தெரிந்ததா?" என்று கடுமையாகச் சொன்னான் அந்தக் காவலாளி.

"என்னை வெளியே தள்ளப் போகிறாயா? எதற்காக?".

"இந்தமாதிரிக் காட்டுக் கூச்சல் போடுவதற்காக! உன்னைத் தெருவில் கொண்டு போய்த் தள்ளிவிடுவேன்!"

மூத்த புகின் தன்னைச் சுற்றியுள்ளவர்கள் அனைவரையும் பார்த்தான். பிறகு தணிந்த குரலில் சொன்னான்:

"அவர்கள் விரும்புவதெல்லாம் ஒரே ஒரு விஷயம்தான். ஜனங்கள் வாயைப் பொத்திக்கொண்டு சும்மா இருக்க வேண்டும்!.."

"ஆமாம், நீ என்ன நினைத்தாய்?" என்று அந்தக் கிழவன் கரகரத்த குரலில் கேட்டான்.

மூத்த புகின் தோள்களைக் குலுக்கிவிட்டுக் கொண்டு மிகவும் மெதுவாகப் பேசத் தொடங்கினான்.

"விசாரணையைப் பார்க்க எல்லா ஜனங்களையும் ஏன் அனுமதிக்கவில்லை? உறவினர்களை மட்டும் ஏன் அனுமதிக்க வேண்டும்? உங்கள் விசாரணை நேர்மையானதாக இருந்தால், எல்லோரும் தான் அதைக் கேட்டுவிட்டுப் போகட்டுமே. எதற்காகப் பயப்படுவதாம்?"

"விசாரணை நேர்மையானதல்ல. அதில் சந்தேகமே இல்லை" என்று உரத்த குரலில் ஆமோதித்தான் சமோய்லவின் தந்தை.

இந்த விசாரணையே சட்டவிரோதமானது என்பதைப் பற்றி நிகலாய் இவானவிச் விவரித்துச் சொன்ன விஷயங்களை இவனுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்று தாய் திரும்பினாள்; ஆனால், அவன் சொன்ன விஷயங்களை அவள் பரிபூரணமாகப் புரிந்து கொள்ளவுமில்லை. மேலும் சில வார்த்தைகளும் அவளுக்கு மறந்து போய்விட்டன. எனவே அதை ஞாபகப்படுத்திப் பார்க்க முயன்று கொண்டே அவள் ஒரு பக்கமாக ஒதுங்கினாள். அந்தச் சமயத்தில் வெளிர் மீசை கொண்ட ஓர் இளைஞன் தன்னைக் கவனித்துக் கொண்டிருப்பதை அவள் கண்டுகொண்டாள். அவன் தன் வலதுகையை கால்சராய்ப் பைக்குள் செலுத்தியிருந்தான். எனவே அவனது இடது தோள் வலது தோளைவிடத் தணிந்திருப்பது போலத் தோன்றியது. இந்தத் தோற்றத்தை அவள் எங்கோ ஏற்கெனவே கண்ட மாதிரி இருந்தது. ஆனால் அவனோ திடீரென்று தன் முகத்தைத் திருப்பி நின்றுகொண்டான்: நினைவலைகளால் சூழப்பட்டிருந்த அவள், அவனை மறந்து விட்டாள்.

ஒரு நிமிஷம் கழித்து அவள் காதில் ஒரு கேள்விக் குரல் விழுந்தது.

"அவளா?"

"ஆமாம்" என்று ஆர்வத்தோடு ஒலித்தது பதில்.

அவள் சுற்று முற்றும் பார்த்தாள். தோளைத் தூக்கி கொண்டு நின்ற அந்த இளைஞன் இப்போது பக்கவாட்டில் நின்றான், கரிய தாடியும், குட்டைக் கோட்டும், முழங்கால் வரை உயர்ந்த பூட்சுகளும் கொண்ட இன்னொரு மனிதனோடு அவன் பேசிக்கொண்டிருந்தான்.

மீண்டும் அவள் தன் நினைவைத் தேடித் திரிந்தாள். அதனால் அவள் மனம் குழம்பியதுதான் மிச்சம். ஒன்றும் அவள் நினைவில் தட்டுப்படவில்லை. தனது மகனது கொள்கையை அந்த ஜனங்களுக்கு விளக்கி எடுத்துக் கூற வேண்டும் என்ற கட்டுப்படுத்த முடியாத பேராவல் அவள் மனத்தில் நிறைந்து பொங்கியது. அதைப் பற்றி இந்த ஜனங்களிடம் சொன்னால் இவர்கள் என்ன சொல்லுவார்கள், அதன் மூலம் அந்த விசாரணையின் முடிவு எப்படியிருக்கும் என்பதைத் தீர்மானிக்கலாம் என்று யோசித்தாள் அவள்.

"இதுதான் விசாரணை நடத்துகிற ஒழுங்கோ?" என்று அமைதியாகவும் ஜாக்கிரதையாகவும் சிஸோவை நோக்கிப் பேச்சைத் தொடங்கினாள் தாய். "யார் என்ன என்ன செய்தார்கள் என்பதை அறிவதில்தான் இவர்கள் நேரத்தைப் போக்குகிறார்களே தவிர, ஏன்அப்படிச் செய்தார்கள் என்பதை அறியவிரும்பவில்லை. இவர்கள் எல்லாம் கிழட்டு ஆசாமிகள்; இவர்களை இளைஞர்களைக் கொண்டுதான் விசாரிக்க வேண்டும்."

"ஆமாம்" என்றான் சிஸோவ். "இந்த விவகாரத்தை நாமெல்லாம் புரிந்து கொள்வது சிரமம்தான்-படுசிரமம்!" அவன் ஏதோ யோசித்தவாறே தலையை ஆட்டினான்.

காவலாளி நீதிமன்றத்தின் வாயிற் கதவைத் திறந்து விட்டு விட்டு, வாய் விட்டுக் கத்தினான்:

"உறவினர்களே! உங்கள் அனுமதிச் சீட்டுக்களைக் காட்டுங்கள்!"

"சீட்டுக்கள்!" என்று யாரோ குத்தலாகச் சொன்னார்கள். "இதென்ன சர்க்கஸ் காட்சியா?"

ஜனங்களிடம் ஓர் உள்ளடங்கிய எரிச்சல் குணம் லேசாக வெளித்தோன்றியது. அவர்கள் மிகுந்த இரைச்சலோடு பேசினார்கள்; அரட்டையடித்து காவலாளிகளோடு விவாதம் செய்துகொண்டிருந்தார்கள். ✳✳✳ (தொடர்ந்து வரும்)

---

# அர்ப்பணங்கள்

## ஆத்மராஜா ரூத் சந்திரிக்கா

கண்டியிலிருந்து கனவேகத்தோடு முன்னேறியது பேருந்து. ரியூட்டரி கும்பலின் அட்டகாசம், சிரிப்பலைகள் செவிப்பறை அத்துமீறல்களானது. இதமான சீதோஷ்ணம் பயண அலுப்பை விரட்டியது.

"பேசாம இருங்க மகன்..... கெதியா வீட்ட போகலாம்." மிகச் சமீபமாய் அந்தப் பெண்ணின் குரல்- பரிச்சயமான குரல்- கேட்டுத் திரும்பினேன்.

ஆயிரம் வோற் பாய்ச்சிய கண நேர அதிர்ச்சி- சில்மியா கபூர்.

"ஏய் ஏன் உறைஞ்சிட்ட? பின்னுக்கு இருக்கும்போதே உன்ன அடையாளம் கண்டிட்டேன். எங்க போறாய் இப்ப...?" சமநிலை தாவிப் பதில் சொல்ல எனக்கு வெகு நேரம் பிடித்தது..... அலையலையாய் வினாக்கள் அகத்தே பொங்கிப் பிரவாகித்தன.

'சில்மியாக்கு எப்பிடி இந்த வயதில் ஒரு குழந்தை? எப்போது திருமணமானது எப்படி....? எப்போது....?' நிறையக் குழம்பிப் போனேன்.

தொண்ணூற்றி இரண்டாம் ஆண்டு கூட இரண்டாம் முறையாய் ஏயெல் பரீட்சைக்கு சல்வார் கமீஸில் குதித்து வந்தவளுக்கு இதெப்பிடி சாத்தியம்? ஐந்து வயது முடிந்த குழந்தையோடு குடும்பப் பெண் முத்திரை வேறு.

"என்னப்பா எக்கச்சக்கமாய் திணர்றாய்?" "உம்மப்பற்றித்தான்!" "இப்ப எங்க போகப்போறாய்?" "கேகல்ல" "அவசரமில்லையெண்டால் மாவனல்லைல இறங்குமன்... நிறையக் கதைக்க வேண்டியிருக்கு" ஆமோதித்து விட்டேன்.

இந்தக் குழப்பத்துக்கு விடையில்லாமல் போனால் என் தலையே வெடித்து விடும் போல இருந்தது. என் பயண நோக்கமே திசை திரும்பி விட்டது, சில்மியாவால்.

இந்த நான்கு வருடங்களில் ஏற்பட்டு விட்டிருக்கும் சடுதியான மாறுதல்கள் பற்றி அறியாமல் போவதில்லையெனத் தீர்மானித்துக் கொண்டேன். "மம்பி....பிஸ்கட் வேணும், பிஸ்கட்" என்று சில்மியா மடியில் இருந்த அவள் புத்திரபாக்கியம் வேறு அலறிக் கொண்டிருந்தான். இப்போது ரியூட்டரிக் கும்பலின் அட்டகாசம் பெரிதாய்ப் புலப்படவில்லை... சிந்தனை திசைமாறி விட்டது சில்மியாவால். நினைவு தாவினேன்.

எண்பதுகளில்.....சில்மியா குடும்பம் யாழ்ப்பாண டவுணில் அரிசி ஆலையும் ஹாட்வெயார் ஸ்ரோரும் வைத்துக் குடியிருந்தது. இனமுரண்பாடுகள் முகிழப்படாத காலத்தின் என் பால்ய ஸ்நேகிதி. தொண்ணூறில் அவர்கள் வடபுலத்திலிருந்து வெளியேறி புத்தளம் போய் விட்டதை அறிந்திருந்தேன்.

சில்மியாவுக்கு ஒரு அக்காவும் ஒரு அண்ணாவும் இருந்தார்கள். அக்கா திருமணமாகி கண்டியில் குடியேறி விட்டதும், அண்ணா பாதுகாப்புப் படையில் வேலையாக இருந்ததும் தெரியும். யாழ்ப்பாணத்திலிருந்து புத்தளத்திற்கு போய் இரண்டு மாதத்தில் அவள் வாப்பா மாரடைப்பால் இறந்து போனதை பர்வீன் எழுதியிருந்தாள், கொழும்பிலிருந்து.

"ம்....இறங்குமப்பா வீட்ட போவம்" கலைந்தேன். பரபரப்பான மாவனல்ல பலார் கடந்து சமாந்தரமாய் நடந்தோம். எதுவும் பேசிக்கொள்ளவில்லை. அதிக பட்ச ஆடம்பரங்களில்லாத மத்திய தர வீடு.

அழுது கொண்டு வந்த குழந்தை கட்டிலில் விழுந்து தூங்கிவிட்டது. "ஈவினிங் போகலாம். நிறையக் கதைக்க வேண்டியிருக்கு. நிறையக் காலங்களுக்குப் பிறகு இப்பிடியொரு நிர்ப்பந்தமான சந்திப்பு- உம்மக் கண்டதும் எவ்வளவு சந்தோஷமாயிருக்கு!" என்று விட்டு உடைமாற்றி வந்தாள். மௌனத்தில் நேரம் கரைந்தது.

'வலியவே உடைக்கட்டும், அவசரப் படாதே! ஒரு நீண்ட ஆழமான மௌன அலறல் குபீரிடப் போகிறது.' என ஆழ்மனது அடித்துச் சொல்லிற்று. 'அவளாகவே சொல்லட்டும்- அவசரப்படாதே எதையும் கேட்காதே.' உடலின் சகல தூண்டல் நிலையங்களில் இருந்தும் செய்தி பறந்து வந்தது. எனக்குள் சைரன் ஒலித்தது. 'அலேட்.... அலேட்...'

"இப்போ என்ன செய்றாய் அகல்யா?"



"கொம்யூனிகேஷன் டிகிரி"

"எதுக்கு கேகல்ல வந்த?"

"சிங்கள கள்சர் றிசேச்சிங்குக்கு."

"எத்தின நாள் நிப்ப?"

"ரெண்டு மாசம்."

"ஓ... அப்படீன்னா அடிக்கடி வந்து போவியா? ப்ளீஸ்." சரேலென என் கரம் பற்றினாள்.

இரு சோடி விழிகளும் குபீரிட்டன. வாரி இறைத்தன.

"வாப்பா மௌத்தானப்புறம் புத்தளத்திலேர்ந்து கண்டிக்கு வந்திட்டம். ஏயெல் என்ரன்ஸ் கிடைக்கல்ல- பாதையே மாறிப் போச்சு. இடம்பெயர்ந்தப்புறம் நானா... தொண்ணூத்தி மூணுல ஒரு மோதல்ல மௌத்தாகிட்டார்"

"ஓ..ஹ்"

"போன இயர்ல ராத்தா பிரசவத்தில மௌத்தாகிட்டா."

"ஜீ...ஸ...ஸ்." அலறியே விட்டேன்.

"ராத்தா குடும்பம் அநாதரவாகிடிச்சு... றமீஸும் சுமியாவும் வளர்ந்திடாங்க- பிறந்த குழந்தையும் நாலு வயது ஷெப்ரானும் தவிச்சுப் போயிடக்கூடாங்கிறதுக்காக நான் இதை ஏத்துக்கிட்டன்."

"ஓ...."

"அவ வளர்த்து ஆளானவ நான். அவ பிள்ளையள தவிக்க விடுறது நியாயமான்னு மனது கேட்டுது- அர்ப்பணிச்சிட்டன்."

"இருந்தாலும் உன் லைஃப்ப...நீ..."

"ஓ...நோ..... அர்ப்பணங்கள்ல வாழ்வு முழுமையடையுதுன்னு நெனைக்கிறன் அகல்யா. இந்தக் குழந்தைகளோட எதிர்காலம்தான் என் வாழ்வோட லெட்சியம், என் பிறப்போட பெறுமதி" மௌனமான ஒரு மயக்கம் என்னுள்.

"நிக்கிற ரெண்டு மாசத்லயும் நிறைய வந்து போ. அகல்யா- நான் நிறையச் சந்தோஷப்படுவன், நம்ம சந்திப்புகளால"

"ஓ...நிச்சயமாய்!" மாலை மங்கிக் கொண்டு வந்தது. கனத்த இதயத்தோடு விடைபெற்றேன்.

ஒரு மான்குட்டியாய் குதிக்கும்- குதூகலிக்கும் என் ப்ரிய சில்மியா நீண்ட மௌனத்தோடு- இடுப்பில் குழந்தையோடு விடை கொடுத்தாள். கையசைத்து தெருவில் இறங்கினேன்.

மனம் முழுவதும் சோகச்சுமை. ●




படிப்பகம்

www.padippakam.com

# ஒரு ஞாபகம்

**சொல்லுங்கள் இந்த அம்பிக்கு பைத்தியமா? அம்பிக்கு பைத்தியம்தானா?**

**கௌரிபாலன்**



"ஐய்யய்யோ....! அம்பி மண்விளையாடுது பார்த்துக்கொண்டு இருக்கிறீங்களே!" காலுக்குப்போடும் சொக்ஸ் கைக்குப்போட்டு முடமாக்கப்பட்டபோது அம்பிக்கு வயது இரண்டு.

"ஐய்யய்யோ....! அம்பி என்னென்னமோ கண்டதெல்லாம் சொல்லுது...." அர்த்தம் புரியாத வார்த்தைக்காய் உதடு வீங்க சுண்டப்பட்டபோது அம்பிக்கு வயது நாலு.

"டோய்....அம்பி தலவலிக்குதுடா....பெனடோலும், ஜிஞ்சிபியரும் வாங்கியாடா....ரோட்டில் ஓரமாப் போடா. இரண்டு பக்கமும் பாத்து ரோட்ட குரோஸ் பண்ணுடா...., கடைக்காரன் மிச்சத்தில ஏமாத்துவான், எண்ணி வாங்கியாடா...., வாசல் கதவ பத்திரமா சாத்திப்போட்டுப் போ....!" அம்பி தெருக்கதவு தாண்ட முதல்.... "நீ உள்ள போடா...." என்று சோடாப் போத்தலுடன் கடைக்குப்போகும் தந்தையைப் பார்த்து நின்ற போது அம்பிக்கு வயது பதினைந்து.

"டோய் அம்பி ரவுண்டப் நடக்கும். ஜீன்ஸ் போடாத. அரைக்காற்சட்டை போடு. அப்பத்தான் சின்னப் பொடியனாத் தெரியும்...." அரைக் காற்சட்டை போட்டு சைக்கிள் பின் கெரியரில் இருந்து தந்தையுடன் டியூசனுக்கு போனபோது அம்பிக்கு வயது பதினெட்டு.

எதிர்வீட்டு ராசாத்தியிடம் தினமுரசு வாங்கியபோது. "ஏண்டி என் புள்ளய அத இதக் காட்டி வளச்சுப்போடப் பாக்கிறியாடி...?" தாய் சண்டை போட்டாள். எதிர்த்து சண்டை போட்ட ராசாத்தியை வியப்பாய் பார்த்தான். ராசாத்தி பார்க்கும்போது, முகம் சிவந்து வெட்கப்பட்ட போது அம்பிக்கு வயது இருபத்தைந்து.

அம்பிக்கு பெண் பார்க்கப்போனபோது, "அம்மா உங்க புள்ளையோட நான் கொஞ்சம் பேசணும்.." பெண் கேட்ட போது.... "எந்திரிடா...அம்பி இது நம்ம குடும்பத்துக்கு ஒத்துவராது..." தாய் வேகமாய் எழுந்து போனார். முகமெல்லாம் பல்லாய் இருந்த அம்பி, திடீர் மாற்றத்தால் முகத்தை இறுக்கமாக்க முடியாமல், முகம் கோணிப் போன போது, அம்பிக்கு வயது இருபத்தெட்டு.

ஓர் அறிஞனின் கூற்று இது: "அனுபவம் என்பது ஓர் அருமையான சீப்பு; ஆனால் அது நம் கைகளுக்கு கிடைக்கும் போது நம் தலையில் முடி இருப்பதில்லை." அம்பிக்கு உலக அனுபவம் தேவை என்று பெற்றவர்கள் உணர்ந்த போது காலம் கடந்து போயிருந்தது. அதிசம் தனக்குள் கதைத்து, சிரித்து கற்பனை உலகில் வாழத் தொடங்கி இருந்தான் அம்பி.

அம்பியின் கற்பனையில் அதிகம் பாதிப்புத் தந்தது- பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த குளக் கோட்டு மன்னன் சரித்திரம். குளக்கோட்டு மன்னனோ அவர் மனைவி ஆட்கசவுந்தரியோ அம்பியின் கற்பனையில் ஆதிக்கம் செலுத்தவில்லை. குளக்கோட்டு மன்னனின் தேர்ச் சாரதி முகில்வண்ணனும் அவன் மனைவி முல்லையுமே அதிகம் அம்பியைப் பாதித்தார்கள்.

♪♪♪

எட்டிசை மண்வெட்டிக் கொண்டே
ஏழரைச் சுற்றாம்
மரத்தை இனதா வெட்டி
தட்டி ஒரு காலாலே எற்றி
அது விழு முன்னம்
தரணி மீதில்
ஒட்டி ஒரு குளம் அமைத்து அங்கு
உறுநீரும் கொண்டு
அருளையுற்ற வீரன்....
(கோணேசர் கல்வெட்டு.)

எட்டுத் திக்குகளிலும் மண்ணை வெட்டி ஏழரைச் சுற்றுள்ள பாரிய மரத்தை வெட்டி காலினால் எற்றித் தட்டி வீழ்த்துவதற்கு முன்னர் இப்பூமியில் ஒரு திருக்குளத்தைக் கட்டி அதில் நீரையும் நிறைவாகப் பெற்ற வீரனே!... "ஆகா... அருமை மன்னவா உன் பெருமையை என்னவென்றுரைப்பேன்." முன்னே விரிந்து பரந்து கிடந்த கந்தளாய் குளத்தைப் பார்த்து வியந்து நின்றான் முகில்வண்ணன். திடீர் என்று குதிரைக் குளம்பொலி கேட்கத் தொடங்கியது. முகில்வண்ணனைத் தாண்டி வேகமாய்ப் போனது மன்னவன் ரதம்.

"நிறுத்துங்கள் ரதத்தை" கத்திக் கொண்டு பின்னே ஓடினான் முகில் வண்ணன். ரதம் நின்றது. மன்னர் இறங்கி குளக்கட்டு வழியே மதகு நோக்கி போய்க் கொண்டிருந்தார். முல்லை கை அசைத்தபடி ரதத்தில் இருந்து குதித்தாள்.

"ஆகா....இது அல்லவா மனைவிக்கு அழகு! நான் இல்லை என்றதும் மன்னவன் ரதம் செலுத்திய முல்லையே நீ வாழ்க!" சொல்லிக் கூவிக் கொண்டு முல்லையை நோக்கி ஓடினான் முகில் வண்ணன். முகில்வண்ணன் ஓடி வருவது கண்டு முல்லை ஓடினாள். முகில்வண்ணன் துரத்த.... முல்லை ஓட.....காடு நெருங்கியது.

"அடி....வனமோகினியே... முல்லை! எங்கேயடி ஓடுகிறாய்? நில்...நில்..."

"துவண்ட எப்பா.... துவண்ட எப்பா....." (ஓட வேண்டாம்.) துரத்திவந்த இராணுவம் அம்பியைப் பிடித்துக்கொண்டது. கந்தளாய் குளக்கட்டுக்கு குண்டு வைக்க வந்துவிட்டுத் தப்பி ஓடியதாக அம்பி கைது செய்யப்பட்டான். மனநிலை பாதிக்கப்பட்டவன் என்று விடுதலையானான்.

▫▫▫▫▫▫▫▫

குளக்கோட்டு மன்னன் அரண்மனை! முகில் வண்ணன் ரதத்திலேயே காத்திருந்தான், மன்னவன் வருகைக்காக. ஏனோ மன்னன் வரத் தாமதமாகியது. ரதத்தில் இருந்தபடி உப்பரிகையை நோக்கினான் முகில்வண்ணன். 'அடடா...என் தேவதையல்லவோ உப்பரிகையில்!' உப்பரிகை நோக்கி கையசைத்தான் முகில்வண்ணன். அங்கிருந்து கையசைத்தாள் முல்லை. ரதத்தினின்று குதித்து உப்பரிகைப் படிகளில் தாவி ஏறினான் முகில்வண்ணன். உப்பரிகையில் முல்லையைக் காணாது முகில்வண்ணன் அங்கும் இங்கும் அலைந்து தேடினான். "முல்லை... முல்லை" என்று முனகிக் கொண்டு தண்ணீர்த் தொட்டியில் அலைந்த அம்பியை குண்டுக்கட்டாக தூக்கிப்போனார்கள் பொலிசார். பொதுதண்ணீர்த் தொட்டியில் ஏறி நீருக்கு நஞ்சு கலக்க முனைந்ததாக குற்றம் சாட்டப்பட்டான் அம்பி.

நீதிபதி கேட்டார்: "நீர் எதற்காக தண்ணீர்த் தொட்டியில் ஏறினனீர்..?"

"மன்னவா..! யான் ஒரு குற்றமும் செய்தறியேன்... உப்பரிகையில் முல்லையைத் தேடினேன். என்னை இங்கு அழைத்து வந்தார்கள் காவலர்கள்." நீதிபதி தலையில் கைவைத்தார். வழக்கை மருத்துவ அத்தாட்சியுடன் கொண்டுவருமாறு உத்தரவிட்டார். மனநிலை பாதிக்கப்பட்டவன் என்னும் மருத்துவ அத்தாட்சிப் பத்திரத்துடன் விடுதலையானான் அம்பி.

****

ஆலயமும் மணிமதிலும் கோபுரமும்
அழகுவாய்ந்த
சேதமிலாப் பூங்காவும்.....
(கோணேசர் கல்வெட்டு)

"ஆகா...அற்புதம்.....அற்புதம்....மன்னவா! உன் பணியே அரும்பணி...." நந்தவனத்திலே தன்னை மறந்திருந்தான் முகில்வண்ணன். 'அட என் நந்தவனத்துக் குயில் முல்லை எங்கேயடி போனாய்? கோணேசர் உற்சவம் களைகட்டி இருக்கும் வேளை, எங்கே போனாள் முல்லை?'- தனக்குள் கேட்டுக் கொண்டான் முகில்வண்ணன். "முல்லை கெதியாவாடி பூசை தொடங்கப்போகுது..." ஒரு தோழி இன்னொரு தோழியை இழுத்துக்கொண்டு வேகமாய் போனாள். "அடி முல்லை நான் இங்கிருக்கும்போது எங்கேயடி போகிறாய்?" கேட்டுக்கொண்டே, முகில்வண்ணன் சட்டென முல்லையின் கையைப் பற்றினான். 'பளார்...' கன்னத்தைப் பொத்திக் கொண்டான் அம்பி. "பாவம்டி அது பைத்தியம் ஏண்டி அறைஞ்சனி?" ஒரு தோழி இன்னோர் தோழியை இடித்துக் கொண்டாள். "அடி முல்லை நீயா என்னை அறைந்தாய்...? பதில் சொல்லிவிட்டுப் போடி!" மீண்டும் அந்த பெண்கள் கூட்டத்தை அம்பி நெருங்க முனைந்தான். கோயில் பாதுகாவலர்களால் நையப்புடைக்கப்பட்டு வெளியேற்றப்பட்டான் அம்பி.

"மன்னவா! இதுவா உன் மனுநீதி? என் முல்லையை என்னிடம் இருந்து பறித்து உன் காவலர் கொண்டு தாக்கினாயே....? மன்னவா இதுவா உன் மனுநீதி?" அம்பி உரத்துக் கூவினான். மென்மையான குரல் முதல் கடூரமான குரல்வரை பல தொனியில் சொல்லிப் போனது. "பைத்தியம் முற்றி விட்டது." அம்பி பைத்தியமா....?

---

நிலா தன் பாட்டில் படுத்துக் கிடந்தது. பார்த்துக் கொண்டிருந்தாள் நிஷா. கவிதை வரவில்லை. கண்ணீர் வரவில்லை. கலைந்து போன காதலை எண்ணி கவலையும் வரவில்லை. ஆச்சரியமே!

தென்றல் காற்று இதமாக வீச, கரிய இரவுதான்..... ஆனால் பால் நிலவு பகலாய் அல்லவோ காட்டிக் கொண்டிருந்தது.

அலுப்பாயிருந்தது. தூக்கம் தான் கைவிட்டுப் போய்விட்டதே. நிலையான நிசப்தமற்ற இதயத்திலோ என்னவோ இரைச்சல்.

# கா(த)லவ் தேசம்

**விசாரணையும் தேடுதலும் முடிய அதிகாலை ஒரு மணி.... பால் நிலா காய்ந்துகொண்டிருந்தது.**

**ஷர்மிளா இஸ்மாயில்–கண்டி**



வெளியே இனம் புரியாத வண்டுகளின் ரீங்காரங்கள். தூரத்தில் ஊளையிட்டழும் நாய். நிசப்தம் குலைந்தது இடைக்கிடையே, சலசலத்தாடும் மரங்களின் இலைகள்; ஓடும் மேகங்களில் கண்ணாமூச்சாடும் நிலாவை அவ்வப் போது கீற்றுக்களாய் கிழித்துக் காட்டும் தென்னோலைகளின் அசைவு.

யோசித்தாள். வராதிருந்த கவலை வருவதாய் போக்குக் காட்டியது. 'கவிதை எழுதுவோமா?' பேனை விரல்களுக்கிடையே அமர்ந்து கொண்டது. மனசு தான் அல்லாடியது. என்ன இது? எனக்குள்ளேயே அமர்ந்து கொண்டு எனக்குக் கட்டுப்படாது திமிறும் பொல்லாத மனசு.

நிழலாய் தூரத்தே தெரியும் மலைகளில் ஒன்றின் உச்சியில் நின்று 'ஓ'வென்று கத்த வேண்டும் போலிருந்தது.

இலைகளையெல்லாம் உதிர்த்து விட்டு பட்டுப் போய்- ஆனால் இன்னும் வெட்டப்படாதிருந்த தோட்டத்து மரத்தின் ஏதாவது கிளையில் ஏறி, அமர்ந்து காலைத் தொங்கப் போட்டபடி 'சொல்லி விடு வெள்ளி நிலவே...' என பாடிப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

இன்னும். இன்னும்... நேசத்தை மறந்து மௌனித்து நிற்கும் அவன்... தென்றலாய்ப்போய் அந்த அவன் உறங்குகையில் முகம் பார்த்து நின்று... சொட்டும் விழிகளுடன் நெற்றியின் மயிர்கோதி ஒற்றை முத்தமிட்டு தென்றலாகவே திரும்பி வர வேண்டும் போல்...

'ப்ச்... என்ன நினைப்போ?' மீண்டும் அலுப்பு பெருமூச்சாய் வெளிவந்தது. (ஆரம்பவரிகள் பொய்த்துப் போனதே. அதாவது கலைந்து போன காதலை... எண்ணி!!!)

"இன்னும் தூங்கலையா நிஷா?" இதமாக கேட்டு அறையைத் தாண்டிப் போனது அப்பாவின் குரல். ஒபீஸ் கணக்கு வழக்குப் பார்த்து முடித்திருப்பார். நினைத்துக் கொண்டாள்.

"தூக்கம் வரலைப்பா..." சன்னமான குரல். "ம்... வரலயா..? அப்போ கதையெழுது.. இல்லை கவிதை எழுது.. என்ன?"

அப்பாவுக்கேயுரித்தான அந்த அன்பான குரல் மனதை வருடியது. 'ம்.. மணி பதினொண்டாகுது. லைட்டை அணைச்சிட்டுப்படு.' எனக் கத்தும் ரகமில்லை இந்த அப்பா. பிள்ளைகளின் மனம் புரிந்து அதற்கேற்றபடி அன்புடன் கூடிய கட்டுப்பாடு.. புன்னகைத்துக் கொண்டாள். கவலை மட்டும் வந்தது. கவிதை.. ம்ஹூம்...

ஜன்னலின் பக்கமாக வெளியே நிழலாடியது. யார்? கள்வனா? பார்த்தாள். ம்ஹூம் பிரமை. மனப்பிரமை. ஒதுக்கினாள் நினைப்பை.

யாரோ கதவைத் தட்டுவதாய் ஒலி. நிஜம். நிஜமே "யாரது?" கேட்டுக் கொண்டே அப்பா கதவைத் திறக்கும் ஒலி வேறு.

நண்பர்களா? விருந்தினர்களா? இல்லை கதவைத் தட்டி விட்டு பண்பாட்டுடன் வரும் திருடர்களா? ஒரு கணம் நினைத்துப் பின் சிரித்து விட்டாள்.

அப்பாவிடம் யாரோ ஏதோ விசாரிக்கும் தொனி! கம்பீரமான உரத்த குரல். காலடிச் சத்தங்கள். கலவரமாய் உணர்ந்தாள் நிஷா. அவள் அறையை விட்டு வெளிவர அண்ணன், தம்பி, அம்மா எழுந்து வர சரியாயிருந்தது.

காக்கியுடைக்காரர்கள். பக்கத்து வீட்டு புதுக் குடித்தனக்காரரின் பெயரைக் கூறி, இதுவா வீடென விசாரணை.

தப்பு. தவறு. அதோ வீடெனக் காட்டினார் அப்பா. போய் விட்டார்கள்.

"நடுநிசி. என்னடாப்பா சோதனை?" அப்பா வெளிப் படையாய் அலுத்துக் கொட்டினார்.

சோதனை தான். தமிழ் மொழியைத் தாய் மொழியாய்க் கொண்டு தமிழராய்ப் பிறந்து விட்டால்..... அதுவும் இத்தேசத்தில் மனங்களுக்கிடையேயான புரிந்துணர்வும் மதங்களுக்கிடையேயான நல்லுறவும் அறுந்து போய் மானுடம் வெறும் ஜடமாய் நடமாடும். தீயெரியும் தேசமல்லவோ இது?

புதுக்குடித்தன வடபுல சகோதரர்கள் என்ன சொன்னார்களோ? இவர்கள் என்ன விசாரித்தார்களோ? எதுவும் புரியவில்லை. திடீர்ச் சோதனை. சோதனை தான்.

அப்பாவும் அண்ணாவும் போனார்கள். மொழி பெயர்ப்பு தேவைப்பட்டது பின்னர் தான் புரிந்தது.

விசாரணையும் தேடுதலும் முடிய ஒரு மணி அதிகாலை.... பால் நிலா காய்ந்து கொண்டேயிருந்தது.

அதுவரை காற்றிலிருந்த ஏகாந்தம் கனமான "பூட்ஸ்"களால் கலைக்கப்பட்டது. கலவரப்பட்ட மனங்களும் முகங்களும். தேடுதலின் பூச்சிய விளைவு. போய் விட்டார்கள் காவலர்கள். "கடமையைத் தானே செய்கிறோம்! நன்றி" சொன்னார்கள்.

காயப்பட்ட மனதோடும் கலைக்கப்பட்ட உறக்கத்தோடும் முகங்கள். நிஷா பார்த்துக் கொண்டிருந்தாள். இன்னும் நிலா காய்ந்து கொண்டே... கவிதை மட்டும் வரவில்லை.

---

# ஜாதகம்

**இரத்தினபுரி-கோகிலா குமாரவேல்**

கண்ணாடி முன் நின்றபடி என்முகத்தை வைத்தகண் வாங்காமல் பார்த்தபடி இருந்தேன். என் முகத்தில் ஏற்பட்டுள்ள செழிப்பைப் பார்த்து எனக்கே வியப்பாக இருந்தது. கைவிரல்கள் மதிவதனத்தை மென்மையாக வருடின. விழிகளில் புதியதோர் ஒளி. உள்ளத்தினுள் ஊற்றெடுத்த மகிழ்ச்சிப் பிரவாகத்தின் பிரதிபலிப்பு என்னுள் புதிய மாற்றத்தை உண்டுபண்ணியிருந்தது.

"நேற்று இல்லாத மாற்றம் என்னது.. காற்று என் காதில் ஏதோ சொன்னது..." உரத்த குரலில் வெகு உற்சாகமாகப் பாடினேன்.

"அடடா என்ன இனிமை" கைதட்டியபடி தங்கை வாணி அருகில் வந்தாள்.

"அக்கா நீ ரொம்ப அழகாயிருக்கே" கரங்களால் இடுப்பை வளைத்து கன்னத்தில் முத்தமிட்டவளை செல்லமாக முறைத்தேன்.

"ரொம்பதான் ஐஸ் வைக்கிறே ஜலதோஷம் பிடிச்சிடாமல் இருந்தா சரிதான்"

"நிஜமாதான் சொல்றேன். இந்த ரெண்டு வாரமா நீ எப்படி மாறிட்டே தெரியுமா? உன் மன்மதன் தினந்தோறும் காதல் கணை தொடுத்திட்டு போறாரா?" புரியாமல் பார்த்தேன்.



"அதான் கனவில் வந்து கிஸ்ஸடிச்சிட்டு போறாரான்னு கேட்டேன்!".

"ச்சீ! போடி பைத்தியம். நீ ரொம்ப மோசமாயிட்டே!" அவள் காதை திருகினேன். "நீ கொடுத்து வைத்தவக்கா. உனக்கேத்த ஹீரோ கிடைச்சிட்டான். எனக்கு எந்த கேனப்பயல் மாட்டப்போறானோ" கவலைதோய்ந்த குரலில் முணுமுணுத்தப்படியே வாணி வெளியில் செல்ல சிரித்தபடியே கட்டிலில் அமர்ந்தேன்.

உண்மைதான். என் மனதினுள் கற்பனை செய்து வைத்திருந்த அதே உருவம் அவனில் அமைந்திருந்தது. ஆச்சரியமாகவும் அதே சமயம் ஆனந்தமாகவும் இருந்தது.

கறுப்பென்றாலும் கம்பீரத்தோற்றமும் கவர்ச்சியான முகமும் ஒளிவீசும் அவன் விழிகளும் இதயத்தினுள் அஜந்தா ஓவியமாய் பதிந்துவிட்டது. விடைபெறும்போது அவன் விழிகள் பேசிய மொழி..! நினைக்கும் போதே மனதுக்கு இதமாக இருந்தது. அதுவே இனிய கனவுகளாகி, இன்ப நினைவுகளாகி எனக்குள் எதிர்பார்ப்பை விளைத்திருந்தது.

"பையன பிடிச்சிருக்கா" அம்மா கேட்டாள். முகம் சிவக்க தலையை தாழ்த்திக் கொண்டேன். என்றுமில்லாதவாறு ஓர் இனம் புரியாத நாணம் என்னை ஆட்கொள்ள மௌனமாக அமர்ந்திருந்தேன். என் மௌனத்தின் வெளிப்பாடு அம்மாவுக்குப் புரிந்திருக்க வேண்டும். புன்னகைத்தபடியே என் தலையைத் தடவினார். மானசீகமாக என் பெற்றோருக்கு நன்றியைக் கூறிக் கொண்டேன்.

அன்றொரு காலைப்பொழுது நாவலொன்றினுள் தொலைந்து போயிருந்தபோது "வாங்கோ கந்தசாமியண்ணே" அப்பாவின் குரல் பலமாகக் கேட்டது. புரோக்கர் கந்தசாமி வந்திருக்க வேண்டும். ஏதாவது முக்கியமான செய்தி கொண்டு வந்திருப்பார். நாவலை மூடி வைத்துவிட்டு கவனத்தை ஹோலுக்குள் திருப்பினேன்.

சுகம் விசாரிப்புக்களின் பின் புரோக்கர் விஷயத்திற்கு வந்தார். "பையனுக்கு பொண்ண ரொம்பவும் பிடிச்சுபோயிருக்கு. ஆனா.." அந்த நொடி மௌனம் எனக்குள் யுகமாய் தோன்றியது. இதயம் வேகமாக அடித்துக் கொண்டது.

"ஏன் வரதட்சணை பிரச்சனையோ...?" அப்பா சொல்லி முடிக்கவும், "அதெல்லாம் ஒன்றுமில்ல. இதுகள் ரெண்டுபேரோட ஜாதகம் பொருந்துதில்லையாம். அதனால் அவைகள் கொஞ்சம் பின்வாங்குகினம்" தலையைச் சொறிந்தார். "ஓமோம் ஜாதகம் பொருந்தாட்டால் விட்டுடவேண்டியதுதான். வேறு எங்காவது நல்ல இடமா பாருங்கோ!" அப்பா ஏமாற்றத்தை மறைத்துக்கொண்டு பேசினார்.

எனக்கு உச்சந்தலையில் இடிவிழுந்தது போல் இருந்தது.

காலடியில் இருந்து தரை நழுவிக்கொண்டிருந்தது...

www.padippakam.com

# இலக்கிய நயம்



பட்டத்துராணியின் இதயம் துடித்தது.
விழிகளை வீசி வழியை மேய்ந்தாள்.
தேர்க்காலில் சிக்கிய பசுவாய்
மனது கிடந்து துடியாய் தவித்தது!

யுத்தம், யுத்தம், குருதி யுத்தம்.
காக்கைக்கும், கழுகுக்கும்,
சித்தம் கெட்ட மனிதனின் படையல்.
நித்தமும் யுத்தம் வாழ்க்கையானால்
நிம்மதி கருகிய சாம்பலே மிஞ்சும்!

போருக்கு செல்வோர் வெறியோடு கூவ
வீடுகளில் இருப்பவர் தவிப்பில் சாய
சென்றவர் வருவது நிச்சயமற்ற
ஒவ்வொரு பொழுதும் ஒவ்வொரு யுகமே!

மன்னன் களத்தில்
மகாராணி சோகத்தில்!
ஓவென்ற கதறல் ஒவ்வொரு வீட்டிலும்.
வாழ்க்கை என்பது அட்சயபாத்திரம்
போரில் அதனை வீசியெறிவதோ?
பட்டத்துராணி விசும்பி அழுதாள்.

நெற்றித் திலகம் இட்டது மெய்தான்.
'சென்று வருக. வென்று வருக'
சொன்னதும் நானே அதுவும் மெய்தான்.
'சென்றுவருக' என்பது அன்பு.
'வென்று வருக' என்பது அழிவு.

'வென்று வருதல்' என்பதன் அர்த்தம்
சிரங்களை வீழ்த்தி திரும்புதல்தானே!
என்னவர் உயிர் எனக்கு முக்கியம்
தேக்குமரத் தேகம் சாய்ந்தது என்று
செய்தி வந்தால் என் உயிர் தங்குமோ?

அதே உணர்வே அனைவருக்கும் உண்டு.
கட்டிய மனைவியை கட்டிலில் பிரிந்து
கொஞ்சிய மழலையை தொட்டிலில் விட்டு
கட்டிக் கரும்பே! வென்று வருகிறேன்
என்ற சொல் உதிர்த்து சென்றவர் எத்தனை?



வெற்றி-வெற்றி-அதுவே வெறி
விலையாக எத்தனை வீரிய மனிதர்?!
கலையாக கொலைகள் செய்வதுதானே
வெற்றிப் போதையின் விபரீத நடனம்!

கழுகு சுவைத்த கணவனின் உடலும்
காகம் கொத்திய தந்தையின் தேகமும்
கண்டதும் கிளம்பும் மரண ஓலமும்
காற்றுக்கும், பூமிக்கும் களங்கம் அல்லவா?

சுத்தமான காற்றும், சுதந்திரமான வாழ்வும்
பூமி நமக்குத் தந்த கொடைகள் அல்லவா?
இரத்தவாடையும், இரணமான வாழ்க்கையும்
நாமே சிருஷ்டித்த கொடுமைகள் அல்லவா!

பூமிமாதா வெட்கிப் போகிறாள்.
வானமகள் கண்ணீர் சொரிகிறாள்.
கோபத்தில் வறண்டது பூமி.
அழுது வற்றியது வானமகள் விழிகள்!

"மாதம் மும்மாரி பொழியவில்லையே?
வினா எழுப்பினால் வானமகள் சிரிப்பாள்.

வருடம் முன்னூறு போர் மாரி
பொழிகின்ற குருதி போதாதா?
வானமகள் கேட்டால் வாயடைத்துவிடுவோம்!

பட்டத்துராணிக்கு நியாயம் புரிந்தது.
பட்டதை சொன்னால் கேட்பது யார்?
பட்டறிந்தாலும் உணருவார் இல்லையே!
கெட்டழிவதே மனித விதியானதோ!?

ஒரு நாள் சொன்னாள் உதடு திறந்து.
"தேவையா இந்த நாச யுத்தம்?
நிறுத்திவிடாலாமே நிம்மதி திரும்பும்!"
மன்னன் நகைத்தான்; மீசை துடித்தது.

"வாழ்க்கை என்பதே யுத்தம்தானே!
கருவறையில் யுத்தம் பத்துமாதம்.
கட்டிலறையில் யுத்தம் தாபம் தீரும் மட்டும்.
களத்திலே யுத்தம் காரியமாகுமட்டும்.
வெற்றிதான் காரியம். வீரம்தான் ஆயுதம்!"

மறுபேச்சுக்கு ஒரு வாய்ப்பேயில்லாமல்
இதழ்களை தன் உதட்டால் மூடிவிட்டான்.
"என் இனிய ராணி யுத்த களமடி இந்த மேனி"
புகழ்ந்தபடி இரு மொட்டுகள் மத்தியில்
முகம் புதைத்தான். சுகம் விதைத்தான்!

"இதமான மலைகளுண்டா இவையை விட்டால்?
சுகமான கனிகள் உண்டா இவையைவிட?

சூடான களம் உண்டா இதற்கு ஈடாக?
தோதான உடல் கண்டேன் தங்கத் தேராக!"
புகழ்மொழியும், புலம்பலின் சுகமும்
நியாயம் கேட்க நினைத்தவளை
தேகயாகத்தீயில் தள்ளியதே!

விடியும்வரை விடாத யுத்தம்.
விடிந்த பின்னர் போர் உடை தரித்து
"போய் வரவா?" என்று கேட்டான்.

கலங்கி நின்றவள் முன் கண் சிமிட்டினான்.
"இரவு யாத்திரையில் நான் இட்ட முத்திரை;
இதழ்களில் பாரடி பற்குறி தெரியும்.
முத்திரை மறைய முன்னர்
இத்தரைமீது என்னைக் காண்பாய்!"
விடைகொடுத்தாள், விழிகளில் நீர்த்திரை!

சென்றவன் வரவில்லை, தேகம் துடித்தது.
புறாவின் சிறகாய் இதயம் துடித்தது.

கண்களை இறுக மூடிக்கொண்டாள்.
தூக்கம் வரவில்லை. துர்க்குணக்காட்சி!

கண்ணுக்கெட்டிய தூரம் வரை
நீண்டு விரிந்த களத்து மேடு.
செங்கம்பளவிரிப்பாய்
நிலத்தின் மீது குருதிச் சாயம்.
இரண்டு துண்டாக வெட்டுண்டுஉடல்கள்
நிலத்தை அடைத்து நிரம்பிக் கிடந்தன.

இங்கெப்படி மலைகள்?
அய்யகோ... அதுவெல்லாம்
வெட்டப்பட்ட மனிதத் தலைகள்!



எந்தக் கடல் இங்கே வந்தது?
இல்லையய்யோ.... இல்லை.....
சாய்ந்த உடல்கள் சிந்தும் குருதி
கடலாய் விரிந்து பரவின எங்கும்,
கடலாய் திரண்ட இரத்த வெள்ளத்தில்
மனிதக் குடல்கள் மிதந்து.... மிதந்து..

அலறியபடியே பட்டத்துராணி
பதறியெழுந்தாள்.

பட்டத்துராணி கண்ட காட்சி
கலிங்கத்துப் பரணியில்
பாடலாய் வருகிறது பாரீர்.

"விருதர் இரு துணி பார் நிறைந்தன,
விடர்கள் தலை, மலையாய் நெளிந்தன.
குருதி குரைகடல் போல் பரந்தன.
குடர்கள் குருதியின் மேல் மிதந்தவே."
கலிங்கத்துப்பரணி-பாடல்-442
பாடியவர்:- சயங்கொண்டார்.

தருவது
ரசிகன்

# சுப்பர் 8 கிரிக்கெட் போட்டி
# அவுஸ்திரேலிய அணி சாம்பியன்

முதலாவது சுப்பர் 8 கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி, தென்னாபிரிக்க அணியை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளது.

ஆசியாவில் கிரிக்கெட் விளையாட்டைப் பிரபலப்படுத்தும் குறிக்கோளுடன், அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை (ஏ.சி.பி.) புது முறையிலான ஒரு கிரிக்கெட் போட்டியை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு அணியிலும் 8 வீரர்கள் இடம்பெறுவார்கள். ஒவ்வொரு அணிக்கும் 14 ஓவர்கள் பந்துவீச்சுத்தான் அனுமதிக்கப்படும். பவுண்டரிகளின் மதிப்பு, 4 ஓட்டங்களுக்குப் பதிலாக 8 ஓட்டங்களாக இருக்கும். இது போன்ற புதுமையான விதிகள் சுப்பர் 8 போட்டியில் இடம்பெற்றுள்ளன.

விசித்திரமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தப் போட்டி முதன்முறையாக மலேசியத் தலைநகரான கோலாலம்பூரில் நடத்தப்பட்டது.

இறுதிப் போட்டியில், அவுஸ்திரேலிய அணி, தென்னாபிரிக்க அணியை 36 ஓட்ட வித்தியாசத்தில் வென்றது.

அவுஸ்திரேலிய அணிக்குத் தலைமை தாங்கிய டேரன் லெஹ்மன் 52 ஓட்டங்களையும், அடம் கில்கிறிஸ்ட் 51 ஓட்டங்களையும் குவித்தனர். பிரட் ஹோக் 37 ஓட்டங்களைப் பெற்றார். இறுதியில் அவுஸ்திரேலிய அணி 6 விக்கெட் இழப்பிற்கு மொத்தம் 211 ஓட்டங்களை எடுத்தது.

தென்னாபிரிக்க அணிக்குத் தலைமை வகித்த அடம் பெக்கர் துவக்க ஆட்டக்காரராகக் களத்தில் இறங்கினார். அவுஸ்திரேலிய அணியின் சிறப்பான பந்து வீச்சினால் முதல் ஓவரிலேயே ஆட்டமிழந்தார்.

டக் வட்சன் 45 ஓட்டங்களையும், டேவ் கலகன் 51 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். மற்ற வீரர்கள் அனைவரும் குறைந்த ஓட்டங்களிலேயே ஆட்டமிழந்தனர்.

6 விக்கெட் இழப்பிற்கு தென்னாபிரிக்க அணி மொத்தம் 175 ஓட்டங்களைத்தான் எடுக்க முடிந்தது.

தென்னாபிரிக்க அணியின் சார்பாகப் பந்து வீசிய பட் சிம்கொக்ஸ் 35 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், கேரி கில்ட்ஸ் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இருந்தும் அவுஸ்திரேலிய அணியின் வெற்றியைத் தவிர்க்க முடியவில்லை.

இந்த முறை பெரும் ஆதரவு கிடைத்துள்ளதால், இனி ஒவ்வொரு வருடமும், சுப்பர் 8 போட்டி தொடர்ந்து நடத்தப்படும் என்று ஏ.சி.பி. தெரிவித்துள்ளது.

# சிந்தியா பதில்கள்



முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாராய்

**★ அட்லாண்டாவில் இலங்கையும், இந்தியாவும் ஒரு பதக்கமாவது பெறவில்லையே?**

வே.பன்னீர்ச்செல்வம், பலாங்கொடை.

*அரசியல் சடு குடு, யுத்தக் கபடி என்றெல்லாம் விளையாட்டுகளை சேர்க்காமல் விட்டதுமூலம் இருநாடுகளுக்கும் எதிராக சதி செய்துவிட்டார்கள்.*

**★ டியர் சிந்தியா! புதிதாக அமுல்படுத்திய நேரமாற்றம் தொடர்ந்தும் நீடிக்குமா?**

ஏ.செபஸ்தியன், உக்குவல.

*அதென்ன அரசியல் தீர்வுப் பொதியா, அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்க?*

**★ டியர் சிந்தியா! சந்தேகம் பிறந்து விட்டால் சத்தியமும் பலிப்பதில்லை. உங்கள் கருத்தென்ன?**

ஆர்.சங்கர், அலவத்துகொட.

*சந்தேகம் என்பது ஒரு நோயாக இல்லாமல், நோய்க்கான காரணத்தை கண்டறியும் நோக்கமானதாக இருந்தால் சத்தியத்தோடும் கைகுலுக்கும்.*

**★ நிச்சயமாக கிடைக்காது என்று தெரிந்த பின்னரும் அதை அடைய ஆசைப்படுவது சரியா, தவறா?**

எஸ்.என்டோ கமல், கொழும்பு-13.

*இந்த இடத்தில்தான் ஆசையே துன்பங்களுக்குக் காரணம் என்ற தத்துவம் பிசகே இல்லாமல் பொருந்தும்.*

**★ பெண்கள் சிலர் தங்கள் வயதை குறைத்துச் சொல்வது எதற்காக?**

சி.இந்திராணி, ஹட்டன்.

*நடுத்தரவயதுள்ள பெண்மணி ஒருவர் டாக்டரிடம் சென்றாள்.*

*"என்ன உடம்புக்கு?" டாக்டர் கேட்டார்.*

*"தலைவலி, கால்களிலும் வலி, இரத்த அமுத்தம் வேறு அதிகமாக இருக்கிறது."*

*"உன் வயது என்ன?"*

*"அடுத்த ஆண்டு வந்தால் எனக்கு 26 ஆகிறது"*

*"அடடா நினைவாற்றலும் சரியில்லை" என்று முணுமுணுத்தபடியே காகிதத்தில் ஏதோ கிறுக்கினார் டாக்டர்.*

**★ டியர் சிந்தியா! தர்மம் எப்போது ஜெயிக்கும்?**

மருதமுத்து நவநீதன், புஸ்ஸல்லாவ.

*தனக்காகப் போராட தகுந்தவர்கள் கிடைக்கும்போது.*

**★ முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யா ராய் என்ன செய்து கொண்டிருக்கிறார்?**

வி.ரவீந்தர், கொழும்பு-10.

*நடித்துக்கொண்டிருக்கிறார். இதற்கு மேல் சொல்ல அனுமதியில்லை. மூச்! அதெல்லாம் இரகசியமாம். யார் சொன்னது? ஐஸ்வர்யா ராய்தான். பிரசுரமாகியுள்ள படத்தைப் பாருங்கள்!*

**★ டியர் சிந்தியா! செக்ஸ் பற்றி பேசுபவர்கள் எப்படிப்பட்டவர்கள்?**

எம்.கோணேஸ்வரன், மன்னார்.

*தமாசான பேர்வழிகளாகவும் இருப்பார்கள். ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்!*

*ஒரு ஜெனரல், ஒரு கேர்ணல், ஒரு மேஜர் ஆகிய மூன்று இராணுவ அதிகாரிகள் செக்ஸ் பற்றி காரசாரமாக விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.*

*ஜெனரல்:- செக்ஸ் என்பது 60 சதவீதம் வேலை. 40 சதவீதம் வேடிக்கை.*

*கேர்ணல்:- செக்ஸ் என்பது 75 சதவீதம் வேலை. 25 சதவீதம் வேடிக்கை.*

*மேஜர்:- செக்ஸ் என்பது 90 சதவீதம் வேலை. 10 சதவீதம் வேடிக்கை.*

*இந்த நேரத்தில் இடையில் ஒரு சாதாரண வேலைக்காரன் வந்தான். அவனிடமும் அதே பிரச்சனைக்கு அபிப்பிராயம் கேட்டார்கள்.*

*அவன் சொன்னான்: "செக்ஸ் என்பது நூறுசதவீதம் வேடிக்கைதான். அதில் வேலையம்சம் ஏதேனும் இருந்திருந்தால், இந்நேரம் உங்களுக்குப் பதிலாக அந்த வேலையை என் தலையில்தானே கட்டியிருப்பீர்கள்!"*

**★ எதிர்காலம் சந்தோசமாக அமையாது என்று முன்கூட்டியே அறிந்தால் மனநிலை எப்படியிருக்கும்?**

புனிதா வேலுப்பிள்ளை, கலவான.

*அவரவர் எதிர்காலம் அவரவர் கையில்தான் இருக்கிறது. சந்தோசமாக அமையாது என்று தெரிந்தால், அதற்கான காரணத்தை கண்டறிந்து சந்தோசமான எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ள முயலவேண்டும். குறிப்பாக கண்ட கண்ட ஜோசியர்களை நாடி மனதைக் குழப்பிக்கொள்ளக்கூடாது.*

**★ வாழ்க்கையின் அர்த்தம் என்ன சிந்தியா?**

எம்.எம்.பாத்திமா, கல்முனை.

*இதே கேள்வியைத்தான் 'ராக்கி டோன்ஸ்கி' என்னும் மருத்துவர் தனது மாணவர் ஒருவனிடம் கேட்டார்.*

*"வாழ்க்கையின் பயன் என்ன? வாழ்வின் அர்த்தம் என்ன?"*

*அந்த மாணவன் தயக்கமும், முனகலுமாய் எதையோ ஞாபகப்படுத்திக் கொள்ள முயற்சிப்பதுபோல தாமதித்து விட்டுச் சொன்னான்:*

*"நேற்று எனக்குத் தெரியும். ஆனால் இந்த வினாடியில் ஞாபகத்திற்கு வரமாட்டேன் என்கிறது."*

*ராக்கி டோன்ஸ்கி உடனே வானத்தைப் பார்த்துக் கூவினார்.*

*"ஓ! கடவுளே! யாருக்கும் தெரியாதது ஒரு மனிதனுக்கு மட்டும் தெரிந்தது. ஆனால் இதோ, அவனும் அதை மறந்து விட்டான்."*

**★ விற்பனை செய்ய நினைக்கும் பொருட்களுக்கு சம்பந்தமே இல்லாத விளம்பரங்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?**

எஸ்.நாகநாதன், மட்டக்களப்பு.

*உங்கள் கவனத்தை தூண்டில் போட்டுப் பிடிப்பதுதான் நோக்கம்.*

*இலண்டன் நகரத்தில் ஒரு சிறு கடைக்காரர் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.*

*அவருடைய கடையின் முன்புற ஷோக்கேஸை மேலிருந்து முழுவதுமாக நடுவில் சிறு துவாரம் மட்டும் உள்ள கறுப்புத்துணியால் மூடிவிட்டார். அந்த சிறு துவாரத்தின் கீழே பெரிதாக எழுதி வைத்தார்;*

*"துவாரத்தின் வழியாக எட்டிப்பார்ப்பது கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது."*

*அவ்வழியே போனோர் வந்தோரெல்லாம் உள்ளே அப்படி என்னதான் இருக்கிறது என்று அறியும் ஆவலில், துவாரத்தில் பார்க்க முண்டியடித்தனர். போக்குவரத்தே ஸ்தம்பித்துவிட்டது.*

*உள்ளே வேறுஒன்றும் இல்லை. அழகான கைக்குட்டைகள் மட்டுமே இருந்தன. அது கைக்குட்டைகள் விற்கும் கடை. அந்தக் கடைக்காரர் செய்த தந்திரம் கடையை விளம்பரப்படுத்த மந்திரம் போல உதவியது.*

**★ அவசரமான முடிவு எச்சந்தர்ப்பத்தில் கைகூடும்?**

பாத்திமா மின்ஹா, புத்தளம்.

*ஒரு பார்சல் இருக்கிறது. அதில் வெடிகுண்டு இருப்பதாக எல்லோரும் சந்தேகிக்கிறார்கள். உண்மையாக இருக்குமோ. வெடிக்குமோ என்றேல்லாம் நிதானமாக முடிவுசெய்யாமல் அந்த இடத்தைவிட்டு ஓடிவிடுவது உத்தமம்.*

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 43

## ஜடாயுவின் முடிவும் இராமரின் துயரும்

இராமரும் இலக்குவனும் தரையில் விழுந்து கிடந்த ஜடாயுவைக் கண்டதும் ஆற்றொணாத் துயருடன் ஓடிச் சென்று அவரை வாரி எடுத்து அணைத்தனர். மூச்சுப் பேச்சற்றுக் கிடந்த ஜடாயு உண்மையில் இறந்து விட்டாரோ என்று ஆரம்பத்தில் எண்ணிய போதும், காயங்களிலிருந்து பெருகிய இரத்தத்தினால் களைப்படைந்து மூர்ச்சித்துக் கிடந்தார். இராமருடைய கை பட்டதும் ஜடாயுவின் உடலில் ஒரு புது வேகம் தென்பட்டது. அவர் சுவாசிப்பதை இருவரும் அவதானித்தனர். இராமரும்

அவனுடைய வஜ்ஜிராயுதம் போன்ற வாளின் வீச்சிலிருந்து என்னால் தப்பமுடியாமல் போய்விட்டது. எனது இறக்கைகள் இரண்டையும் வாளால் வெட்டிவிட்டான். இதனால்தான் என்னால் அந்தரத்தில் நின்று அவனுடன் போரிட முடியாமற் போய் விட்டது.

இராமா! அந்தக் கற்புக்கரசியை இராவணன் இலங்காபுரிக்குக் கொண்டு செல்கிறான். ஆனால், அவனுக்கு எத்தீங்கும் நேராது. நீங்கள் எப்படியும் சீதையைச் சிறைமீட்பீர்கள். உங்கள் சபதம் ஈடேறும்.

கூட்டியே அறியும் ஆற்றல் அவனிடமிருந்தது. ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் அவர் எத்தகையவர் என்பதை அனுமானிக்கும் திறமை இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, மிகவும் மென்மையான இதயம் படைத்த இராமருக்கு அவ்வப்போது ஏற்படும் துயரங்களிலிருந்து காப்பாற்றித் தேற்றுவதற்கான ஆற்றலும் இருந்தது. இராமர், சீதை ஆகியோருடன்- அவர்களுக்குத் துணையாக அயோத்தியை விட்டு நீங்கி ஆரணியம் புறப்படும்போதே இவ்வரிய ஆற்றல்கள் இலக்குமணனிடம் வந்து குடியேறிவிட்டதைக் காண்கிறோம்.

### இறுதிக் கடன்

ஜடாயுவின் பிரிவால் செயலற்றுச் சோர்ந்து போன இராமரைத் தொட்டெழுப்பி, மேற்கொண்டு செய்யவேண்டிய கடமைகளை நினைவூட்டினான் இலக்குவன். தங்கள் தந்தை தசரதமாமன்னர் உயிர் நீத்தபோது அன்னாருடைய பூதவுடலுக்கு இராம இலக்குவனால் இறுதிக் கடன்களை உரிய முறையில் செய்ய முடியாமற் போய் விட்டது. ஜடாயுவையும் தங்கள் தந்தையின் நிலையில் இருவரும் ஏற்றுக் கொண்டமையினால் இறுதிச் சடங்குகளை முறையாகச் செய்து முடித்தார்கள்.



அன்று மாலையில்தான் ஜடாயுவின் சிதைக்கு முறைப்படி தீ மூட்டி நீர்க் கடனையும் செலுத்தினார்கள். இரவு இருள் சூழத் தொடங்க இராமரின் உள்ளத்திலும் இருள் சூழ்ந்தது. ஜானகியைக் கைப்பிடித்து ஏறத்தாழ இருபத்திரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இருப்பினும் இன்றுதான் இராமர் சீதையின்றி தனிமையில் முதலிரவைக் காண்கிறார். இதுவரை அவர்கள் ஒருவரை ஒருவர் பிரிந்ததேயில்லை.

சீதை தன்னருகே இல்லாத துயரம் மேலிட இராமர் சோகமே உருவானார். அதேவேளை தனது மனையாளை இராவணன் கவர்ந்து சென்றானே

இலக்குவனும் உகுத்த கண்ணீர் அவருடைய உடலில் பட்டதும் ஜடாயு கண்களை விழித்து இருவரையும் பார்த்தார்.

தசரத குமாரர்களைக் கண்டதும் ஜடாயுவின் உடலில் புதுத் தெம்பு ஊற்றெடுத்தது போன்றதோர் உணர்வு ஏற்பட்டது.

### புத்துணர்வு பெற்ற ஜடாயு

"இராமா! இறுதி நேரத்தில் எதனை யாசித்தேனோ அது எனக்குக் கிட்டிவிட்டது. இருவரும் சீதையைத் தேடிக்கொண்டு வரும் வேளையில் என் உயிர் பிரிந்திருந்தால், அப்பத்தினித் தெய்வத்துக்கு என்ன நடந்ததோ என்று தெரியாமல் தவித்திருப்பீர்கள். உங்களிடம் சீதைக்கு என்ன நேர்ந்தது என்பதை எடுத்துக்கூறும் வரை என் உயிர் பிரிந்து விடக்கூடாதென, இராமா! உன்னையே பிரார்த்தித்தேன். என் உயிர் பிரியாமல் இருந்தது. இராமா! நீங்கள் இருவரும் வரும் வழியில் வீணைக் கொடி கிழிந்து கிடந்ததைப் பார்த்திருப்பீர்கள்! இலங்கையை ஆட்சி புரியும் அரக்கர்கோன் இராவணனுடைய கொடிதான் அது. தெரிந்திருப்பீர்கள். அந்த இராக்கதன் தான் தன்னுடைய விமானத்தில் சீதையை அபகரித்துச் செல்கிறான். அவனுடன் போர் புரிந்தேன். என் கூரிய அலகைத் தவிர வேறு ஆயுதங்கள் என்னிடமில்லை. அவனோ சகல ஆயுதங்களையும் வைத்திருந்தான். அவனுடைய மாமேரு மலைபோன்ற வில்லினையே ஒடித்தெறிந்துவிட்டேன். அவனுடைய அம்பறாத் தூணியையும் வேல் முதலான பல்வேறு ஆயுதங்களையும் களைந்தெறிந்து விட்டேன். அவன் போகும் திசையினை நீங்கள் அறிய வேண்டும் என்பதற்காக அந்த ஆயுதங்களை ஆங்காங்கே தரையில் வீசியெறிந்தேன். அவனுடைய பத்துத் தலைகளிலுமிருந்த கிரீடங்களையும் கீழே உருட்டித் தள்ளி வைத்தேன். ஆனால்

என் கடமை முடிந்தது. எனக்கு விடை கொடுங்கள். இராமா! எனது இறுதி மூச்சினை உன்னுடைய மடியிலேயே விட்டு விடும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததே! அதுவே போதும்.....இராமா....இராமா.... இராமா....!" இவ்வாறு மூன்று முறை அழைத்ததும் ஜடாயுவின் உயிர் பிரிந்தது. ஜடாயு தன் மடியிலிருக்கும் போதே அவருடைய உயிர் பிரிந்தது கண்டு அளப்பரிய துன்பமடைந்த இராமர் மூர்ச்சித்து இலக்குவன் மடியில் சாய்ந்தார். இலக்குவன் தன் கமண்டலத்திலிருந்து சிறிதளவு நீரைக் கையிலெடுத்து தாமரை போன்ற தனது அண்ணனின் முகத்தில் தெளித்தான். இராமர் கண் திறந்தார். தங்கள் தந்தைக்கு நிகரான ஜடாயுவின் மறைவு அவரைத் துயர வெள்ளத்தில் அமிழ்த்தியது. கண்ணீர் கரை புரண்டு ஓடியது.

### இராமரின் புலம்பல்

"தம்பி! பார்த்தாயா இந்தத் துரதிஷ்டசாலியின் நிலையை? நம் தந்தை மரணமடைவதற்கும் நானே காரணமாயிருந்தேன். இக்கானகத்தில நம் தந்தைக்கு நிகராக ஜடாயு ஐயாவைக் கண்டு, அவரை எம் தந்தையாகவே கருதினோம். ஆனால் என்னுடைய தவறினால், என்னைவிட்டுப் பிரிய நேர்ந்த என் மனையாள் ஜானகியை கொடியவன் ஒருவனிடமிருந்து காப்பாற்ற எம் தந்தையாம் ஜடாயு ஐயா தன்னையே அர்ப்பணித்து உயிர்த்தியாகம் புரிய நேர்ந்ததே! ஐயோ! என்னால் எத்தனை பேருக்குத் துன்பம்.... நான் ஏன் இன்னும் உயிர் வைத்திருக்க வேண்டும்?" என்று வாய்விட்டழுது புலம்பலானார் இராமர்.

இலக்குவனும் பெரும் துயரடைந்தாலும் இராமரைத் தேற்றும் வல்லமை பெற்றிருந்தான். வயதில் இளையவனானாலும் இராமரைவிட இலக்குவனிடத்தில் சில விசேட சக்திகளை காணக்கூடியதாக இருக்கிறது. நடக்கப் போகும் காரியங்களை முன்

இராஜகுமாரன்

என்பதால் அவமானமும் அவன் மீது அடங்காத கோபமும் உண்டாயிற்று. இதற்கிடையில் தங்களது தந்தைக்கு நிகரான ஜடாயு, தங்களுக்காகவே உயிர் துறந்தார் என்று எண்ணுகையில் துக்கமும் பச்சாதாபமும் ஒன்றாக எழுந்தன. இந்த ரீதியில் இராமரிடம் அப்போது பலதரப்பட்ட உணர்வுகள் ஒன்றன் பின் மற்றொன்றாக வந்து மோதின. இருவரும் அருகிலிருந்த ஒரு குன்றின் மீது ஏறி அமர்ந்து கொண்டனர். இருவருமே அன்றிரவு முழுவதும் கண்ணுறங்காமல் விழித்திருந்தனர்.

### சீதையைத் தேடி புறப்பாடு

இருளகன்று பொழுது புலர்வதற்கான அறிகுறிகள் தோன்றின. அப்போது தனது உள்ளுணர்வுகளை அடக்கியேயாக வேண்டும் என்ற ஞானம் இராமரிடம் உதயமாயிற்று. எப்படியும் முனிவர்களுக்குக் கொடுத்த வாக்கினைக் காப்பாற்றியேயாக வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற்றது. அரக்கர் வம்சத்தை அடியோடு அழித்தேயாக வேண்டும். அதுவே தன் முழுமுதற் கடமை என்ற உணர்வு மேலிட்டது. இருப்பினும் கதிரவன் உதயமாகும் இளங்காலைப் பொழுதில் தன் மனையாள் ஜானகி செய்யும் பணிகளை எண்ணிப் பார்த்துத் துயரடையாமலும் இராமரால் இருக்கமுடியவில்லை.

இவ்வாறு மாறுபட்ட உணர்வுகளுடன் போராடிய இர்ராமரை இளையவனான இலக்குவன் அணுகி, "அண்ணலே! அரக்கனால் அபகரிக்கப்பட்ட அண்ணியைத் தேடிச் செல்லாமல் நாம் இங்கே தங்கியிருத்தல் தகாது. எழுந்திருங்கள்! ஜடாயு ஐயா கூறியதைப் போல அரக்கர்க்கரசன் இராவணன் சென்ற தென்திசையில் நாமும் காலதாமதம் செய்யாமல் சென்று தேடுவோம்!" என்று கூறினான். தம்பி கூறுவதே சரியென அண்ணலுக்குப்பட்டது. இருவரும் குன்றிலிருந்து கீழிறங்கி அடர்ந்த காட்டினிடையே நடந்தார்கள்.

கதிரவன் உச்சியில் நின்று கனவேகத்தில் தன் கதிர்களைப் பரப்பிக் கொண்டிருந்தான். அப்போது அந்த அடர்ந்த கானகத்தின் மத்தியில் பளிங்கினாலான ஒரு மண்டபம் தென்பட்டது. களைப்புற்ற இராமரை அம்மண்டபத்தில் அமர்த்தி விட்டு அவர் பருகுவதற்கு தண்ணீர் கொண்டு வருவதற்காக இலக்குமணன் புறப்பட்டான்.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி: 41**

**சரியானவிடை:- ஜடாயு**

1. கே. ஷனாஸ் மொஹமட். 81, பிரதான வீதி, பலாங்கொடை.
2. பீ.ஆர். அசோக்குமார். ஸ்டேம் ஃபொடில், டிக்கோயா.
3. ஹிதாயா மரிக்கார். 331, பிரதான வீதி, ஹல்தும்முல்லை.
4. அ. நாகநாதன். 131, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.
5. எம். புஷ்பமாலா. மே/பா.முனிதாச, நீலகம எஸ்டேட், 2ம் டிவிசன், கஹவத்த.

**போட்டி இல. 43** கேள்வி:- இராவணனுடைய கொடியில் பொறிக்கப்பட்டுள்ள சின்னம் என்ன?

ஆகஸ்ட்.17 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி—இல.43, தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

---

## ஒலிம்பிக் போட்டிகளில் நம் நாட்டுத் தலைவர்களுக்கு பிடித்தமான விளையாட்டுக்கள்.





| | |
|---|---|
| ஜனாதிபதி சந்திரிக்கா | - நீண்டதூரப் பாய்ச்சல். |
| பிரபாகரன் | - குண்டெறிதல். |
| தொண்டமான் | - டைவிங். |
| ரணில் விக்கிரமசிங்கா | - கால் பந்து. |
| அனுருத்த ரத்வத்தை | - பளு தூக்குதல். |

---

சுமுகமாகவும், மிக நீண்டகாலத்திற்கும் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சில யோசனைகளை வாரி வழங்குகிறார் காதிலை பூ கந்தசாமி.

## பேசலாம், பேசலாம் பேசிக்கொண்டே இருக்கலாம்!

### பேச்சுவார்த்தைக்கு சில யேசனைகள்

பேச்சுவார்த்தைக் கதவுகள் திறந்தே இருக்கின்றன. எவரும் ஆயுதங்களோடு உள்ளே செல்ல முடியாதளவுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாகச் செய்யப்பட்டுள்ளன.

ஆகவே, பேச்சுவார்த்தைக்கு வருபவர்கள் யாராக இருந்தாலும் தம்மிடமுள்ள ஆயுதங்கள் மற்றும் ஆயுதம் போல கருதப்படக் கூடிய பொருட்கள் யாவற்றையும் கீழே போட்டுவிட்டோ, அல்லது தூர எறிந்து விட்டோ பொடி நடையில், கடும் சேதனைக்கு தயாராக வருமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறோம்.

பேச்சுவார்த்தையில் கலந்துகொள்பவர்கள் பாவிக்கக்கூடாத வார்த்தைகள் பின் வருமாறு.

1. ஆயுதம்.
2. வெடிகுண்டு.
3. தாக்குதல்.
4. போராட்டம்.
5. தாயகம் மற்றும் அதே பொருள் குறிக்கும் சொற்கள், வாக்கியங்கள்.

மேற்கண்டவற்றில் ஏதாவது ஒரு வார்த்தையைத் தப்பித்தவறியோ, பழக்க தோஷம் காரணமாகவோ பிரயோகிப்பவர்கள் பேச்சுவார்த்தையில் தொடர்ந்து கலந்துகொள்ளும் அரிய வாய்ப்பைத் தவறவிட்டவர்களாவர்.

பேச்சுவார்த்தைகளில் தகுதிபெறுவதாயின் குறைந்தது மூன்று மாதமாவது தொடர்ச்சியாகப் பேசவேண்டும்.

அவ்வாறு தொடர்ச்சியாகப் பேசும்போது 'இல்லை,' 'முடியாது', 'ஏற்றுக்கொள்ள இயலாது' மற்றும் அதே பொருள் தரும் வார்த்தைகளைப் பயன்படுத்தக் கூடாது.

'தொடர்ந்து பேசலாம்', 'நம்பிக்கை தருகிறது'

'முன்னேற்றம் தெரிகிறது', 'சுமுகமாக நடைபெற்றது', 'வெளியேசொல்ல விரும்பவில்லை' போன்ற வார்த்தைகளை எத்தனை ஆயிரம் முறை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்.

பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்பவர்கள் பேச்சுவார்த்தை நடைபெறும் காலவரம்புக்குள் எக்காரணம் கொண்டும் பின்வருவோருடன் தொடர்புகளை வைத்துக் கொள்ளக்கூடாது.

1. பத்திரிகையாளர்கள்.
2. உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்கள்.
3. குற்றம், குறை கண்டு பிடிக்கக் கூடியவர்கள்.

பேச்சுவார்த்தை ஆரம்பமாகும் முன்னர் அதில் கலந்து கொள்வோர் ஒவ்வொருவரும் இரத்த பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

இரத்தத்தில் ஆயுதம் ஏந்தும் உணர்ச்சிகளுக்கான அணுக்கள் காணப்படுமிடத்து, குறிப்பிட்ட பிரதிநிதி வெளியேற்றப் படுவார்.

பேச்சுவார்த்தை பல கட்டங்களாக நடைபெறும்.

மூன்று மாதங்கள் பேச்சுவார்த்தை தொடர்ச்சியாக நடைபெறவேண்டும் என்பதாலும், பிரதிநிதிகளுக்குள் எவ்வித மனத் தாக்கங்களும் நேரக்கூடாது என்பதாலும் அதற்கேற்ப திட்டமிட்டு கட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன.

**கட்டம் ஒன்று;**

தேநீர் விருந்து.

**கட்டம் இரண்டு.**

தேநீர் விருந்தின் குறை, நிறை பற்றி பிரதிநிதிகள் மனம்திறந்து கருத்துப் பரிமாறலாம்.

**கட்டம் மூன்று;**

உணவு, மற்றும் சிற்றுண்டி விடயத்தில் பிரதிநிதிகள் தமது கோரிக்கைகளை முன் வைக்கலாம்.

முக்கிய குறிப்பு:- உணவு நேரத்தில் முள்கரண்டி, சிறு கத்தி போன்றவை பயன்படுத்தக்கூடாது. அவையும் ஆயுதமாகப் பயன்படுத்தப்படலாம் என்று புலனாய்வு தகவல்கள் கூறுகின்றன.

மாமிச உணவுகள் உடலில் கொழுப்பை அதிகரிக்கச் செய்வதுடன், சாந்த உணர்வுகளையும் பின்னடையச் செய்கின்றன என்று உறுதியாக நம்பப்படுகிறது. ஆனகாரணத்தினால் மிக மென்மையான சைவ உணவுகள் மட்டுமே பரிமாறப்படும்.

சைவ உணவுகள் தயாரிக்க இந்தியாவில் இருந்து சமையல்காரர்கள் வரவழைக்கப் படுவார்கள். அதனை இந்தியாவின் தலையீடு என்று எவரும் கருதிக் கொள்ளக்கூடாது.

சைவ உணவுகளான தரமான துவரம் பருப்பு, வடிவான உருளைக்கிழங்கு, பதமான தக்காளி போன்றவை இந்தியாவில் இருந்து தருவிக்கப்படுகின்றன. அதனை வைத்து இந்திய உதவி பெறப்படுவதாக நினைத்துக் குழம்பிக் கொள்ளக் கூடாது.

பிரச்சனைகளைத் தீர்க்கும் விடயம் தவிர்ந்த ஏனைய சகல விடயங்களிலும் உலகில் உள்ள எந்தநாட்டிடமும் உதவிபெறும் உரித்துடைய வர்கள் நாங்கள் என்பது யாவரும் நன்கு அறிந்ததே.

பேச்சுவார்த்தையின் அடுத்தடுத்த கட்டங்கள் தொடர்பாக அவ்வப்போது தீர்மானிக்கப்படும்.

மேற்கண்ட விதிமுறைகள் நிபந்தனைகளல்ல. கல கலப்பாகவும், பல காலமாகவும் பேச்சுவார்த்தையை நடத்திக் கொண்டிருக்கவே என்பதை யாவரும் உணர்வீர்களாக.

---

## எதிர்க்கட்சி ஒத்துழைக்க வேண்டும்

### ரணில் அவசர கோரிக்கை

தற்போதைய நிலையில் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியாகவோ, அல்லது பிரதமராகவோ இருந்திருந்தால் என்ன பேசுவார்? கற்பனை செய்து பார்ப்போமா?

அரசியல் தீர்வு காணவேண்டும் என்பது தான் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் கொள்கை. பொது ஜன முன்னணியிடம் உருப்படியான கொள்கை எதுவுமே இல்லை.

முல்லைத்தீவில் என்ன நடந்தது என்று கேட்கிறார்கள். நடக்கக்கூடாதது எதுவும் அங்கு நடந்துவிடவில்லை. யுத்தம் நடக்கும் ஒரு நாட்டில் என்ன நடக்குமோ அதுதான் நடந்திருக்கிறது.

விபரங்களை வெளியிடுமாறு எதிர்க்கட்சியும், அதற்கு துணைபோகும் சில பத்திரிகை திறுவனங்களும் பொறுப்புணர்வு இல்லாமல் கோரிக்கை விடுக்கின்றன.

சிறீலங்கா சுதந்திர கட்சியின் காலத்தில் தான் யுத்தம் ஆரம்பித்தது. ஆரம்பித்து வைத்தவர்கள் அவர்கள். நடத்திக் கொண்டிருப்பவர்கள் நாங்கள். எதிர்க்கட்சி இந்த மாபெரும் உண்மையை மக்களிடம் இருந்து மறைக்கப் பார்க்கிறது.

தேசியப் பிரச்சனைகளில் ஒத்துழைக்க மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் கேட்கத் தேவையில்லை. நாட்டு நலனில் அக்கறையிருந்தால் அவர்களே முன்வந்து யோசனை சொல்லலாம். ஏன் சொல்ல மறுக்கிறார்கள்?

தேசியப் பிரச்சனைகளில் குளிர்காய்ந்து கொள்ள விரும்ப வேண்டாம் என்று எதிர்க்கட்சியினருக்கு நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

முல்லைத்தீவில் ஏற்பட்ட இழப்புக்களை நாம் கவனமாக கணக்கெடுத்து வருகிறோம். அங்கே ஒன்றுமில்லை, யாரையும் காணவில்லை, என்ன நடந்தது? என்று கேட்கிறது எதிர்க்கட்சி. நாமும் அதைத்தான் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். நமக்கும்தான் தெரியவில்லை. அதற்காக நாம் என்ன எதிர்க்கட்சி மீதா குற்றம் சாட்டுகிறோம்?

எனவே-நாட்டின் நலன் கருதி பொறுமையாக இருக்குமாறு எதிர்க்கட்சியினருக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

நாம் யுத்தத்துக்கு முடிவு கண்டே தீருவோம். எப்போது முடிவு காண்பீர்கள்? என்று எதிர்க்கட்சியினர் கேட்பது வேடிக்கையாகவும், வினோதமாகவும் இருக்கிறது. ஏனென்றால் அதற்கு விடை தெரிந்தால் நாமே சொல்லியிருப்போம் என்ற உண்மைகூட எதிர்க்கட்சிக்கு தெரியவில்லை.

Regd. as a News Paper at the G.P.O.(QD/24/NEWS/96)

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வன்ன நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

# புதுமையான கமராக் காரர்கள்

இவ்வாரம் 20ம் பக்க விசேஷம் வித்தியாசமான படப்பிடிப்புக்கள்.

கமராவும் கற்பனைத் திறனும் இருந்தால்போதும் கைக்குக்கிடைக்கும் பொருட்களைவைத்தே வித்தியாசம் காட்டிவிடலாம்.

இங்குள்ள சில படங்கள் அதற்கு உதாரணங்கள்.

ஒரு வித்தியாசமாக இருக்கட்டுமேன் என்று வியக்கக்கூடிய சில புகைப்படங்களையும் திரட்டித் தந்திருக்கிறார் லியோடெ.

ஸ்ரீ கல்யாணி ஜீவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11
323657



## தித்திக்காத தீ

தபால்பெட்டியில் தீப்பற்றிக்கொண்டதோ. குறித்த முகவரிக்கு செல்லுமுன்னரே கடிதத்தில் உள்ள முழு வரிகளையும் தீ தின்னத் தொடங்கியதோ? என்றெல்லாம் நினைக்க வேண்டாம்.

எரிந்துகொண்டிருப்பது தபால் பெட்டியல்ல. தீ விபத்து ஏற்பட்டுவிட்டால் சத்தம் போட்டு உஷார்படுத்தும் கருவிதான் எரிந்து கொண்டிருக்கிறது.


பாரிய கட்டிடங்களில் மட்டுமல்ல, வசதியான வீடுகளிலும் இந்த 'தீ எச்சரிக்கை அலாரம்' வைத்திருப்பார்கள்.

தீ விபத்து ஏற்பட்டால் இந்தக் கருவி எச்சரிக்கை கொடுத்து தட்டி எழுப்பிவிடும். அதனால் தீ விபத்தில் சிக்க நேருமோ என்ற பயமே இல்லாமல் இருக்கலாம். ➡

ஆனால், தீ விபத்து எச்சரிக்கை கருவிக்கே சோதனை வந்தால் யார் எச்சரிக்கை விடுப்பது?

நாலுபேருக்கு உபகாரம் செய்தேன் எனக்கு யாரும் உதவவரவில்லையே என்று நொடித்துப்போன சில நல்ல மனிதர்கள் கவலைப்படுவார்களே: அவர்களின் நிலைதான் இந்த தீப்பிடித்த தீ விபத்து எச்சரிக்கைக் கருவிக்கும்!

## பழவதை




எப்படி இறுக்கியும் கும்மென்று நிற்கிறது பாருங்கள். ஆச்சரியமாக இருக்கிறதல்லவா. ⬆

ஜெர்மன் புகைப்படப்பிடிப்பாளர் ஒருவருக்குத்தான் இந்த வாழைப்பழத்தை வதைத்துப் பார்க்கும் ஆசை ஏற்பட்டது.

"மனித வதை மட்டுமல்ல, ஒரு பழம் வதைபடுவதைக் கூட தாங்கமுடியாதவர்கள் உங்களில் எத்தனை பேர்?" என்ற கேள்வியோடு இப்புகைப்படம் ஜெர்மன் பத்திரிகை ஒன்றில் பிரசுரமானது.

பழாபிமானிகள் பலர் மடல் மடலாக தங்கள் கண்ணீரைக் கொட்டி எழுதினார்களாம். மடல் எழுதியவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் பெண்கள். வாழைப்பழம் மீது அத்தனை அபிமானமா ஜெர்மன் மக்களுக்கு? வியப்புத்தானே. தம்நாட்டில் மனித வதைகூட சாதாரண விஷயமாகிவிட்டது. தாங்கள் எதிலும் முன்னேற்றம் தான்!



## கரைக்குவந்த அதிசயம்

⬆ கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை கடற்கரையில் 'கிளிக்' செய்யப்பட்ட காட்சி இது.

15 அடி நீளமான இராட்சத சுறா இனமீன் ஒன்று கரை ஒதுங்கியது. விஷயம் பரவி கல்முனைக் கடற்கரையில் பெரும் கூட்டமே திரண்டுவிட்டது.

பிரபல பிரமுர்களோடு படமெடுத்துக் கொள்வது போல அதிசய சுறாஇன மீனுடன் நின்றும். இருந்தும் படமெடுத்துக்கொள்ள சரியான போட்டி.

(பட உதவி-காரைதீவு நிருபர்)

## திடீர் மரியாதை



எட்டித் தலைநீட்டி, 'என்ன புகைப்படமா எடுக்கிறீர்கள்?' என்பது போன்ற தோரணையில் தெரிவது தீக்கோழி.

தீக்கோழிக்கு பலமான கால்கள். ஒரு அடிவிட்டால் போதும் நாம் சுருண்டுபோவோம். அதுதான் ஜாக்கிரதையாக கூண்டில் வைத்திருக்கிறார்கள். படமெடுக்க என்றே தினமும் பலர் கமராவோடு செல்கிறார்கள்.

சமீபத்தில்தான் இந்தத் தீக்கோழியை பிடித்துவந்து மிருகக்காட்சி சாலையில் வைத்தனர். தனக்கு ஏற்பட்டுள்ள திடீர் மரியாதையைக் கண்டு தீக்கோழியாருக்கு ஆச்சரியம். இலண்டனில் உள்ள மிருகக்காட்சிச் சாலையில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.



## சுவையான ஆடை

⬅ ஆடைகள் விதவிதமாக இருந்தாலும், படத்தில் அழகி அணிந்திருப்பது படு வித்தியாசமான ஆடை.

அமெரிக்காவில் உள்ள கமராக்காரர் ஒருவருக்கு இயற்கையாகவே அழகான பெண்ணை இயற்கையான ஆடையால் அலங்கரித்துப்பார்க்கும் ஆசை வந்தது.

ஆப்பிள், தக்காளி, வாழைப்பழம் என்று பலரகப்பழங்களால் பொன்மேனிக்கு ஆடை கொடுத்துவிட்டார். இந்த ஆடையில் உள்ள ஒரே ஒரு ஆபத்து யாதெனில், அருகில் உள்ள யாருக்காவது பசி ஏற்பட்டுவிட்டால்தான் நிலவரம் ஏடாகூடமாகிவிடும். பழங்களைக் கண்டால் பசி வரத்தானே செய்யும்!

எந்த ஆடையும் சுமையானதுதான். இந்த ஆடை சுவையானது.